பொன்னம்மா.சு

# பிரித்தானிய சக்ராதிபத்தியச்
# சரித்திரச் சுருக்கம்.

ஆக்கியோன் :
மயிலிட்டி,—சி. சுவாமிநாதன், B. A.,
சைவாசிரியகலாசாலை, திருநெல்வேலி.

சுன்னாகம்
தனலட்சுமி புத்தகசாலையாரால்
வெளியிடப்பட்டது.

---

அச்சிடும் உரிமை
ஆசிரியருக்கே உரியது.

1930. விலை ரூபா 1-00.

SECOND EDITION
*1930.*
*T. M. PRESS, CHUNNAKAM*

# பதிப்புரை.

பிரித்தானிய சக்ராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம் எனப் பெயரிய இந்நூல் தற்போது திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை அதிபராயிருக்கும், மயிலிட்டி, ஸ்ரீமாந்: சி. சுவாமிநாதன், B.A. அவர்களால் இயற்றப்பட்டு, 1925ம் அண்டில் ஆசிரியர் திரு: மா. பீதாம்பரம்பிள்ளை அவர்களாற் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளது.

அச்சிட்ட பிரதிகள் செலவாயினமையையும், உயர்தரவகுப்பிற் பயிலும் மாணவர்களுக்கு அவசியம் வேண்டியிருந்தமையையுங் கருதி, ஆசிரியரவர்கள் மீளவும் இதனை அச்சிட்டு வெளிப்படுத்துமாறு எமக்குதவி ஊக்கப்படுத்தினார்கள். அங்ஙனமே யானும் மாணாக்கர்களுக்கு உபயோகப்படும்படி அச்சிட்டு இரண்டாம்பதிப்பாக வெளிப்படுத்தியுள்ளேன். கைம்மாறு கருதாது எமக்குதவிய ஆசிரியரவர்களது பெருந்தகைமையும், ஒப்புயர்வற்ற அறிவாற்றலுந் தியாக சிந்தையும் எம்மாலும் பிறராலும் போற்றப்படத் தக்கனவேயாம்.

இதனை அச்சிடுங்கால் உடனிருந்து பரிசோதனை செய்தும், ஒப்புநோக்கியும் உதவிபுரிந்த அத்தியந்த நண்பரும் கந்தரோடை ஆங்கிலகலாசாலை ஆசிரியரும், ஸ்ரீமத்: அ. குமாரசாமிப் புலவரவர்கள் சேட்டபுத்திரருமாகிய ஸ்ரீமாந்: கு. அம்பலவாணபிள்ளையவர்களுக்கும், எமது மருகரும் கந்தரோடைச் சைவவித்தியாசாலை ஆசிரியருமாகிய த. கந்தையபிள்ளையவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி கூறுகின்றோம்.

சுக்கில௵ மாசிமீ
சுன்னாகம், } தென்மயிலை,—நா. பொன்னையன்.

# மதிப்புரை.

## உயர்திரு விபுலானந்த சுவாமிகள் எழுதியது.

"நெல்லு முயிரன்றே நீருமுயி ரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்"

என ஆன்றோர் கூறியபடி மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜோர்ஜ் சக்கரவர்த்தி மகிபாலரே தமது ஆணை நடக்கும் பரிதிமறையாப் பரந்த நாடனைத்தினுக்கும் உயிரென விளங்குகின்றார்.

மலர்தலை உலகினுக்கு உயிரெனத் திகழும் மன்னர் பெருமானது செங்கோற் சிறப்பையும் வரன்முறையையும் அவரது முன்னோராகிக்

குடதிசை யாளுங் கொற்றவர் தம்முள்
அடலரிக் கொடியுடை யாங்கில மன்னர்
"அறனு மறனு மாற்றலு மவர்தம்
பழவிறன் மூதூர்ப் பண்புமேம் படுதலு
மொடியா வின்பத் தவருறை நாட்டுக்
குடியின் செல்வமுங் கூழின் பெருக்கும்"

என்றின்னன பலவாய பொருட்டுறைகளையு மாராய்ந்துணர்வது அகன்மதியாளர்க் கின்றியமையாதது. இவற்றையெல்லாந் தொகுத்து இளமாணவரு மெளிதிலுணரத்தக்க தெள்ளிய தமிழ் நடையில் எழுதித்தந்த புலமைமிக்க திருவாளர் சுவாமிநாத போதகாசிரியருக்குத் தமிழுலகம் கடப்பாடு பூண்டுள்ளது.

முன்னாளில் தலபுராணம் பாடினோர் ஒரோவொரு நகரத்தினையோ, நாட்டினையோ, வடவேங்கடந் தென்குமரி யெல்லையினுட் கிடந்த தமிழுலகத்தினையோ, பொன்னவிர் மலைக்கும் கன்னி நன்முனைக்கும் இடையிற் கிடந்த நாவலந்தீவினையோ, கதைநிகழு மிடமாகக் கொண்டனர். பிரித்தானிய பேரரசின் ஆளுகைக்குட்பட்ட தேசங்களின் சரித்திரத்தைக் கூறப்புகுந்த இந்நூல், முதன்மைபற்றியும சார்பு பற்றியும், வடதுருவ தென்துருவ வெல்லையினுட் கிடந்த நிலவுலகனைத்தினையுங் கதைநிகழ்ச்சி யிடமாகக் கொண்டுள்ளது. இந்நிலவுலகத்திலே ஐம்பத்தாறு என்னும் எல்லையை அணவிய தனியரசுத் தேயங்களுள்ளன. பிரித்தானிய பேரரசுக்கும் ஏனைய தேயங்களுக்கு மிடையிலேற்பட்டுள்ள தொடர்பினை யுணர்ந்துகொள்வாருக்கு உபயோகமாகும் பொருட்டுப் பூமண்டல புராணமெனப் போற்றத்தக்க விரிந்த இதிகாச நூலொன்றினை ஆக்கித்தருதல் இந்நூலாசிரியர் கடனெனக் கூறி, அப் பெற்றிய நூலை முற்றுவிக்கும் பொருட்டு இறைவன் இந்நூலாசிரியருக்குத் தீர்க்காயுளையும் நோயற்ற வாழ்வையும் நிரம்பவுதவி யருள்புரிவானாகவென வாழ்த்துகின்றாம்.

ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமம்,
திருக்கோணமாமலை.

விபுலாநந்தர்.

Ponnammal Suppar.
Ramanathan Training School.
Maruthanamadam.

# பொருளடக்கம்.
## (Contents)

---

### முதலாம்பாகம்.
### PART I.


பக்கம்.

I. பூர்வகாலம் .... .... .... 1—26
(The Early Period)

PART II.

I. சக்ராதிபத்திய ஆரம்பகாலம் .... 27—40
(Period of Training)

II. சக்ராதிபத்தியக் குடியேற்றகாலம் 41—56
(Period of Colonization by Settlement)

III. சக்ராதிபத்திய வெற்றிக்காலம் 57—108
(The Century of War and Conquest)

IV. சக்ராதிபத்திய வளர்ச்சிக்காலம் 109—152
(Period of Development)


---

# பிரித்தானிய சக்ராதிபத்தியச் சரித்திரச் சுருக்கம்.

(முதலாம்பாகம்)

## பூர்வகாலம்.

**PART I.**

**A SUMMARY**
**of the**
**Early History of Great Britain**
**(55 B. C.—1485 A. D.)**

# பிரித்தானிய சக்ராதிபத்தியச்
## சரித்திரச் சுருக்கம்

---

## பூர்வகாலம்

—:o:—

பூர்வகாலத்தில் சிற்றரசர் நாடாயிருந்த பிரித்தானியா இப்பொழுது பூமியின் ஐந்திலொருபாகமெனத்தக்க ஆதவன் அஸ்தமியா அளப்பில மேற்பரப்பைத் தனதாணைக்குள் ஏகாக்ராதிபத்திய நாடாக்கிச் செங்கோல் செலுத்தாநிற்கின்றது. ஐரோப்பாக்கண்டத்தின் இருபதிலொரு பாகத்தைத்தானும் அடக்கக்கூடிய மேற்பரப்பில்லாத பிரித்தானியா, மேற்படி மகாசக்ராதிபத்தியத்தை ஒருதனிக்குடைக்கீழ் ஆளுந்திறனை எப்படி, எவ்வெக்காலத்தில், அடைந்ததென்பனவே இந்நூலின் பிரதான ஆராய்ச்சியாகும்; எனினும், பிரித்தானிய சக்ராதிபத்திய ஸ்தாபன ஆரம்பகாலம் கிறிஸ்துவுக்குப்பின் பதினாறும் நூற்றாண்டின் (1500-1600) முற்பகுதியாதலால் அக்காலத்துக்கு முன் பிரித்தானியா எந்நிலையிலிருந்ததென்பதையும், பண்டைக்காலத்துப் பிரித்தானியரும் அவர் பின் சந்ததியாரும் எவ்விதமாய் வசித்தனர், அரசு முறை செலுத்தினர், எம்மதக்கொள்கைகளைக் கையாடினர், எப்படி முன்னேற்றத்துக்கு வந்தனர், என்னும் இன்னோரன்ன விருத்தாந்தங்களையும் ஆங்கிலமறியாத தமிழ் மாணவரும் பயனடையும்படி பொதுவிபரமாய்க் கூறுதல் இந்நூலுக்கு மிகையாகாது; ஆத

லால் பூர்வகாலம் எனப் பெயர்பூண்ட ஒரு சிறுபகுதியை ஈண்டுச் சேர்க்கலானேம்.

**பூர்வ பிரித்தானியர்**

முன்னொரு காலத்திலே இங்கிலந்து தேசம் பிரித்தானியா அல்பியன் (Britania Albion) என வழங்கப்பட்டு வந்தது. அக்காலத்திலே இங்கிலந்து என்ற தேசமாவது ஆங்கிலேயர்என்ற சாதியாவது இருந்ததில்லை; ஆகவே "இங்கிலந்து" "ஆங்கிலேயர்" என்பன பிற்காலத்திலே ஏற்பட்ட நாமங்களாகும். ஆங்கிலேயரின் முன்னோராகிய பிரித்தானியர் அக்காலத்திலேயிருந்த கிரேக்கரை அல்லது உரோமரைப்போன்ற ஒரு சீர் திருந்திய சாதியார் அல்லர். செம்பு, ஈயம் தகரம் முதலியவைகளால் கத்தி ஈட்டி முதலிய ஆயுதங்கள் செய்யவும், மிருகங்களின் தோலைக்கொண்டு வள்ளங்கள் உண்டுபண்ணவும், அழுத்தமில்லாத பட்பாத்திரங்களை வனையவும் பழகியிருந்தார்கள். உருவத்தில் உயர்ந்தவர்களும் அழகுவாய்ந்தவர்களுமெனலாம். ஆனல் இயற்கையழகு போதாதெனப்போலும் பச்சைமையால், தங்கள் அவயவங்களிற் பலபாகங்களிலும் நாமந் தீட்டிச் செயற்கையழகையும் சம்பாதிக்குங் குணமுடையராயுமிருந்தனர். இவ்வழக்கத்தை இன்றும் பிரித்தானிய இராணுவத்தாருள் இலைமறைகாய்போற் காணலாம். மேலும் இப்பூர்வ பிரித்தானியரின் பின் சந்ததியாரே இன்றைக்கும் உவேல்ஸ் (Wales) மாகாணத்திலும் அயர்லந்திலும் பெரும்பான்மையும் வசிக்கின்றனர். இவர்கள் பேசும் பாஷைகளும் வேறு, ஆங்கிலமும் வேறு; இவர்களுக்கும் ஆங்கிலேயருக்குமிடையிற் சிற்சில அமையங்களிற் சாதிவித்தியாசம் பாராட்டவும் நேரிடுகின்றது. அவ்வித்தியாசம் அயர்லாந்திலுள்ள சில கட்சியாரில் சுயராட்சிய விஷயமாகப் பெரும்பாலுங் காணப்பட்டது.

பூர்வ பிரித்தானியாவும் பின்னர்ச் சிலகாலம் இங்கிலந்தும் தனியரசுச் சிலாக்கியம் பெற்றில; பிரித்தானியா நெடுங்காலமாகப் பல சிற்றரசர் நிறைந்த ஓர் நாடாகவேயிருந்தது. இச் சிற்றரசர் எல்லாரும் ஒருவர்மீதொருவர் அழுக்காறுடையராயும், நித்தியசண்டை புரிபவராயுமிருந்தனர். இவர்கள் குதிரைபூட்டிய இரதமீதிவர்ந்து சென்று இரதத்தை நினைத்த நிமிஷம் சீக்கிரத்தில் நிறுத்திப் பகைவரைத்தாக்கி மறுபடியும் பொருக்கென இரதத்திவர்ந்து செல்லும் பவனியும், வீரதீரமும், சுறுசுறுப்பும் சரித்திரகாரரால் மிகவும் வியந்து பேசப்பட்டிருக்கின்றன. சந்திர சூரியர், வான சோதிகள், அக்கினி, அப்பு, காடு, சிந்தூரமரச் சோலைகள், சர்ப்பம், விக்கிரகம், குருவிச்சை முதலிய இயற்கை அமைப்பிற் சிறந்த விநோதப்பொருள்கள் தான் இவர்கள் வணங்கிய தெய்வங்களாகும். பிரேதங்களைத் தகனஞ்செய்யும் வழக்கமும், மறுபிறப்பில் விசுவாசமும் இவர்களுட் காணப்பட்டன. இவர்களின் சமயாசாரியரே இவர்களுக்குப் போதகாசிரியராயும், நியாயதுரந்தராயும், நீதியஸ்தராயும் விளங்கினர்.

சிந்தூரமரத்தினின்றும் குருவிச்சையை வெட்டியெடுக்கும் வழக்கம் இவர்களுக்கிடையில் ஓர் பெரிய பரிசுத்த கிரியையாயிருந்தது. குருவிச்சையை வெட்டமுன் இரண்டு எருதுகளைக் கொம்புகளால் அக்குருவிச்சையிருக்கும் மரத்தில் மாட்டிவிடுவர்; அதன்பின்னர் சுத்த வெண்ணிற அங்கிதரித்த சமயகுரு ஒருவர் அம்மரத்திலேறிப் பொற்கத்திகொண்டு அக்குருவிச்சையை வெட்டியெடுத்துக் கீழேநிற்கும் இன்னொரு குருவினிடங் கொடுப்பர்: பின்னர் அவ்விரு எருதுகளும் பலியிடப்படும். குருவிச்சையிலிருக்கும் பழங்கள் பின்னர் எடுக்கப்பட்டு அருமருந்துகளாக உபயோகிக்கப்படும்.

கிறிஸ்து பிறக்க 55 வருஷங்களுக்குமுன் யூலியஸ் சீசர் (Julius Caeser) என்னும் உரோமைச் சேனபதி பிரான்சு நாடு முழுவதையும் பிடித்துப் பிரித்தானியாவையும் பிடிக்கப் பிரயத்தனஞ்செய்தனர்; ஆனல் அவரும் அவரது சைநியங்களும் பலமுறையும் பிரித்தானியர்களால் துரத்தப்பட்டு, ஈற்றில் சில சமாதான ஒழுங்குகள் செய்யப்பட்டபின், தம்நாடு நோக்கிச் சென்றனர்; சீசர் பிரித்தானியரைத் தாங்கள் நினைத்தபிரகாரம் தோற்கடிக்கவில்லையென்ற அபிமானத்தால், அடுத்தவருடம் அநேக கப்பல்களுடனும், பெரிய சைநியங்களுடனும் வந்திறங்கிப் பல இடங்களிலும் யுத்தம் புரிந்தனர். பிரித்தானியரும் தங்களுடைய வாயுவேகமான இரதங்களிற் சென்று உரோமரைத்தாக்கிக் கலங்கச்செய்தனர். கடைசியாய்த் தங்களுக்கிடையிலிருந்த பொருமை காரணமாகப் பிரித்தானியர் ஒருவரோடொருவர் பகைசாதிக்க, யூலியஸ் சீசர் அவர்களை இலகுவில் வென்று சமாதான உடன்படிக்கையுஞ் செய்துகொண்டு தம்மூரேகினர். ஆனல் கி. பி. 43-ம் ஆண்டில் உரோமர் மறுபடியும் பிரித்தானியாவுக்கு வந்து அந்நாட்டைத் தம்நாடாக்க வேண்டிய முயற்சிகள் செய்து 78-ம் ஆண்டளவில் பிரித்தானியாவின் அநேக பாகங்களையும் உவேல்ஸையும் தமதாளுகைக்குள்ளாக்கி வெற்றியை முடித்தனர். இந்தவிதமாக உரோமர் ஏறக்குறைய 300 வருஷங்களுக்குப் பிரித்தானியாவை ஆளுகைசெய்தனர். இவர்கள் காலத்திலே நகரங்களும், வீடுவாயில்களும், கடைகளும், வீதிகளும், நாடகசாலைகளும், பகிரங்கஸ்தான சாலைகளும், ஆலயங்களும் பெரும் பிரசித்தமான வியாபாரப் போக்குவரவுகளும், உரோமர் மநுமுறைகளும், அரசியல் முறைகளும் ஸ்தாபிக்கப்பெற்று நாகரீகமும் மேம்பட்டு

உரோமர்காலம் கி. மு. 55- கி. பி. 410

வளர்ந்தது. நாடுகள் தோறும் பெருவீதிகள் திறக்கப்பட்டும், பள்ளநிலங்களெல்லாம் மேவப்பட்டும், காடுகளெல்லாம் வெட்டப்பட்டு விளை நிலங்களாக்கப்பட்டும், வேண்டிய இடங்களிலெல்லாம் சைநியங்கள் தங்குவதற்கு அரண்மனைகள் வகுக்கப்பட்டும், உரோமரது இராச்சிய பரிபாலனஞ் சிறந்தோங்கி வளர்வதாயிற்று. உரோமரால் திறக்கப்பட்ட வீதிகளும், அவர்கள் காலத்தில் வழங்கிய நாணயங்களும் இன்றைக்கும் இங்கிலந்திற் காணத்தக்கனவாயிருக்கின்றன. இவர்கள் காலத்திலேயே கிறீஸ்துமதமும் முதன் முதல் இங்கு கொண்டுவரப்பட்டது. பிரித்தானியர் உரோமரிடமிருந்து கமத்தொழிலையும் வியாபாரமுறைகளையும் நன்கு கற்றதுமன்றி அவர்கள் தேசத்திலிருந்து வந்த கிறிஸ்துமதத்தையுந் தழுவத்தொடங்கினர். ஆனல் ஐந்தாம் நூற்ருண்டளவில் (கி. பி. 400) உரோமைச் சக்ராதிபத்தியம் நிலைகுலையத்தொடங்க உரோமைச்சைநியங்களெல்லாம் பிரித்தானிய நாட்டைவிட்டு ரோமாபுரிக்குச் சென்றன. செல்லுதலும் உரோமரின் இராச்சிய பரிபாலனமும் பிரித்தானியாவில் முடிவெய்தியது. ஆனல் பிரித்தானியர் மறுபடியும் ஆளுகையிற் கையிட்டனர்.

ஆங்கிலேயர் குடியேற்றம். 449-755.

மூந்நூறு வருடகாலம் உரோமரின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட பிரித்தானியர் (ஏறக்குறைய 150 வருடத்துக்கு ஆங்கிலேயர் ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட தற்கால இந்தியரைப்போலப்) போர்த்தொழிலையும் துரைத்தன முறைகளையும் மறந்தவராயும் வலிமைகுன்றி ஆண்மை இழந்தவராயும், தங்களைத் தாமே பாதுகாக்கவோ ஆளவோ சக்தியற்றவராயும் போயினர். இப்படியிருக்குங் காலத்தில் அயற்பாகங்களில் வசித்த ஸ்கோற்

றியரும் பிக்தியரும் (Picts) ஸாக்ஷனியரும் (Saxons) பிரித் தானியாவின் துறைமுகங்களையடைந்து கொள்ளையடித்துச் செல்வாராயினர். இத்திருடரினின்றும் நாட்டைப் பாது காக்குந் திறனற்ற பிரித்தானியர் ஸ்கொற்றியராலும் பிக் தியராலும் உண்டாய கொடுஞ் செயல்களைச் சகிக்கமாட்டா தவராய் யூற்ஸ் (Jutes) சாதியாரைத் தங்களுக்கு உதவிசெய் யுமாறு வேண்டினரென்றும், அவ்வுதவிக்குக் கைமாறுகப் பிரித்தானியர் யூற்ஸ்சாதியாருக்குத் தம்நாட்டில் நிலங்கொ டுத்துக் குடியேற்றினரென்றும் ஓர் ஐதிகமுண்டு. உரோ மர் காலத்திலும் ஜேர்மனியிலிருந்தும், ஜேர்மனிக்கு வட பாகங்களிலிருந்தும், பல கடற்றிருடர்கள் பிரித்தானியாவுக் குக் கொள்ளையடிக்கும் நோக்கமாகப் பலமுறையும் வந்து திரும்பினர். ஆகவே உரோமர் பிரித்தானியாவை விட்டகல, நெய்க்குடமுடைந்தது நாய்க்கு வேட்டையானுற்போல ஜேர்மனியிலிருந்துங் கடலேறிக் கொள்ளையடிக்கும் பலசா தியாருக்கும் பிரித்தானியா ஓர் வேட்டைக்களமாயது. அவ் விதம் ஜேர்மனியிலிருந்து வந்த சாதியார் ஸாக்ஷனியர் (Saxons) ஆங்கிலர் (Angles) என இருவகுப்பினராவர்; சில காலஞ் செல்ல, அரசியற் சம்பந்தங்களாலும் விவாகக் கலப் புக்களாலும், மேற்சொல்லிய இருசாதியாரும் ஆங்கிலோ (ஸாக்ஷனியர் Anglo Saxons) எனப் பொதுநாமமும் பூண்டனர். ஆனுல் ஆங்கிலரே அக்காலத்தில் பிரித்தானி யாவின் அநேக பாகங்களைப் பிடித்துத் தமதாட்சிக்குள் ளாக்கினராதலால், பிரித்தானியாவுக்குத் தங்கள் சாதி சம்பந்தமான நாமஞ்சூட்டி ஆங்கிலநாடு (Angle land) அல் லது இங்கிலந்து என இன்றும் அழைக்கப்படுவதற்குக் கார ணராயினர். காலகதியில் ஆதிபிரித்தானியரும், யூற்ஸ் சாதி யாரும், ஸாக்ஷனியரும், ஆங்கிலரும், ஆங்கிலருக்குப் பின் வந்த டேனியர் நோர்மனியர் முதலியோரும், அரசியற்

கலப்பாலும் விவாகசம்பந்தங்களாலும் ஒருங்குதிரண்டு ஆங்கிலேயர் அல்லது இங்கிலீஷ்காரர் என்றழைக்கப்படுகிற பெருஞ் சாதியாராயினர். ஜெர்மனியிலிருந்துவந்து ஆங்கிலோஸாக்ஷனியர் பிரித்தானியாவைக் கைப்பற்ற அங்கு ஆதி பிரித்தானியராற் பேசப்பட்ட பாஷையும், உரோமர் காலத்து ஏற்பட்ட கிறிஸ்து மதமும் அழிந்தன; ஆனால் 597-ம் ஆண்டில் கிறிஸ்து மதம் மறுபடியும் உரோமையிலிருந்துங் கொண்டுவரப்பட்டது. 457-ம் ஆண்டிற்கும் 587-ம் ஆண்டிற்குமிடையில் ஜெர்மனியிலிருந்தும் வந்த வெவ்வேறு வகுப்பினரால் இங்கிலந்தில் புறம்பு புறம்பான சப்த இராச்சியங்கள் (Heptarchy) ஸ்தாபிக்கப்பட்டன. 827-ம் ஆண்டளவில் மேற்கூறிய சப்த இராச்சியங்களும் ஒருங்குதிரண்டு சக்ரவர்த்தியும் (Over king ot Bretwalda) சிற்றரசரும் (under king) என்னும் முறைமையேற்பட்டது. இதற்குக்காரணம் வடதேசத்தாராகிய (Northmen) டேனியர் படையெழுச்சியாம்.

**டேனியர் படையெழுச்சியும் குடியேற்றமும்.**

கடற் கொள்ளையிற் பிரபல்ய கியாதிபெற்ற டேனியர் இங்கிலந்து, பிரான்சு முதலிய கிறிஸ்த இராச்சியங்களைத் தமதாளுகைக்குக் கீழ்க் கொண்டுவரக் கருதி எட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலந்தொடங்கி ஏறக்குறைய 200 வருடங்கட்கு ஆங்கிலேயருடனும் வேறுசாதியாருடனுஞ் சமர் புரிந்தனர். ஆனால் மகா அல்விறெட் (Alfred the Great 871-901) எனப் பெரிய ஆங்கிலேய அரசன் காலத்தில் டேனியர் தாம் அக்காலவரையும் இங்கிலந்திற் கைப்பற்றியிருந்த நாடுகளையிழந்தும் அதி கேவலமாய்த் தோற்கடிக்கப்பட்டும், அல்விறெட்டுடன் சமாதான ஒழுங்குகள் செய்து (Treaty of

Wedmore) அவன்கீழ்ப் பிரசைகளாய் இங்கிலந்தில் அவனுற் கையளிக்கப்பட்ட சிலநாடுகளையும் பெற்றனர். இந்த டேனியர் ஆங்கில பழக்கவழக்கங்களையும் கிறிஸ்துமதத்தையுந் தழுவவும், அவரோடு விவாக சம்பந்தங்கள் செய்யவும் அவர் பாஷையைக் கற்கவும் முற்பட்டனர். டேனியரின் கலப்பினுலேயே ஆங்கிலேயருக்குக் கடற்பிரயாணப் பிரியமும் கடற்போரில் அஞ்சா நெஞ்சுபடைத்த துணிபும் பிறந்தன. மேற்சொல்லிய அல்விறெட் இராசனே ஆங்கில கடற்பட்டாளத்தை அடியிட்ட முதலரசனென்பர் சிலசரித்திரகாரர். அல்விறெட் இறந்து நூறு ஆண்டுகள் சென்றபின்னர், எதேல்றெட் டென்னும் அரசன் தன் கீழுள்ள சிற்றரசர் நாடுகளையுந் (Earldoms) தானே இராச்சியஞ் செய்யக்கருதி அவர்களோடு பகைத்தும் ஒற்றுமையீனப்பட்டும் டேனியர் படையெழுச்சியைத் தடுக்கச் சக்தியற்றவனுய் அவர்களுக்குக் கைலஞ்சங்கொடுத்துத் தனது நாட்டை விட்டுப் போகும்படி கெஞ்சிக்கேட்பானுயினுன். பரிதாபத்தையும் மதியாது மீறி டேனியர் மீண்டும் படையெடுத்துச் செல்ல, இங்கிலந்தில் ஆங்கிலேயருடன் சமாதானமாய் வாழ்ந்த டேனியரை, எதெல்றெட் அந்தரங்கமாய் ஆண் பெண் குழந்தை என்னும் பேதமின்றி நிர்மூலமாமாறு, வதைசெய்வித்தான். இதைக்கேட்ட டேனிய சக்ரவர்த்தியாகிய சுவின் (Sweyn) இங்கிலந்துக்குப் படையெடுத்துச் செல்ல ஆங்கில அரசன் நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்தனன். ஆனதனுல் இங்கிலந்தில் அப்பொழுதிருந்த பெரியோரும் அறிஞரும் (Witan) சுவினையே தமதரசனுகக் கையேற்றனர். ஆனுல் சுவின் பட்டாபிஷேகத்துக்கு முன் இறந்துவிட அவன் மகனுகிய கனூற் (Canute)றென்பானும் அவன்பின் சந்ததியாரும் இங்கிலந்தை 26 வருஷ (காலம் 1016-1042) அரசாண்டனர். கனூற் சக்ரவர்த்தி,

ஓட்டம்பிடித்த எதெல்றெட்டென்னும் ஆங்கில அரசனின் கைம்மையாகிய எம்மா (Emma) வென்னும் நோர்மனிய பெண்ணை வரித்து ஆங்கிலேயரைப் பிரீதிப்படுத்தி அனை வருக்கும் இதமாய் நடந்துவந்தான். ஆனால் 1042-ம் ஆண்டளவில் கனூற் சக்ரவர்த்தியின் சந்ததி அழிந்துவிட, அங்குள்ள அறிஞர்சபை தேசாந்தரஞ்சென்ற எதெல்றெட்டின் மகனாகிய உத்தம எட்வேட்டை (Edward the Confessor) நோர்மண்டியிலிருந்து மழைப்பித்து மறுபடியும் ஆங்கில அரசபரம்பரையை ஸ்தாபித்தது.

மறுபடியும் ஆங்கிலேயர் ஆளுகை 1042–1066

நோர்மண்டியிற் பிறந்து வளர்ந்த எட்வேட்டோ ஆங்கிலமறியானாய் நோர்மனிய பழக்க வழக்கங்களையும், அவர்கள் பாஷை, நெறி, நியாயப்பிரமாணம், சீர்திருத்தம் முதலியவற்றையுமே மேற்கொண்டு நடக்கலானான். தனது பிரதான உத்தியோகஸ்தரையும் நோர்மண்டியிலிருந்தே வருவித்தான். இவ்வாறு நடந்து, நோர்மனியர் படையெழுச்சிக்கும் இவனே காலாயினான். ஏனெனில், இவனது மித்திரனும் உறவினனுமான உவில்லியமென்னும் நோர்மனிய அரசன் இவனைச் சந்திக்கும் வண்ணம் இங்கிலந்துக்குச் சென்றவிடத்து இவன் தனக்குப்பின் இங்கிலந்தை உவில்லியமே இராச்சியஞ்செய்ய வேண்டுமென்று அவனுக்கு உறுதிமொழி கூறினனென்றும் அப்படிக் கூறியது எட்வேட்டின் நடவடிக்கைகளிலிருந்து உண்மைபோலத் தெரிகிறதென்றும் சில சரித்திரகாரர் கூறுவர்; ஆனால் தனக்குப்பின் இன்னான் அரசனாகவேண்டுமென்று வகுக்கக்கூடிய சுவ தந்திரம் எட்வேட்டுக்காவது ஏனைய பூர்வ ஆங்கில அரசருக்காவது இருக்கவில்லை. அறிஞர் சபைக்கே அரசனைத் தெரியுமுரித்துடை

யது. அந்த அறிஞர் சபையே மென்மேலும் வளர்ந்து கால கதியிற் பாராளும் மன்ற (Parliament) மாயது. அரசசபையின் வளர்ச்சியைப்பற்றியும் பாராளும் மன்றத்தைப்பற்றியும் இடையிடையே பின்னுற் கூறுவாம்.

சில போதுக் குறிப்புகள்.

மேற்சொல்லிய ஆங்கிலேயரும் டேனியரும் கிறிஸ்த வராவதற்கு முன் ஆதிபிரித்தானியரைப் போலச் சந்திர சூரியரையும் வேறும் இயற்கைப்பொருள் களையுமே தெய்வங்களாக வணங்கினர். இந்தியரைப்போல வீரசுவர்க்கத்திலும் விசுவாசமுடையராயிருந்தனர். ஆங்கில பாஷையில் இன்றைக்கும் வழங்கும் வாரப்பெயர்கள் பூர்வ ஆங்கிலேயரின் தெய்வப் பெயர்களாலேயே ஆனவை. ஐரோப்பாவின் வடபாகத்தாராகிய ஸ்கான்தநேவியரும் (Scandinavians) மேற்படி தெய்வப் பெயர்களாலேயே தங்கள் வாரப்பெயர்களையுமிட்டனர். இந்தியரினதும் மேற்சொல்லிய ஸ்காந்தநேவியர் அல்லது பூர்வ ஆங்கிலேயரினதும் தினப்பெயர்கள் ஒரே பொருளினவாயிருக்கின்றன. மேலும் ஸ்காந்தநேவியர் என்ற பதம் கந்தசாமியையும் கப்பற்படையையுங் குறிக்கும் இருசமஸ்கிருத பதங்களை யடக்கும்; இந்த நியாயங்கள் பற்றியும் வேறேதுக்கள்கொண்டும் ஆதிபிரித்தானியரும், பூர்வ ஆங்கிலேயரும், ஐரோப்பாவின் வடபாகத்தாராகிய ஸ்காந்தநேவியரும், இந்தியாவிலிருந்துஞ் சென்று ஐரோப்பாவிற் குடியேறிய பூர்வ ஆரியரென இந்துமகத்துவ (Hindu Superiority) நூலாசிரியர் கூறத் துணிவர்.

எட்வேட் இராசன் இறக்க இங்கிலந்தை ஆளக்கூடிய தக்க அரசன் ஆங்கில அரசவம்சத்தி லில்லாமையா

நோர்மனியர் வருகையும் அவர் காலமும் 1066-1154

லும், எட்வேட்டின் மகன் சிறுவனுயிருந்தபடியாலும், நோர்மனியர் படையெடுத்து இங்கிலந்தை அபகரிக்கத் துணிவரென அக்காலத்திருந்த ஆங்கிலர் ஊகித்திருந்தமையாலும், அறிஞர் சபையோர் அரசவம்சத்தானல்லாத ஹரல்ட் (Harold) என்பானை அவன் திறநோக்கி அரசனுக்கினர். சிலவருடங்கட்குமுன் இந்த ஹரல்ட், ஆங்கிலேய கால்வாயிற் கப்பல் சேதப்பட்டு, நோர்மன்டிக்கரையையடைய நேர்ந்தது; அடைதலும் அத்தேச அதிகாரி ஹரல்டைக் கைதியாக்கி மன்னன் உவில்லியமிட மனுப்பிவைத்தான். ஹரல்ட்டின் திறனையும் வலிமையையும் ஆள்அணி செல்வாக்கையுமறிந்த உவில்லியம் இங்கிலந்தைத் தனதாளுகைக்குள்ளாக்கித் தரும்படியும் அதற்குவேண்டிய ஒத்தாசை செய்யும்படியும் அன்னவனைவேண்டிப் பரிசுத்த சின்னங்களின் (Holy Relics) மேலாணையிடுவித்தும் அன்னுன் வாக்கை உறுதிப்படுத்தினன். இவ்வாறு சத்தியஞ்செய்த ஹரல்டே இங்கிலந்துக்கதிபனுய்த் தெரியப்பட்டானென்ற வதந்தி உவில்லியங்காதி னேறுதலும் உடனே தஞ்சமய கர்த்தாவாகிய போப் (Pope) அரசர்க்கு ஹரல்ட்டின் சத்திய துவேஷத்தைத் தெரிவித்தும் இங்கிலந்துக்குப் படையெடுத்துச்செல்ல அவரிடம் விடையும் ஆசீர்வாதமும் பெற்றுஞ் சகல சைநியங்களுடனும் அங்குசென்று ஹரல்டைத் தோற்கடித்துக் கொன்றும் வெற்றிமாலை சூடி அறிஞர் சபையாரால் அங்கீகரிக்கப்பெற்றும் வெற்றிகொண்ட உவில்லியம் (William the Conqueror) எனப் பரிநாமம் பூண்டும் கிரீடந் தரிக்கப்பெற்றனன். இந்த உவில்லியம் ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள நோர்வே தேசத்தினின்றுஞ் சென்று பிரான்சு தேசத்தின் வடபாகமாகிய நோர்மன்டி

யைக் கி. பி. 900 ஆண்டளவில் கொள்ளைகொண்டு தன் நாடாக்கிய ரொலோ (Rollo) என்னும் வீராதி வீரனின் ஆறுஞ் சந்ததியான். இவன் இங்கிலந்தைக் கைப்பற்றிய தும் ஆங்கிலேயர் கலகம் விளைக்காதபடி ஆங்காங்கு அரண் படுத்தப்பட்ட கோட்டைகளைக் கட்டுவித்து நோர்மனிய சைநியங்களை அங்கே வசிக்கச் செய்தான். போர்ச்சேவ கத்தினிமித்தம் நாட்டைக் கூறுகூறுகப் பிரித்து ஒவ்வோர் நோர்மனிய அதிபதியிடங்கொடுத்து அவன்கீழ்ப் பல கமக் காரரையுந், தொழிலாளரையும், அவனுக்கும்—வேண்டிய காலங்களில் தனக்கும்—போர்ச்சேவகஞ் செய்யக்கூடிய கட் டுப்பாடுகளுடன், குடிநிலங்களும், வயல்நிலங்களுங் கொடுத் துக் குடியேற்றினன்; மேற்கூறிய கிராமாதிகார ஒழுங்கு களால் (The Feudal System) ஆங்கிலேயர் நாட்டாண்மை குன்றிக் கஷ்டநிஷ்டூரங்கட்காளானர். ஆங்கிலபாஷையும் ஒளிகுன்றியது. நோர்மனியிற் பேசப்பட்ட ஓர்வித பிரான் சுப்பாஷையே (Norman French) இங்கிலந்தில் ஏறக்கு றையப் பதினைந்தாம் நூற்றுண்டுவரையும் (1400) அரச பாஷையாயும், நீதிஸ்தலங்களிலுங் கோடுகச்சேரிகளிலுந் தனவந்தர் கிருகங்களிலும் பேசப்படும் பாஷையாயும் விளங்கியது. நோர்மனியர் காலத்தில் கல்வி, சாஸ்திரம், வியாபாரம், கட்டிடச்சிறப்பு முதலியனவும் மலிந்துவிளங் கின. இவர்கள் காலத்திலும் பூர்வ ஆங்கில அரசர்காலத்தி லும் ஊர்காவற்பொருட்டுஅரண்செய்யப்பட்ட ஐந்துதுறை முகங்கள் (Cinque Ports) ஸ்தாபிக்கப்பட்டன. உவில்லிய மும், பின்மகன் இரண்டாம்உவில்லியமும், அப்பால் அடுத்த மகன்ஹென்றியும், பின் மகளின்மகன் ஸ்டிவினும் முறையே 21, 13, 35, 19வருடங்கட்கு(1066–1154)இங்கிலந்தை அர சாண்டனர். இந்நால்வருங் கலப்பில்லாத சுத்த நோர்மனிய வம்சத்தவர். முதலாவது உவில்லியம் வேட்டைப் பிரியனுய்

ஆங்கிலேயரின் அறுபது கிராமங்களை அழிந்துக் காடாக்கி மான், மரை, பன்றி முதலிய வேட்டைமிருகங்களை ஆங்குவிடுத்துக் குரூரமான வேட்டைப் பிரமாணங்களையும் வகுத்தனன். மேலும் வடபாகத்திலிருந்து கலகம்விளைத்த ஆங்கிலேயரின் ஆடு மாடு குதிரைகளைக் கொன்றும் வயல்களையும் தோட்டங்களையும் அழித்து எரித்தும் அவ்விடத்திற் பஞ்சமுண்டாகும்படியுஞ் செய்தான்.

**பிளான்ராஷேனேற் (Plantagenet) அல்லது அன்ஜூ தேசமன்னர் காலம். 1154-1485**

சுத்தநோர்மனிய வம்சத்தரசனாகிய ஸ்டீவின் காலத்திற்பின் 350 வருடகாலங்களுக்கு (1134-1485) பிளான்ராஷெனெற் அல்லது அன்ஜூ (Anjou) தேசத்ததிபன் வம்சபரம்பரையரசர் இங்கிலந்தை அரசாண்டனர். முதலாவது உவில்லியத்தின் மகளாகிய மோட் (Maud) என்பாள் அன்ஜூ தேசத்ததிபன் ஜீயோவிறே (Geoffrey) யை மணந்து பெற்ற புதல்வன் இங்கிலந்து தேசத்தரசனாகிய இரண்டாவது ஹென்றியாவான். இவனுக்குப் பிதாமாதா வழியாலும் மனைவிவழியாலுஞ் சேர்ந்த உரிமை இராச்சியங்கள் பிரான்சுதேசத்தின் பெரும் பாகத்தையடக்கும். பிரான்சில் இவனாளுகைக்குக் கீழுள்ள மாகாணங்கள் பிரான்சுதேசத்தரசனுக்குச் சொந்தமான மாகாணங்களிலு மதிகமானவை. இவன்காலத்தில் மாகாண அதிகாரிகளின் (Barons) வலிமை குறைக்கப்பட்டு நியாயப் பிரமாண ஒழுங்குகளும் நீதிவிசாரணை முறைகளும் திருத்தப்பட்டன. ஆங்கிலேயர் காலத்திருந்த அறிஞர் சபை (Witan) நோர்மனியர் காலத்தில் இராசசமஸ்தான சபையாக (Curia Regis) மாற, இவன் காலத்தி லச்சமஸ்தான சபை மேலும் திருத்தப்பட்டு நீதிவிசாரணை அதிகாரத்தை

யும் தனுதிகாரத்தையும் பெற்றது. நீதிவிசாரணை முறையில் பிரதானசமஸ்தானக் கோடொன்றும், நாடுகடோறும் நீதிபதிகள் காலத்துக்குக் காலஞ் சென்று நீதி செலுத்துவதற்கு விசாரணைக்கோடுகள் பலவும், யூரித்தீர்ப்புமுறை (Trial by Jury) யும் இவன்காலத்திலேற்பட்டன. மேலும் இவன் அயர்லந்து தேசத்துச் சிற்றரசை அடக்கித் தனக்குக்கீழாக்கினன். ஆலயங்களையுங் குருமார்களையும் நல்வழிப்படுத்துமாறு சிலபிரமாணங்களைக் ஹென்றி வகுக்க, அவற்றைப் பிரதமகுருவாகிய தோமஸ் பெக்கேற் (Thomas Becket) அங்கீகரியாதொழிய, அன்னவனைச் சிரச்சேதஞ் செய்வித்தான் ஈற்றில் அதிக மனஸ்தாபமுடையனுய் அவனது கல்லறைக்குச்சென்று தான் நினையாப்பிரகாரம் செய்த கட்டளையையிட்டு அதிக துன்பமுற்று மன்னிப்பை வேண்டிக் கடவுளைத் தியானிக்கலானுன். பெக்கெற், சனங்களால் ஒரு பெருஞ்சாது (Saint) வாகப் பிற்காலங்களிலும் போற்றப்பட்டுவந்தான். அவனது கல்லறை யாத்திரிகர்களால் தரிசிக்கப்படக்கூடிய ஒரு பரிசுத்தபாடல் பெற்ற (Canturbury Tales) தலமாயது.

இரண்டாவது ஹென்றியின் பின் அவனது மூன்றுவது புதல்வன் றிச்சேட் (1189-1199) பத்துவருஷகாலமும், அப்பால் அவன் தம்பி யோன் (1199-1216) பதினேழுரை வருஷமு மரசாண்டனர். றிச்சேட் என்பான் சிங்கத்தையொத்த தைரியசாலி (Couer de Lion) என்னும் பட்டப்பெயருமுடையன். பரிசுத்த தலமாகிய பலஸ்தீன் நாட்டைக் கிறிஸ்தவர்க்காக்குவதற்கு றிச்சேட் தானே பலஸ்தீனையடைந்து அந்நாட்டதிபனுகிய சலடின் என்னும் மகமதியனை வென்று அவனுடன் சமாதான உடன்படிக்கையுஞ் செய்து சைப்றஸ் (Cyprus) தீவையும் ஆங்கில அரசாட்சிக்குள்ளாக்கி (1191) வீடுதிரும்புவானுயினுன். திரும்

பிவருகையில் அவுஸ்திரியா தேசத்ததிபனுற் சிறைப்படுத்தப்பட்டான். புளொன்டெல் (Blondel) எனப் பெயரிய சமஸ்தான கானம்பாடி தனதரசனுகிய றிச்சேட்டைக் கண்டு பிடிக்கும்வண்ணம் அரசனறிந்த கீதமொன்றை ஐரோப்பாவிலுள்ள மறியற்கூடங்கள் தோறும் பாடிச் செல்ல ஈற்றில் ஓரிடத்தில் அரசனும் மாறுத்தரமாகப் பாடுவது கேட்டு அரசனை மீட்கும் வழிதேடினுன்.

றிச்சேட்டின் தம்பியாகிய யோன் என்பான் ஓர் பெருங் கொடுங்கோன் மன்னன்; இவன் காலத்தில் பிரான்சு தேசத்தில் இவனுக்குரிய பல மாகாணங்கள் இழக்கப்பட்டன. இவனது கொடுங்கோன்மைபற்றி நோர்மனிப பிரபுக்களு மாங்கிலேய பிரபுக்களுஞ் சகோதரர்போல ஒருங்குகூடி அரசனையெதிர்த்து அநேக சிலாக்கியங்கள் நிறைந்த ஓர் மகா சாதனத்தை (Magna Carta) அரசனிடமிருந்தும் பெற்றனர். (1215) இச்சாதனமே ஆங்கிலேய அரசரிடமிருந்தும் பிரசைகள் முதன்முறை பெற்ற மகாசுவதந்திரப் பத்திரம். இதன்கண் அநேக விஷயங்களடங்கியிருக்கின்றன. பிரதானமாக அரசன் தான் சுயாதீனமுடைய ஒருவனை (Freeman) தேசப் பிரமாணப்படியன்றி வேறெவ்விதமாகவும் கைதியாக்க, சிறைப்படுத்த, தேசாந்தரமனுப்ப, காணி பூமி இல்லாதவனுக்க, அல்லது கொல்ல உடன்படமாட்டேனென்றும், எவருக்கும் நீதியைமறுக்க, தாமசப்படுத்த, அல்லது விற்கமாட்டேனென்றும் உறுதியாக அச்சாதனத்தில் வாக்களித்திருக்கிறுன். மேலும் அச்சாதனத்தின்படி சமஸ்தான மகாசபையின் சம்மதமின்றி வரிவிதிக்கவாவது, போர்ச்சேவகத்தி னிமித்தம் (Feudal Service) சனங்களிடமிருந்து பிரதிபணம் (Seutage) அல்லது வேறெவ்வித உதவியை (Aid)ப் பெறவாவது அரசனுக்குச் சுதந்திரமில்லை.

**பாராளும் மன்றம்.**

மூன்றுவது ஹென்றி (1216-1272) யினுடைய காலத்திலேயே பாராளு மன்றம் (Parliament) எனப்பெயரிய மகாசபை ஸ்தாபனம் பெற்றது. இவன் யோனுற் கொடுக்கப்பட்ட மகாசாதனத்தைத் தானுங் கைச்சாத்திட்டு அங்கிகரித்தனன் (1225) ஆனுல் கைவசம் பணமில்லாத காலத்தில் மகாசாதன உடன்படிக்கையை மீறிக் கொடுங்கோன்மை பூண்டனன். அப்போ சைமன் டி மோன்ற் வோட் (Simion de Montfort) டென்னுந் தலைவன் மூலமாகச் சனங்களெல்லாந் திரண்டு இராச்சிய பரிபாலனத்தை ஒரு நிருவாகசபைப் (A Committee of 15) பொறுப்பில் விடும்படி கேட்டனர். இந்தவிதமாக அரசனுக்கும் பிரசைகளுக்குமிடையில் உண்டான பிணக்குகள் காரணமாகப் பாராளு மன்றம் நிறுவப்பெற்றது. அப்படி நிறுவப்பெற்ற பாராளு மன்றம் சைமன் டி மோன்ற் வோட்டாலேயே 1264-ல ஆக்கப்பட்டது. அது முற்காலத்தைய சபைகள் போலக் கிராமாதிபதிகள், கோவிலதிபதிகளை மாத்திரம் அங்கத்தினராய்க்கொள்ளாது ஒவ்வொரு நகரத்திலிருந்தும் இவ்விரண்டு நகரவாசிகளையும் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இவ்விரண்டு நைற் (Knight) பட்டவர்த்தனர்களையும் பிரதிநிதிகளாகக் கொண்டது. இந்த அரசன் காலத்தில் வெடிமருந்தும் பூதக்கண்ணுடியுங் கண்டுபிடிக்கப்பட்டன.

1ம், 2ம், 3ம் எட்வேட் அரசர் 1272–1377

1272 தொடங்கி 1377 வரைக்கும் 1ம், 2ம், 3ம் எட்வேட் அரசர் காலமாகும். முதலாம் எட்வேட் காலத்தில் (1272-1307) உவேல்ஸ் மாகாணம் பிடிக்கப்பட்டு இங்கிலந்துடன் சேர்க்கப்பட்டது. இவன் மகன், உவேல்சிற் பிறந்தபடியாலும் உவேல்ஷிய கைத்தாயால் வளர்க்கப் பட்டபடியாலும்,

உவேல்ஸ் இளவரசனென்று (Prince of wales) உவேல் ஷியரால் அங்கீகரிக்கப்பட்டான். அந்தக்காலந்தொட்டு இதுகாறும் ஆங்கிலேய அரசனின் பட்டத்துமகன் உவேல்ஸ் இளவரசன் என்று அழைக்கப்பட்டு வருகிறான். ஸ்கோத்திலந்து தேசத்தையும் முதலாம் எட்வேட்டே முதன் முதல் வெற்றிகொண்டு தனதாளுகைக்குள்ளாக்கினான். இவன்காலத்திலேயே சைமன் டி மோன்ற் வோட்டால் ஸ்தாபிக்கப்பட்ட பாராளும் மன்றம் குருமார், பிரபுக்கள், பொதுப்பிரதிநிதிகளென்ற முத்திற அங்கத்தினரோடும் முன்மாதிரியாகக் கூடியது (Model Parliament 1275). அரசிறையும் வரவுசெலவுத் திட்டமும் ஓரளவிற் பாராளும் மன்றத்தார் பொறுப்பில் வந்துவிட்டன. ஆனால் நியாயப் பிரமாணங்களை உண்டாக்க, அல்லது யுத்தம் ஆரம்பிக்க, அல்லது வேற்றரசரோடு சமாதான ஒழுங்குகள் செய்ய இன்னும் பாராளும் மன்றத்தாருக் கதிகாரம் வரவில்லை. சமாதான நீதிவான்மார் (Justices of the Peace) இவன் காலந்தொட்டே ஏற்பட்டனர். 1272-ல் விளேமிங் (Flemings) சாதியாருடன் ஓர் வியாபார உடன்படிக்கையுஞ் செய்யப்பட்டது. கண்ணடி, காற்றாடி இயந்திரங்களும் (Windmills) கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டாம் எட்வேட் காலத்தில் (1307-1327) ஸ்கொத்திலந்தை ஆங்கிலேயர் இழந்தனர். மூன்றாவது எட்வேட் 1327-1377 பல நியாயங்கள்பற்றி, பிரதானமாய் ஆங்கிலேயருக்கும் ஸ்கொற்றியருக்குமிடையில் நடந்த யுத்தத்தில் பிரான்சியர் ஸ்கொற்றியருக்கு உதவிசெய்தபடியால், பிரான்சியரோடு ஓர் மகாயுத்தத்தைத்தொடங்கி அவர்களைக் கடற்சண்டையிலும் (Battle of Sluys)தரைச்சண்டையிலும்(Battles of Crecy & Poitiers) தோற்கடித்துச் சிலமாகாணங்களைத் தனக்குச் சுயமாக்கி

னன். மேற்படி யுத்தம் மொத்தத்தில் 116 வருடங்கட்கு நடந்தது. இவன்காலத்தில் பாராளும் மன்றத்தினதிகாரம் வரவரக் கூடியது. ஏனெனில் பிரான்சிய யுத்தத்தை நடாத்துவதற்கு மேன் மேலும் பணமில்லாதானுய் அரசன் பாராளுமன்றத்தாரிடம் இரந்து கேட்பானுயினன். பணங்கொடுக்கும் பட்சத்தில் அப்பாராளும் மன்றத்தாரும் அரசனிடமிருந்து அநேக சிலாக்கியங்களைக் கைமாருகக் கேட்டுப் பெற்றனர். இவன்காலந்தொட்டே பாராளும் மன்றம் பிரபுக்கள் சபை (House of Lords) பிரதிநிதிகள் சபை House of Commons) யென இருகூருகப் பிரிக்கப்பட்டு வேறுவேருன மாளிகையிற் கூட்டங்கள் நிகழ்வதாயின. பிரபுக்கள் சபையில் அரசனுல் தெரியப்பட்ட பிரதான குருமாரும், பிரபுப் பட்டவர்த்தனரும் (Peers), மற்றச் சபையில் சனங்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளும் அங்கத்தவராயினர். 1348 க்கும் 1351 க்குமிடையில் ஓர் பெரிய கொள்ளைநோய் (Black Death) பரம்ப ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மூன்றிலொருபாகக் குடிசனங்கள் மாண்டனர். இங்கிலந்திலோ மேற்படி நோய் சரிபாதிக் குடிசனத்தைக் கொள்ளைகொண்டது.

வியாபார சமுதாயங்கள்

மேற்கூறிய மூவரசர் காலத்திலும் அதற்குமுன்னும் இங்கிலந்தின் பிரதான வியாபாரப்பொருள் கம்பளியாட்டுரோமமாகும். இந்தக் கம்பளி ரோமத்தை ஆங்கிலேயர் விளான்டேர்ஸ் (Flanders) தேசத்துக்கனுப்பிப் பெரும் பணஞ்சம்பாதித்தனர். ஆனல் தாங்களே அந்த ரோமத்தைப் பதனிட்டுக் கைப்பொருளாக்குஞ் சக்தியுடையராயிருந்தாரல்லர். கம்பளி மயிர் வியாபாரத்திலிருந்தும் அதிக லாபம் வருவதைக்கண்ட வியாபாரிகள் வியாபார சமுதா

யங்களை ஏற்படுத்த, முதலாம் எட்வேட் அந்தப்பொருளால் வரவேண்டிய அரசிறைப் பாகத்தைச் சுலபத்தில் அறவிட நோக்கங்கொண்டு குறித்த சமுதாயத்தாரே (Staple Merchants) அந்தக் கம்பளிரோமத்தைக், குறிக்கப்பட்ட பட்டினங்களில் வாங்கிப் பிறதேசத்துக் கனுப்பவேண்டுமென்ற சட்டத்தை விதித்தனன். மூன்ரும் எட்வேட்டோ விளான்டேர்ஸ் தேசத்திலிருந்தும் நெசவுகாரரை அழைப்பித்துக் கம்பளிரோமக் கைத்தொழிலை ஆங்கிலேய சனங்களுக்குக் கற்பித்து இங்கிலந்திலிருந்து பிறநாடுகளுக்குக் கம்பளிரோமம் ஏற்றுமதியாக்கப் படாதென்ருேர் சட்டத்தையுஞ் சிலகாலம் வைத்திருந்தான். ஆகவே இங்கிலந்து இவன் காலந்தொட்டு ஓர் விசேஷ கைத்தொழில் நாடாக விளங்கியது. கைத்தொழிற் சாமான்களைப் பிறதேசங்களுக்குக் கொண்டுபோய் வியாபாரஞ் செய்வதற்கும் பெரிய வர்த்தக சமுதாயங்கள் ஏற்பட்டன. 1407-ம் ஆண்டில் இவ் வர்த்தகர் நாலாம் ஹென்றியால் ஓர் பெரிய வர்த்தகசாதனமுங் கொடுக்கப்பட்டனர். காலகதியில் இவர்கள் மிகப்பெரிய தனவந்தராய் வியாபாரப் போக்குவரவை விருத்திபண்ணவும் அதற்குவேண்டிய சிலாக்கியங்களைச் சம்பாதிக்கவுந் தொடங்கிப் புதிநாய்த் தேசங்களைக் கண்டுபிடிக்கவும் அவைகளில் குடியேறவும், அந்நியநாடுகளில் வியாபாரஞ் செய்வதற்கு இடங்கோலவும், ஈற்றில் படிப்படியாகப் பிரித்தானிய சக்ராதிபத்தியத்துக்கு நாடுகளைச் சேர்க்கவும் வழிகள் கண்டுபிடித்தனர். ஆதலால் மேற்சொல்லிய வர்த்தக சம்பிரதாயிகளே (Merchant Adventurers) பிரித்தானிய சக்ராதிபத்தியத்தின் அடித்தளமாய் அல்லது அஸ்திபாரமாய் விளங்குவர்.

மூன்ருவது எட்வேட்டின் பௌத்திரன் இரண்டாம் றிச்சேட்டின் காலத்திலே (1377-1399) மானுமிச் சட்ட

முதலாவது மாலுமிச்சட்டம். The First Navigation Act.

மொன்று முதன் முதற் பிறப்பிக்கப்பட்டது. (1390) அச்சட்டப்படி இங்கிலந்திலிருந்தும் ஏற்றுமதியாகும் பொருள்கள் ஆங்கிலேய கப்பல்களிலேயன்றி வேறுசாதியாரின் கப்பல்களில் கொண்டு செல்லப்படமாட்டா. அதனால் ஆங்கிலேய கப்பற் போக்கு வரவு அதிகப்பட அநேக புதிய சுப்பல்களைச் செய்விக்கும் பிரியமும் ஆங்கில வியாபாரிமாரிற் காணப்பட்டது; அவர்களின் வியாபாரமும் நயந்து சிறந்தது. இந்த அரசன் காலத்திலேயே உவைக்கிளிவ் (Wiclif) என்னுந் திவ்விய புருஷன் அக்காலத்தைய சில கிறிஸ்துமதக் கொள்கைகளைப் பிழையெனக் கைவிடவுந் திருத்தவும், பொதுச்சனங்களாற் பேசப்படாத லத்தீன் பாஷையிலிருந்துஞ் சனங்களாற் பேசப்படுகிற பாஷைகளெவற்றிலும் இதுவரையும் மொழிபெயர்க்கப்படாத விவிலியநூலை (The Bible) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவுந் தொடங்கினன். இவனுக்குப் பிற்காலத்திலேற்பட்ட புருட்டேஸ்றன்ட் கிறிஸ்து மதம் (Protestantism) இங்கிலந்தில் முதன் முதல் இவனாலேயே அடிகோலப்பட்டதென்பர் சிலர்.

றிச்சேட், மகாசாதன (Magna Carta) ஒழுங்குகளை மதியாது நடக்கவும், தான்நினைத்த பிரகாரம் பாராளும் மன்றத்தின் அனுமதியின்றி வரிகள் விதிக்கவுந் தொடங்க இவனது சிறிய தகப்பனின் மகன் ஹென்றியென்பான் பிரான்சிலிருந்தும் படையெடுத்து வரலானான். வருதலும் ஆங்கிலேயர் அன்னவனுக்கு வேண்டிய உதவிகள்செய்து றிச்சேட்டைச் சிங்காசனத்திருந்து மிறக்கிச் சிறைச்சாலைக்கனுப்பி ஹென்றியை அரசனாக்கினர். உவைக்

நாலாம் ஹென்றி 1399-1413.

கிளிவைப் பின்பற்றி நடந்தோரையும் (Lollards) அவனது கொள்கைகளைப் போதித்துத் திரிந்தோரையும் உயிரோடேயே தீக்கிரையாக்கும்படி இந்த நாலாவது ஹென்றி ஓர் அநியாயச் சட்டத்தைப் (Statute of Heretcis) பிறப்பித்தான்.

ஐந்தாம் ஹென்றி (1413-1422)

ஐந்தாவது ஹென்றியோ மூன்றும் எட்வேட் காலத்தில் ஆரம்பித்த பிரான்சிய நூற்றுண்டியுத்தத்தை (Hundred year's War) அதிக கீர்த்தியுடன் நடாத்தி ஹார்விளே (Har fleur) என்ற கோட்டையையும் பிடித்துப் பிரான்சியரில் பதினுயிரவரை எமலோகமனுப்பியும், பதினுலாயிரவரைக் கைதிகளாக்கியும், அஷைன்கோட் (Agincourt) என்ற இடத்தில் வெற்றிமாலே சூட்டினன். 1420-ம் ஆண்டில் சமாதான உடன் படிக்கை செய்யப்பட்டு (Treaty of Troyes) பிரான்சிய அரசனின் மகளாகிய கதரிஞளை (Princess Catherine) மனைவியாகக் கொள்ளவும், அப்போ பிரான்சை அரசாண்ட இராசனின் பின் தான் பிரான்சுக்கு அரசஞகவரவும் ஐந்தாவது ஹென்றி சிலாக்கியங்களைப் பெற்ருன். நோர்மனியர் காலந் தொடங்கி அரசனதும், வியாபாரிமாரினதும், மற்றுந் தனவந்தரினதும் கப்பல்களைக் கொண்ட ஆங்கிலேய கடற்பட்டாளம் இவனது காலத்திலேயே முற்ருய் முடிக்குரிய கப்பல்களாலாக்கப்பட்டது. 1415ம் ஆண்டு தொடக்கம் லண்டன் நகரில் இராக்காலங்களில் பிரதான வீதிகடோறும் தீபமேற்றும் வழக்கமும் ஏற்பட்டது.

பிரான்சிய 'இளவரசன் (The Dauphin) 1420-ல் செய்யப்பட்ட சமாதான ஒழுங்குகளை மதியாது நடக்க

ஆறம் ஹேன்றி (1422–1461)

பின்னரும் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் யுத்தம் நிகழ்ந்தது. மேற்படி யுத்தத்தில் பிரான்சியர் தாம் இதுவரையும் இழந்த கோட்டைகளையும் நாடு நகரங்களையும் படிப்படியாய்ப் பெறலாயினர். ஆங்கிலேயர் பிரான்சில் கலேய் (Calais) என்ற நாட்டைத்தவிர ஏனைய நாடுகளையெல்லா மிழந்தனர். இப்படியெல்லாம் ஆங்கிலேயர் தோற்கவும் பிரான்சியர் வெற்றியடையவும் ஜோஆன் ஒவ் ஆர்க் (Joan of Arc) என்ற பிரான்சிய மாதே காலானுள் அவள் விவாகஞ் செய்த பதினேழுவயதுள்ள ஓர் நாட்டுப் பெண். பிரான்சிய

ஜோஆன் ஒவ் ஆர்க்

யுத்தத்தைப் பற்றிப் பலமுறை சிந்தித்தும், தானே கடவுளால் தெரியப்பட்ட சேனுபதியெனத் தன்னை மதித்தும் போர்க்கோலங் கொண்டு பிரான்சிய அரசனிடம் ஒருவாறு விடைபெற்று யுத்தகளஞ் சென்றுள். செல்லுதலும் அவளது துணிகரத்தையுந் தேசாபிமானத்தையுங் கண்ட போர்ச்சேவகரெல்லாரும் வீராவேசங் கொண்டு அன்னவளையே சேனுதிபதியாக்கி மேற்படி வெற்றியை முடித்தனர். பிரான்சிய யுத்தம் முடிவுக்குவருதலும் இங்கிலந்திலும் முடியுரிமையைப்பற்றிய ஓர் பெரிய யுத்தம் (Wars of the Roses) நிகழ்ந்தது. இந்த ஆறாம் ஹென்றியோ மூன்றும் எட்வேட்டின் நாலாவது மகனின் பிற்சந்ததியான். முடியுரிமைபற்றி யுத்தத்துக்கு முன்வந்தோன் மூன்றுவது எட்வேட்டின் மூன்றும் ஐந்தாம் குமாரரின் பிற்சந்ததிக் குரியானுவான். ஆதலால் இவன் உரிமையே அவன் உரிமையிலுங் கூடியது. ஈற்றில் இவன்சந்ததிக்கே முடியுங் கிடைத்தது. இந்தக் காலந்தொட்டுச் சனப் பிரதிநிதிகள் (Commons) நியாயப் பிரமாணங்களை எழுதி மனுப்பண்ணும் அதிகாரத்தைப் பெற்றனர்

அவர்கள் மனுப்பத்திரம் (Bills) அரசனாலும் பிரபுக்கள் சபையாராலும் அங்கீகரிக்கப் பெற்றுற் சட்டமாகும்.

மேற்கூறிய முடியுரிமை யுத்தம் அடுத்த அரசன் நாலாம் எட்வேட் காலத்திலும் பின்னரும் மேற்படி இரு கட்சியாருக்கு மிடையில் நடைபெற்றது. ஏறக்குறைய 30 வருடகாலமாக நடந்த இந்த யுத்தம் கிராமாதிகாரிகளாலும் (Barons) அரச வம்சத்தைச் சார்ந்த மாகாண அதிகாரிகளாலுமே (Dukes or Earls) ஒருவர்மீதொருவர் கொண்ட அழுக்காறு காரணமாக அதி விடாப்பிடியாக நடாத்தப்பெற்றது. இதனுல் அதிகாரி குடியானவன் (Feudal Lord & Vassal) என்ற முறையும் கிராமாதிகார ஒழுங்குகளும் (Feudal System) அழியத் தற்கால சமூக முறைகள் ஏற்பட்டன. இந்த நாலாம் எட்வேட்காலத்திலேயே முதன் முதல் அச்சியந்திரம் காக்ஸ்றன் (Caxton) என்பவனுல் ஜேர்மனியிலிருந்தும் இங்கிலந்துக்குக் கொண்டுவரப்பட்டுப் புஸ்தகங்கள் அச்சிடப்பட்டன. இவனின் பின் இவன்மகன் ஐந்தாம் எட்வேட் மூன்று மாசகாலமும் அப்பால் தம்பி மூன்றுவது றிச்சேட் இரண்டுவருடகாலமும் அரசாண்டனர்.

நாலாம்எட்வேட் (ஆதியர்1461-1485)

| நோர்மனிய அரசர் | அரசாண்ட காலம் |
|---|---|
| முதலாம் உவில்லியம் | 1066—1087 (21 ஞு) |
| இரண்டாம் உவில்லியம் | 1087—1100 (13 ஞு) |
| முதலாம் ஹெென்றி | 1100—1135 (35 ஞு) |
| ஸ்டிவின் | 1135—1154 (19 ஞு) |

## நோர்மனிய அரசபரம்பரை

(1066–1154)—88 வருடம்

**முதலாம் உவில்லியம்**

இரண்டாம் (உவில்லியம்) முதலாம்ஹேன்றி அடேலா(மகள்)

ஸ்டிவின்


(மகள்) மோட்–ஜீயோவிறே
(அன்ஜூ தேசத்து)

**இரண்டாம் ஹென்றி**
(பிளான்ராஷேனேற்)

## பிளான்ராஷெனெற் அல்லது

| அன்ஜூ தேசத்தரசர் | | அரசாண்ட காலம் |
|---|---|---|
| இரண்டாம் ஹேன்றி | | 1154—1189 (34½ வரு) |
| முதலாம் றிச்சேட் | | 1189—1199 (10 வரு) |
| யோன் | | 1199—1216 (17½ வரு) |
| மூன்றும் ஹேன்றி | | 1216—1272 (56 வரு) |
| முதலாம் எட்வேட் | | 1272—1307 (34½ வரு) |
| இரண்டாம் எட்வேட் | | 1307—1327 (19½ வரு) |
| மூன்றும் எட்வேட் | | 1327—1377 (50½ வரு) |
| இரண்டாம் றிச்சேட் | | 1377—1399 (22¼ வரு) |
| நாலாம் ஹேன்றி | (லான்காஸ்திரியர்) | 1399—1413 (13½ வரு) |
| ஐந்தாம் ஹேன்றி | ,, | 1412—1422 (09½ வரு) |
| ஆறும் ஹேன்றி | ,, | 1423—1461 (38½ வரு) |
| நாலாம் எட்வேட் | (யோக்நாட்டார்) | 1461—1483 (22 வரு) |
| ஐந்தாம் எட்வேட் | ,, | 1483 ( 3 மீ) |
| மூன்றும் றிச்சேட் | ,, | 1483—1485 ( 2 வரு) |

# பிளான்ராஷெனெற் அல்லது அன்ஜூதேச அரசர் பரம்பரை.



# பிரித்தானிய சக்ராதிபத்தியச்
## சரித்திரச் சுருக்கம்.

---

## இரண்டாம் பாகம்.
## Part II

---

## The Growth of the British Empire.

---

### சக்ராதிபத்திய ஆரம்பகாலம்
### (1500—1600)
### Period of Training.

#### கிரேக்க சக்ராதிபத்திய வீழ்ச்சி.

கிறிஸ்துவுக்குப் பின் 1453-ம் ஆண்டளவில் கிரேக்க சக்ராதிபத்தியத்தின் தலைநகராகிய கொன்ஸ்ற்ருன்றி ேநாப்பிள் (Constantinople) துருக்கியரால் (Turks) பிடிக்கப்பட்டது. அதனல் கிரேக்க சக்ராதிபத்தியமும் நிலைகுலைந்தது; ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையில் இதுகாறும் கடல்மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் நடந்துவந்த வியாபாரப் போக்குவரவுகளுந் தடைப்பட்டன. கிறிஸ்தவராகிய கிரேக்கரின் நாடுகளெல்லாம் மகமதியராகிய துருக்கியரினுளுகைக்குட்பட, கொன்ஸ்ற்ருன்றி ேநாப்பிளிலும் ஏனைய பிரதான கிரேக்க நகரங்களிலும் வசித்த கிறிஸ்தவர், மகமதியரின் அக்கிரமங்களையுங் குரூரச் செயல்களையுஞ் சகிக்கமுடியாதாராய் உரோமாபுரிக்கும் ஏனைய ஐரோப்பிய நகரங்களுக்குஞ் செல்வாராயினர். ஐரோப்பா முழுவதற்குஞ் சிரோன்மணியென விளங்கிய

கொன்ஸ்றாந்திநோப்பிள் அநேக கலைஞானிகளுக்கும் சிற்பசாஸ்திர, தத்துவ சாஸ்திர விற்பன்னருக்கும் ஓர் வாசஸ்தான நகராயும் விளங்கியது. அவர்கள் மகமதியரின் வாளுக்கும் நெருப்புக்கும் (Fire & Sword) அஞ்சித் தங்களுடைய கலைநூல்களிற் பிரதானமானவற்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு ஐரோப்பாவின் பலபாகங்கட்குஞ் சென்று அடைக்கலம் புகுந்தனர். புகுதலும் ஆங்காங்கு அவர்களின் கலைகள் பரம்பலாயின.

### வர்த்தகப் போக்குவரவுத் தடைகள்.

ஆகவே ஐரோப்பா முழுவதிலுங் கலைவிருப்பமுண்டாகி ஓர் புத்துணர்ச்சியும் நவக்கிளர்ச்சியும் Renaissance) உண்டாயின. மேலும் கீழைத்தேசங்களிலிருந்தும் ஐரோப்பியர் பெற்ற பட்டு, நவரத்தினம், வாசனைச்சரக்கு பழம் முதலிய இறக்குமதிப் பொருள்கள் துருக்கியரின் வியாபாரப் போக்குவரவுத் தடைப்பாட்டால் ஐரோப்பாவுக்குச் செல்லாதொழிய, மத்தித்தரைக்கடலில் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரஞ்செய்த கப்பற்காரரும் வர்த்தகரும் தொழில் துறையின்றி இடர்ப்படுவாராய் அகப்பட்டுக் கீழைத்தேச வியாபாரப் போக்குவரவை மறுபடியும் ஸ்தாபிக்கப் புதுவழிகளைத் தேடுவாராயினர். இவ்விதம் தேசாராய்ச்சி கடற்பாதையாராய்ச்சி முதலிய துறைகளிலேவப்பட்ட கப்பற்காரரும் வர்த்தக சம்பிரதாயிகளும் மேற்கூறிய கிரேக்க கலைஞானிகளுமே ஐரோப்பாவில் அநேக சக்ராதிபத்தியங்களை நவமாய் ஸ்தாபிக்கவும், வியாபாரம், கல்வி, சாஸ்திரம், நாகரிகமாதியவற்றை விருத்திசெய்யவுங் காரணராயினர்.

### புதிதாய்த் தேசங்களைக் கண்டறிதல்.

ஆசியாவிலிருந்தும் ஐரோப்பாவுக்குத் தரைமார்க்கமாகவுங் கடல்மார்க்கமாகவும் வியாபாரப் போக்குவரவு நடங்

சேறுவதற்கேற்பட்ட பழைய பாதைகள் துருக்கியரால் தடுக்கப்பட, கிழைத்தேசங்கட்குச் செல்வதற்குப் புதிய பாதைகளைக் கண்டுபிடிக்க முதன்முதலேவப்பட்டோர் போர்த்துக்கீசரேயாம்; தடைப்பட்ட கிழைத்தேச வியாபாரத்தை மறுபடியும் ஸ்தாபிக்கவேண்டியதன் இன்றியமையாமையும், சிலகாலங்கட்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட திசையறிகருவியும் (M's C) கிரேக்கரிடமிருந்தும் நவமாய்ப் பற்றிக்கொண்ட பூமிசாஸ்திர வானசாஸ்திர அபிப்பிராயங்களும் தேசாராய்ச்சி விஷயத்தில் ஐரோப்பியரைக் கடலேறி விஜயஞ்செய்யும்படி மிகவுமுற்சாகப்படுத்துவனவாயின. ஆகவே ஆங்கிலேய அரசனாகிய ஏழாம் ஹென்றியின் காலத்தில் அநேக ஐரோப்பிய மாலுமிகள் கடல் விஜயஞ்செய்து அநேக தேசங்களைக் கண்டுபிடித்தனர். 1486-ல் பதலமியூடையஸ் (Bartholomew Diaz) என்னும் போர்த்துக்கீசமாலுமி அத்லாந்திக் சமுத்திரவழியால் ஆபிரிக்காக் கரையையடைந்து புயல்முனை (Cape of Storms) வரைக்குஞ் சென்று மீண்டனன்; பதினொரு வருடங்களுக்குப்பின் வஸ்கோடிகாமா (Vascoda Gama) என்னும் போர்த்துக்கீச கப்பற்றலைவன் புயல்முனையைச் சுற்றிப் பிரயாணஞ்செய்து இந்தியாவுக்குச் செல்லும் ஓர் புதியவழியைக் கண்டுபிடித்தான். 1498-ல் இவனே புயல்முனைக்கு நன்னம்பிக்கை முனை (Cape of Good Hope) யென்று மங்கல நாமமிட்டவன். பூமி யுருண்டையாயிருக்க வேண்டுமென்னும் புதிய அபிப்பிராயத்தைச் சிரமேற்கொண்ட இத்தாலியநாட்டுக் கலம்பஸ் (Columbus) என்பான் அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடந்து மேற்குப்புறமாக நெடுகலும் யாத்திரைசெய்தால் கிழைத்தேசங்கட்கு வரலாமென்று துணிந்தும் உதவியின்றித் தத்தளிய நாற்றில் ஸ்பானியதேசத் தரசன், அன்னவன் நவீன கொள்கைகளை

யுந் துணிகரத்தையும் மெச்சி அவனுக்குவேண்டிய உதவி கள் செய்து அவனைக் கடல் விஜயத்தில் ஈடுபடும்படி செய் தான்; அவ்வாறு சென்ற கலம்பஸ் எழுபதுநாட் பிரயா ணத்தின் பின்னருங் கரைகாணுனுய் மலைக்கக் கப்பலிலி ருந்த ஏனைய உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் அதை ரியங்கொண்டு பிரயாணத்தை அவ்வளவில் முடித்து ஊருக்குத் திரும்பவேண்டுமென்றும், அன்றேல் கலம்ப ஸைக் கடலுள் வீசிவிட்டுத் தாம் திரும்பிச் செல்வோ மென்றும், பயமுறுத்தினுர்கள். அதைக்கேட்ட கலம்பஸ் அவர்களை மன்ருடிப் பிரயாணத்தை இன்னுஞ்சில நாட்க ளுக்கு நடாத்த உடன்பாடு செய்தான். அவ்விதம் மேலுஞ் சென்று 1492-ல் அமெரிக்காவைக் கலம்பஸ் கண்டுபிடித் தான். தானடைந்த இடம் இந்தியாவின் ஓர் பாகமாயிருக் கவேண்டுமென்றே கலம்பஸ் முதன்முத லெண்ணியிருந் தான்; ஆனுல் மறுபடியும் பலமுறை அவ்விடத்துக்குச் சென்று பலபாகங்களையுங் கண்டுபிடித்து, அந்நாடு இந்தி யாவின் பாகமன்று அமெரிக்காவே எனவறிந்தான். ஆதலாற் ருன் முதன்முதற் கண்டுபிடித்த தீவுக்கூட்டங்களை இந் தியதீவுகளென்றழைத்தது தவறென்று மேற்கிந்தியதீவுக ளெனப் புனர் நாமமிட்டனர்.

### போர்த்துக்கீசர் ஸ்பானியர் சக்ராதிபத்தியங்கள்.

மேற்கூறிய பிரகாரம் போர்த்துக்கீசரும் ஸ்பானிய ருங் கடல்விஜயஞ் செய்து தேசங்களைக் கண்டுபிடித்த னர். போர்த்துக்கீசர் பிரதானமாய் இந்தியா இலங்கையி லும், கிழக்கிந்திய தீவுகளிலுமே துறையடுத்த கரைப்பா கங்களிற் குடியேறி வர்த்தக சாலைகளையும் ஸ்தாபித்தனர். ஆனுல் அந்நாடுகளை வெற்றிகொள்ள அல்லது இராச்சிய பரிபாலனஞ்செய்ய ஆரம்பத்திற் கருதினுரல்லர்; ஆதலால்

போர்த்துக்கீசர் குடியேறிய அந்நியநாடுகள் அவர்களுடைய வியாபார நாடுகளாயிருந்தனவேயன்றி உண்மையில் இராச்சிய நாடுகளாயிருக்கவில்லை. ஸ்பானியரோ அமெரிக்காவில் மெக்சிக்கோ, (Mexico) பெரு (Peru) மாகாணங்களையும் மேற்கிந்திய தீவுகளையும் சுதேசிகளிடமிருந்தும் வெற்றிகொண்டு பிடித்துத் தாமுங் குடியேறி இராச்சிய பரிபாலனஞ் செய்தனர். ஆகவே 16-ம் நூற்றுண்டு முடிவில் கீழைத்தேசங்களிற் போர்த்துக்கீசருக்கோர் வியாபார சக்ராதிபத்தியமும் (Trading Empire) அமெரிக்காவில் ஸ்பானியருக்கோர் இராச்சிய சக்ராதிபத்தியமும் (Land Empire) உண்டாயின.

## ஆங்கிலேயர் தேசாராய்ச்சி.

மத்தித்தரைக்கடல் வியாபாரப் போக்கு வரவுகளிலீடுபடாத ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள ஆங்கிலேயரும் ஏனையசாதியாரும், கீழைத்தேச வர்த்தகத் தடைப்பாட்டாலதிக கஷ்ட நஷ்டங்களுக் காளாகாது தேசாராய்ச்சி சமுத்திரவாராய்ச்சி விஷயத்தில் ஈடுபட்டுழைக்கப் போர்த்துக்கீசர் ஸ்பானியரைப்போல் முன்வராது பிந்தினர். எனினும், போர்த்துக்கீசரினதும் ஸ்பானியரினதும் அனுகூலத்தையுஞ் செல்வாக்கையுங்கண்ட ஆங்கிலேயர் அன்னவரைப் பின்பற்றித் தாமும் புதிதாய் நாடுகளைக் கண்டுபிடிக்க முயன்றனர். அவ்விதமுயற்சியால் 1497-ம் ஆண்டில் ஜோன்கபோற் (John Cabot) என்னும் இத்தாலிய மாலுமி புதிய தேசங்களைக் கண்டுபிடிக்கும்படி ஏழாம் ஹென்றியால் அனுப்பப்பட்டு அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடந்து வட அமெரிக்காக்கரையையும் நியூபவுண்லண்ட்(Newfoundland) என்ற நாட்டையுங் கண்டு பிடித்தனன்.

## ஏழாங் ஹென்றி (1485-1509)

ஏழாங் ஹென்றி தான் அரசனானதற்குரிய பட்டத்துரிமை மிகப் பெலனற்றதென்றறிந்து லன்காஸ்திரியர் (Lancastrians) யோக்நாட்டார் (Yorkists) என்ற முடியுரிமை பாராட்டும் கட்சிகளில்லா தொழியும்படி யோக்நாட்டு எலிசபெத்தை விவாகஞ் செய்தும், முடியுரிமை பற்றிக் கலகம் விளைத்த இலாம்பேட்சிம்நேல் (Lambert Simnel) பேர்க்கின் உவார் பெக் (Perkin War beck) என்ற மாய்மாலிகளைத் தோற்கடித்து அடக்கியும், இவ்விதம் வேறு கலகம் விளையாவண்ணம் அடக்குமுறைச் சட்டங்களை விதித்தும், பிரான்சியருடன் பூரண சமாதான உடன்படிக்கைசெய்தும், அயல் நாடுகளில் தனது பிள்ளைகளுக்கு விவாகசம்பந்தங்களைத் தேடியும், பாராளும் மன்றத்தின் உதவியின்றி அபராத விதிகளால் திக பணஞ்சம்பாதித்துந் தன்னையும் தன் இராச்சியத்தையும் பலப்படுத்தி நடந்தான். புதிதாய்க் கப்பல்களையுங் கட்டுவித்தான்; வியாபாரத்தை விருத்திசெய்யும்பொருட்டு மத்தித்தரைக்கடலிலும் பால்ற்றிக்கடலிலுங் கப்பற் போக்கு வரவு செய்யக்கூடிய வசதிகளையுந் தேடினான்.

## எட்டாங்ஹென்றி (1509-1547)

எட்டாவது ஹென்றியென்பான் தான் முதல்மணந்த மனைவியைநீக்கிப் பிறிதோர் வனிதையை விவாகஞ் செய்ய வெண்ணித் தன்மார்க்க கர்த்தாவாகிய உரோமைச் சபைத்தலைவரை உத்தரவுகேட்க, அன்னவன் மறுக்க, உரோமைச் சபையிலிருந்துந் தான் பிரிந்து இங்கிலந்திலோர் சுயாதீனமார்க்க சபையை ஏற்படுத்தித் தானே அச்சபைக்குத்தலைவனாகி, தான்நினைத்த புனர்விவாகத்தை நிறைவேற்றினதுமன்றி, மாட்டின்லூதர் (Martin Luther) என்

பவனால் ஜேர்மனியில் ஸ்தாபிக்கப்பட்ட புரொட்டெஸ்ற்றான்ற் கிறிஸ்துமதம் (Protestantism) இங்கிலந்தில் வேரூன்றத்தக்க வசதிகளையும் நிலையாப்பிரகாரஞ் சம்பாதித்து வைத்தான். உரோமைச் சபைத்தலைமை (Papacy) இங்கிலந்தி லற்றுப்போக, இங்கிலந்து மார்க்கசம்பந்தத்தினால் ஏனைய ஐரோப்பிய விஷயங்களிலீடுபடாது மார்க்க சுயாதீனத்தாற் பூரண இராச்சிய சுயாதீனமுமடைந்து தன்னைத் தானே கொண்டு முன்னேறிச்செல்லும் வழியையுமடைந்தது. ஹென்றியும் தனது பிதாவைப் போலப் பாரிய கப்பல்களைக் கட்டுவிக்கவும் கடற்பட்டாளத்தைப் பலப்படுத்தவும் முழு மனதோடும் முயற்சி செய்தான். மேலும் கப்பல் செப்பனிடுந் துறைகளையும் (Docks) பீரங்கி யணிசெய்வதற்குத் தொழிற்சாலைகளையுங் கட்டுவித்துக் கப்பற்சேனைக்கு ஓர் நிர்வாகசபை (Navy-Board) யையுந் தாபித்தான். இவன்காலத்தில் ஆங்கிலேயர் முதன்முதல் ஆபிரிக்காவின் மேற்குப்பாகங்களுக்குச் செல்லவும், நியூபவுண்ட்லண்டில் மீன்பிடித்துறைகள் தாபிக்கவுந் தொடங்கினர். பிரான்சியரும் இவன்காலத்திலேயே முதன்முதல் அமெரிக்காவுக்குச் சென்று ஸென்ற்லோறென்ஸ் குடாக்கடல் (Gulf of St. Lawrence) வழியாய்க் கனடாவைக் கண்டுபிடித்தனர். மேற்படி ஹென்றி, பிரசைகளால் விரும்பப்பட்ட ஓர் அரசனென்பது உண்மையே யெனினும் அவன் அக்கிரமச்செயல்கள் கவனிக்கப்படவேண்டியன. தனது மனைவிய ரறுவரில் தனது எண்ணத்துக்கும் விருப்பத்துக்கும் ஒவ்வாத சிலரைச் சிரச்சேதஞ் செய்தும், வேறு சிலரை வேறுவிதம் நீக்கியும், தனக்கு அத்தியந்த நண்பருங் குருமாருமான தோமஸ் உவுல்சி (Thomas Wolsey) தோமஸ் மூர் (Thomas More) என்

போரையும், அந்தியகாலநண்பன் தோமஸ் குறேம்வெல் (Thomas Cromwell) என்பானையும் தனது கருத்துக் கிசைய நடவாமைபற்றி அவர்களிருந்த உயர்ந்த உத்தியோக பதவிகளிலிருந்தும் நீக்கி, ஈற்றில் மரணதண்டனைக் குள்ளாக்கியும், குருமடங்களை யழித்து அங்கிருந்த பொக்கிஷங்களைக் கொள்ளைகொண்டும், தனது மார்க்கசபைக்கு மாறானவர்களையும் புறொட்டெஸ்ற்றன்று மதத்தைத் தழுவினோரையுங் கொன்றுங் கொடுங்கோல் நாட்டினன். பாராளுமன்றமும் இவன் காலத்தில் இவனுக்குக் கீழ்ப்பட்டே நடந்தது.

## ஆறும் எட்வேட் 1547-1553

ஆறும் எட்வேட் காலத்தில் இங்கிலந்தில் புறொட்டெஸ்ற்றன்ற் கிறிஸ்துமதம் ஸ்திரமாய்த் தாபிக்கப்பட்டது. விவிலியவேதம் மொழிபெயர்க்கப்பட்டு எங்கணும் பரப்பப்பட்டது. அநேக கலாசாலைகளும் கட்டப்பட்டன. 1553-ல் சேர் ஹியூ உவில்லோபி (Sir Hugh Willoughby) யும் றிச்சேட் சான்சேலரும் (Richard Chancellor) வடசமுத்திர மார்க்கமாகக் கீழைத்தேசங்கட்குச் செல்வதற்கு வழிதேடினர். உவில்லோபியுங் கூடச்சென்றோரும் ஆகாரமின்றி வழியில் மாண்டனர். சான்செலர் பனியுறை கடலைத்தாண்டமுடியாது மீண்டு நோர்வேயைச்சுற்றி வெண்கடல் மார்க்கமாக ருஷியாவுக்குச் சென்று மொஸ்கோ நகரையடைந்து ருஷிய சக்ரவர்த்தியைத் தரிசித்து இங்கிலந்துக்கும் ருஷியாவுக்குமிடையில் வர்த்தகப் போக்குவரவுகள் நடைபெறுவதற்கு வசதிகள் தேடினன். அதன் பயனாக இங்கிலந்தில் மொஸ்கோவி வியாபாரசங்கமெனப் (The Moscovy Company) பெயரிய ஓர் மகா சமுதாயம் ருஷியாவுடன் வர்த்தகஞ் செய்வதற்காகப் பின்னர் ஏற்பட்டது.

## மேரி இராணி 1553–1558.

இந்த இராணிகாலத்தில் கத்தோலிக்க கிறிஸ்துமதமும் உரோமைச்சபைத் தலைமையும் மறுபடியும் இங்கிலந்துக்குக் கொண்டுவரப்பட்டன. அதனால் புரொட்டெஸ்றன்ற் மதத்தவர் பல்லாயிரர் ஜீவனோடுந் தீவாயிலிடப்பட்டார். இங்கிலந்துக்கும் ருஷியாவுக்குமிடையில் ஓர் வியாபார உடன்படிக்கையுஞ் செய்யப்பட்டது. இதுவரையும் ஆங்கிலேய ஆளுகைக்குக் கீழிருந்த பிரான்சிலுள்ள கலேய் என்ற இடமும் இவள்காலத்திலிழக்கப்பட்டது. கலேயை இழத்தலும் ஆங்கிலேயர் பிரான்சிலடியோடே யுரிமையிலராய் இழிவடைந்தனரெனினும் பிற்காலத்தில் அது ஆங்கிலேய சாதியாருக்கு நன்மையாய் முடிந்தது. ஏனெனில் அவர்களின் ஊர்காவல் முயற்சி இந்நாடுறைப்படாது ஒரு வழிப்பட்டு இங்கிலந்தைக் கப்பற் சேனைகொண்டு நன்கு அரண்செய்து சுற்றில் கடலுக்கப்பாற் குடியேற்ற நாடுகளையுஞ் சக்ராதிபத்திய நாடுகளையுஞ் சம்பாதிக்கக்கூடிய வலிமையைப்பெற்றது.

## எலிசபெத் இராணி 1558–1603.

கத்தோலிக்க மதத்தராகிய போர்த்துக்கீசரும் ஸ்பானியரும் முதன் முதல் அமெரிக்காக்கண்டத்தைக் கண்டுபிடித்து அங்கு குடியேறினர். இந்த இருசாதியாருக்குமிடையில் அமெரிக்கநாடுகளைப் பங்கிடுசெய்வதிலே தகாருண்டாக அவர்கள் சமயகர்த்தாவாகிய உரோமைச் சபைத்தலைவர் அமெரிக்காக்கண்டத்தை இரு கூறுக அவர்களுக்கிடையில் பகிர்ந்து எல்லைவைத்துக் கொடுத்தனர். ஆதலால் ஆங்கிலேயரும் ஏனைய ஐரோப்பிய சாதியாரும் போர்த்துக்கீசரினதும் ஸ்பானியரினதும் உத்தரவின்றி அமெரிக்காவிற்

குடியேறவேனும் வியாபாரஞ்செய்யவேனும் அருகராகார். ஆனால் எலிசபெத் இராணிகாலத்தில் இங்கிலந்து உரோமைச் சபையிலிருந்து மறுபடியும் பிரிந்து புரொட்டெஸ்ற்றன்ற் மதத்தைத்தழுவியதும் உரோமைச்சபைத்தலைவரின் நிபந்தனைக்குள் அமையாது சுயாதீனத்தையடைந்தது. மேலும் இராச்சியமுறையிலும் மார்க்கவிஷயங்களிலும் ஸ்பானியர் கொடுங்கோல் நடாத்திச் சகிக்கமுடியாத குரூரச்செயல்களைச் செய்தபடியால் ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் (Dutch) அன்னவரைப் பகைத்து அவர்களுடைய கப்பல்களிலேற்றப்பட்டுவந்த திரவியங்களைக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் பறித்தும், அவர்கள் குடியேற்றநாடுகளிற் சென்று கொள்ளையடித்தும் அதிமோசமான தீங்குகளைவிளைத்தனர். பூர்வகாலத்தில் டேனியர் முதலியவடதேசத்தார் (North-men) எவ்விதம் பிரித்தானியாவுக்குக் கொள்ளையடிக்கவந்தனரோ அவ்விதம் ஆங்கிலேயர் ஸ்பானியநாடுகளுக்குக் கொள்ளையடிக்கச்சென்றனர். அப்படிச்சென்றபோது இராணியின் அல்லது மந்திரிமாரின் உத்தரவைப் பெற்றுச்சென்றனரல்லர். ஆனால் அரசனுயினும் இராணியாயினும் மந்திரிமாராயினும் ஆங்கிலேய கப்பற் தளகர்த்தரின் மேற்படி திருட்டுச்செயல்களுக்கு மாறாயிருந்தனரல்லர். ஏனெனில் எலிசபெத் இராணியே ஹாக்கின்ஸ் (Hawkins) என்னும் மாலுமிக்குத் தனது கப்பலொன்றை இரவலாய்க்கொடுக்க, அவன் மேற்காபிரிக்காவிலுள்ள நீக்குரோ (Negroes) சாதியாரை வலோற்காரமாகப் பிடித்து அக்கப்பலிற் கொண்டு சென்று அமெரிக்காவிலுள்ள ஸ்பானிய கருப்பந்தோட்டங்களில் வேலைசெய்வதற்குத் தோட்டக்காரருக்கு அவர்களை அடிமைகளாகவிற்றுப் பெருந்தனவந்தனுனன். தவிர, டிறேக் (Drake) என்னுங் கப்பற்சேனுபதி உலகத்தைச்சுற்றிப் பிரயாணஞ்செய்தபோது, வழியிற் சந்தித்த அநேக ஸ்பா

னிய கப்பல்களிலிருந்த திரவியங்களைப்பறித்துங் கொள்ளையடித்துங்கொண்டு இங்கிலந்துக்குச்சென்று தனது சம்பாத்தியத்தில் ஓர்பாகத்தை எலிசபெத் இராணிக்குங் கொடுத்தனன். இங்கிலந்துக்கு வடமேற்குப்பாகமாகச் சமுத்திர வழியாய்க் கீழைத்தேசங்கட்குச் செல்வதற்கு ஓர்பாதை (North West Passage) யை ஆராய்ச்சிசெய்யும்பொருட்டு 1576-ல் எலிசபெத் மாட்டின்வுறூபிஷருக்கு (Martin Frobisher) க்கப்பலுங் கொடுத்துக் கைப்பொருளுங் கொடுத்துதவினுள். ஆகவே ஆங்கிலேய அரசரும் பிரசைகளும் ஏகோபிதமாய்க் கடல்விஷயத்தில் தமது திறமையையும் நாட்ட அபிமானங்கொண்டனர். இவ்வாருகக் கடலாராய்ச்சியிலுங் கப்பற்போரிலும் அதி சாமர்த்தியமெய்திவந்த ஆங்கிலேயரின் வீரத்தையடக்கவும் அவர்களின் பயங்கரமான கொள்ளையடிக்குந் தொழிலை வேரோடேகளையவுமெண்ணி ஸ்பானியதேசத்தரசன் நெடுங்காலமாகப் பாரியகப்பல்களைச் செய்வித்து அவைக்காகிய ஓர்பட்டாளத்தையும் ஆயத்தஞ் செய்தான். அவ்விதம் ஆயத்தஞ்செய்யப்பட்ட 130-பாரிய கப்பல்களுடனும் அவைக்கேற்ற சேனையுடனும் ஸ்பானியர் இங்கிலாந்துக்குப் படையெடுத்துச்சென்றனர் (1588). ஸ்பானிய கப்பற்சேனை தூரத்தில் வருவதைக்கண்ட ஆங்கிலேய மீன்பிடிவள்ளக்காரனெருவன் பந்தாடிக்கொண்டுநின்ற ஆங்கிலேயகப்பல் தளகர்த்தருக்கு மேற்படி சமாசாரத்தைத் தெரிவித்தனன். அதைக்கேட்ட தளகர்த்தர் ஆடின ஆட்டத்தை முடித்தே ஸ்பானியரை எதிர்க்கவேண்டுமென்று தீர்மானித்தனர். ஆனுல் திகிலடைந்தாரல்லர். அவரதுபரபரப்பில்லாத நெஞ்சும், சாந்தமான மனமும், தீவிரபுத்தியும் அவரின் வெற்றிக்குச் சான்ருகும். படையெடுத்துச் சென்ற ஸ்பானியர் ஆங்கிலேய கால்வாயையடைந்ததும் தெற்குப்பக்கத்திலிருந்து ஓர் உக்கிரமான காற்றுவீசியது.

ஆங்கிலேயர் ஸ்பானியரின் பாரியகப்பல்களை முன்னே செல்ல
விட்டு, தங்கள் சிறிய கப்பல்களைக்கொண்டு அவர்களைப்பின்
தொடர்ந்துசென்று குண்டுப்பிரயோகஞ்செய்து தாக்கினர்.
முன்னுக்குச்சென்ற ஸ்பானியரோ ஆங்கிலேயரை எதிர்த்து
நின்றும் புயலினிமித்தம் தாக்கச் சக்தியற்றவரானர். ஆத
லால், ஸ்பானியர் ஆங்கிலேயரால் பின்தொடரப்பட்டுக்
கேவலமாய்த் தோற்கடிக்கப்பட, கப்பல்களும் புயலில் அல்
லோலகல்லோலப்பட்டுத் தத்தம்வழியே ஓட்டம்பிடித்தன.
அழிந்தன சில; அமிழ்ந்தின சில; உருண்டுபுரண்டுஆழிவாய்ப்
பட்டன ஒருசில. ஈற்றில்130 இல் 54 சேதப்பட்டகப்பல்கள்
ஒருவாறு ஸ்கொத்திலந்தைச்சுற்றித் தாங்கள்பட்ட அக்கப்
பாட்டைச் சொல்லப்போலும் ஸ்பானியாவை யடைந்தன.
மேற்படி யுத்தத்தில் ஹௌவேட் (Howard) டிறேக்(Drake)
வுறோபிஷர் (Frobisher) ஹோக்கின்ஸ் (Hawkins) ருலி
(Raleigh) ஆகிய இவர்கள் பங்குபற்றினர். இவர்கள் கடற்
கொள்ளையிலும் கப்பற்போரிலுஞ்செய்த அதி அற்புதச்செ
யல்கள் அநேகமுள. (விரிவஞ்சி அவற்றை ஈண்டுகூறாதுவிடுத்
தாம்.) ஸ்பானியரின் மகா கப்பற்சேனை (Armada) சின்ன
பின்னப்பட்டதும் கடல்விஷயங்களில் ஆங்கிலேயர் முதன்
மையடைந்தனர். எலிசபெத் இராணிகாலத்தில் கடல்
முதன்மை ஆங்கிலேயர் வசப்பட வர்த்தகவேந்தர்கள் சமு
தாயங்களை ஏற்படுத்தி இராணியிடமிருந்தும் பலநிபந்தனைக
ளமைந்த சாதனங்களை (Charters)ப்பெற்று உலகத்தின்
பலபாகங்களிலும் வர்த்தகபண்டகசாலைகளைத் தாபித்த
னர். 1579-ல் போலன்ட் (Poland) பிறஷியா (Prussia)
ஸ்காந்திநேவியா (Scandinavia) ஆகிய இத்தேசங்களில்
வியாபாரஞ்செய்ய ஓர் சபையும் (The Eastland
Company) 1518-ல் மத்தித்தரைக்கடலையடுத்த நாடுக
ளில் வர்த்தகஞ்செய்ய ஓர்சமுதாயமும் (The Levant

Company), 1588இல் ஆபிரிக்காவுடன் வாணிசஞ்செய்ய ஒரு வர்த்தகர் மகாநாடும் (The W. Africa Company,) 1599ம் ஆண்டு டிசெம்பர்மீ 31க வ- இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் வியாபாரஞ்செய்ய ஓர் மகாசபையும் (The East India Company), இராணியுடைய நிபந்தனைச் சாதனங்களுடன் பதிவுசெய்யப்பட்டுத் தாபிக்கப் பட்டன. அமெரிக்காவிலுள்ள நியூபவுண்ட்லன்டிலும் வேர்ஜினியா (Virginia) விலும் குடியேறவும் ஆயத்தங்கள் செய்யப் பட்டன. இந்த்ராணிகாலத்தில் அநேக ஜெகப்பிரசித்திபெற்ற கவிவாணருங் கலைவல்லோருமிருந்தனர். நாடகக் கவிராஜனாகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்னும் செகசிற்பியாரை எவருமறிவர். அவர்காலமும் இவள்காலமே.

| ரியூடர் அரசர் | அரசண்டகாலம். |
|---|---|
| ஏழாம்ஹென்றி | 1485-1509—$23\frac{3}{4}$ வருஷ |
| எட்டாம்ஹென்றி | 1509-1547—$37\frac{3}{4}$ வருஷ |
| ஆறும்எட்வேட் | 1547-1553— $6\frac{1}{2}$ வருஷ |
| மேரி | 1553-1558— $5\frac{1}{4}$ வருஷ |
| எலிசபெத் | 1558-1603—$44\frac{1}{2}$ வருஷ |

# ரியூடர் அரசபரம்பரை

**மூன்றாம் எட்வேட்**

|

யோன் ஒவ் கோன்ற் – (3) கதரின்

|

யோன் போவோட்

|

யோன் போவோட்

|

மாக்கிறேற் போவோட் – எட்மன்ட் ரியூடர்

|

## ஏழாம் ஹென்றி

- மாக்கிறேற்
  - 5-ம் யேம்ஸ் (ஸ்கொத்திலந்து தேசஅரசன்)
    - மேரி – டான்லி
      - 6-ம் ஜேம்ஸ் (ஸ்கொத்திலந்துக்கு)
        1-ம் ஜேம்ஸ் (இங்கிலந்துக்கு)
- **எட்டாம் ஹென்றி**
  - மேரி
  - எலிசபேத்
  - ஆறாம் எட்வேட்

# சக்ராதிபத்தியக் குடியேற்றகாலம்.
# (1600—1700)
## (Period of Colonisation by Settlement)
## அமெரிக்காவிற் குடியேற்றம்.

கடல்வழியாய்க் கீழைத்தேசங்களுக்குச் செல்வதற்குப் புதுமார்க்கங்களைக் கண்டுபிடிக்க ஓர் சாராரும், நவமாய்க்கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்கா தேசம் முழுவதையுந் தமதென்று வேறுசாதியாரை அங்குசென்று குடியேறவேனும், வியாபாரஞ்செய்யவேனும் இடங்கொடாத ஸ்பானியரின் வர்த்தகச்செல்வாக்கை அழித்து அன்னார் கொடுங்கோன்மைச் செருக்கைச் சிதைக்க வேறோர் சாராரும், அமெரிக்காமுதலிய கடலுக்கப்பாலுள்ள கண்டங்களிற் குடியேறும் நோக்கமாய்த் தேசாராய்ச்சிசெய்ய இன்னோர்சாராருமாக, முத்திறப்பட்டகப்பல் மாலுமிகளும் கப்பற்சேனபதிகளும் எலிசபேத் இராணியின் காலத்திலிருந்தார்களென்பது சென்றபாடத்திலிருந்துந் தெளிவாகும். ஆனல் ஸ்பானியரைக் கொள்ளையடித்து அவர்கள் வியாபாரத்தைக் கெடுப்பதிலும் பிறநாடுகளிற்சென்று குடியேறுவதே, காலகதியில் இங்கிலந்துக்கு நாடுகள்சேர்வதற்கும் வியாபாரமதிகரிக்கிறதற்கும் ஓர் தகுந்தவழியென ஆங்கிலேயரில் மேனேக்கமுடைய சிலர் அபிப்பிராயங்கொண்டனர். அவ்வாறு அபிப்பிராயங்கொண்டு அமெரிக்காவிற் குடியேறும் நோக்கமாக இங்கிலந்திலிருந்தும் முதன் முதற் புறப்பட்டோர் சேர்ஹம்விறிஜில்பேட் (Sir Humphrey Gilbert) சேர்உவால்ற்றர்ருலி (Sir Walter Raleigh) என்னுமிரு சகோதராரவர்.

## சேர்ஹம்விறிஜில்பேட்
## Sir Humphrey Gilbert

சேர்ஹம்விறிஜில்பேட் 1583-ல் அமெரிக்காவை யடைந்து யோன்கபொற் (John Cabot) ருல் 1497-ல் கண்டுபிடிக்கப்பட்ட நியூபவுண்ட்லன்டில் குடியேறினன். ஆனல் அதிக சீதளசுவாத்தியத்தினுலும், மழைமிகுதி யாலும் அங்கு விவசாயஞ் செய்ய இயலாது சீவனே பாயத்துக்கு வழியின்றி ஹம்விறியுங் கூடச்சென்ருேரும் இங்கிலந்துக்குத் திருப்பிச்செல்லுதலும், வழியில்மரக் கலஞ் சண்டமாருதத்திலகப்பட்டு அமிழ்ந்த, அனைவரும் ஆழிவாய்ப்பட்டனர். (இந்தச்சமாசாரம் தூரத்திற்சென்ற வேருேர் கப்பற்காரர் மூலமாகத்தெரியவந்தது.)

## சேர்உவால்ற்றர்றலி
## Sir Walter Raleigh

சேர்உவால்ற்றர்ருலி என்பானே எலிசபேத் இராணி யால் அதிகம் நேசிக்கப்பட்டவனும் நன்குமதிக்கப்பட்ட வனுமான ஓர்பிரபு. அவனுடைய அழகுஞ் சாமர்த்தியமுந் துணிகரமும் இராணியின் மனதைக்கவர்ந்தன. கடற்போரி லுந் தரைப்போரிலும் பின்வாங்காது முன்செல்லும் மகா தைரியசாலி. மேலுங் கல்வியிலுங் கவியியற்றும் புலமையி லுஞ் சிறந்துவிளங்கினன். இங்கிலந்தின் ஆண்மையுங் கீர்த் தியும் உலகெங்கணும் நிலவி ஆங்கிலேயசாதியார் முன்னேற வேண்டுமென்ற பேரவாவுடையவன். இந்த லட்சணங்கள் பொருந்திய ருலி பலமுறையும் அத்திலாந்திக் சமுத்திரத் தைத்தாண்டி அமெரிக்காவையடைந்து தேசாராய்ச்சிசெய் துதிரும்பினர். 1584-ல் ருலி வடஅமெரிக்காவின் தென்கிழ் க்கரையையடைந்து இராணியை (எலிசபெத்) மகத்துவப்ப

டுத்துமாறு வேர்ஜ்ஜினியா (Virginia-கன்னிநாடு) என அப் பகுதிக்குப் பேரிட்டுத் தனதுகூட்டாளிகளுடன் அங்குகுடி யேறினன். ஆனால் இக்குடியேற்றம் அங்கு வேரூன்ற வில்லை. ஏனெனில், சிலர் அந்நாட்டாரால் கொல்லப்பட்ட னர்; சிலர் அவ்விடத்தைவிட்டுக் காணுமற்போயினர்; எஞ் சினோர் டிறேக்என்பவனால் இங்கிலந்துக்குக் கொண்டுசெல் லப்பட்டனர். எனினும் ரூலியோ இங்கிலந்துக்குச் சேரும் படி அமெரிக்காவிற் புது நாடுகளைச் சம்பாதிக்கவேண்டு மென்ற அபிமானத்தை இன்னுங்கைவிடாது ஒறினோக்கோ (Orinoco) நதி வழியாய் 400 மைல் தூரம் உள் நாடுகளுக் குச் சென்று தேசாராய்ச்சி செய்வானாயினான். இராணி இறந்தபின்னர் ரூலியின் கதி மிகவும் நிர்ப்பந்தமாயது. பகைவரெல்லாம் ஒருங்குகூடி அவனைச் சிறையிலிடும்படி செய்தனர். ரூலியோ சிறைச்சாலையிலும் வாளாவிராது உலகசாஸ்திரமொன்றை எழுத ஆரம்பித்தனன். ஈற்றில் யேம்ஸ் (James I) அரசனை மன்றாடிச் சிறைச்சாலையிலி ருந்தும் விடுதலையடைந்து அமெரிக்காவிற் தான் முன்னர் நடாத்திய தேசாராய்ச்சியைப் பின்னர் விடாப்பிடியாய் நடாத்தினர். ஆனால் தேசாராய்ச்சி விஷயத்தில் ஸ்பானி யருடன் சண்டையிட்டுக்கொள்ளப்படாதென யேம்ஸ் அர சன் செய்த நிபந்தனைகளை மீறி நடந்தபடியால் ரூலி அநி யாயமாய் அரசனாற் சிரச்சேதஞ்செய்யப்பட்டான். ஆகவே ரூலியின் குடியேற்றத்துக்காகிய பிரயத்தனங்கள் பிரதிகூல மாயின. (ரூலியே அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவுக் குப் புகையிலையையும் உருளைக்கிழங்கை (Potatoes) யும் முதன் முதற் கொண்டுசென்று அவற்றின் உபயோகத்தைக் காட்டிவைத்தவன். ஐரோப்பாவிலிருந்தே அவை இலங்கை இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டன).

## அமெரிக்காவில் ஏனைய ஆங்கிலேயர் குடியேற்றம்.

ரூலியின் முயற்சிகள் அநுகூலமடையவில்லையாயினும், ஆங்கிலேயர் குடியேற்ற விஷயத்தில் பராமுகமாயிருக்கவில்லை. 1607-ல் வேர்ஜ்ஜினியா சங்கம் (Virginia Company) எனப் பெயரிய ஓர் கூட்டத்தார் இங்கிலந்திலிருந்தும் புறப்பட்டு வேர்ஜ்ஜினியாவில் யேம்ஸ்நதி (James river) தீரங்களிற் குடியேறினர். யோன் சிமித் (Captain John Smith) என்னும் மாலுமியின் பிரயத்தனங்களால் வேர்ஜ்ஜினியாவில் குடியேற்றம் நிலைநிறுத்தப் பெற்றது. வேர்ஜ்ஜினியாவின் வடபாகத்தையும் யோன் சிமித் புதிய இங்கிலந்தென்று (New England) பேரிட்டு ஓர் குடியேற்ற நாடாக்கினன் (1620) ஆனல் ஆரம்பத்தில் குடியேறிய மேற்படி ஆங்கிலேயர் அநேக கஷ்டநஷ்டங்களுக்காளானூர்கள். தோட்டங்களில் வேலைசெய்வதற்குப் போதிய வேலைக்காரரில்லாமையால் சிலகாலம் கடும்பஞ்சத்துக்கிடமாயிருந்தது. நாடுநகரங்களாவது, வீடுவாசல் வீதிகளாவது அப்போ அங்கிருந்தனவல்ல. நாகரீகமற்ற பயங்கரமான காட்டுமனிதர் சஞ்சாரமான அந்த அடவிகளில் வசிக்க யாவரும் அஞ்சினர். தோட்டங்களிற் தொழில்செய்வதற்கு வீடுவாசலின்றித் தெருநீளந்திரிந்த பாலர்களும் பாலிகைகளும் மறியற்காரருமே இங்கிலந்திலிருந்தும் வலோற்காரமாய் அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். ஆதலால் அவர்கள் கீழ்ப்படிவின்றிப் பிரயோசனமற்ற வேண்டாவெறுப்பான வேலைக்காரராய் ஒழுகினர். இங்கிலந்தைவிட்டு மனைவிமக்களுடன் அமெரிக்காவிற் குடியேற முன்வந்தோரும் மிகச் சிலராவர். ஈற்றில் குடியேறுவதற்கும் தொழில்செய்வதற்கும் சனங்களைச் சம்பாதிக்கிறதற்கு ஓர் வழி தெய்வீகமாகத் தானே தோன்றி

யது. ஆபிரிக்காவிலிருந்தும் நீகிரோ (Negroes) சாதியார் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு அமெரிக்காவுக்குத் தொழிலாளராகக் கொண்டு செல்லப்பட, இங்கிலந்திலிருந்தும் சமயபேதங்களாற் சிலர் (Pilgrim Fathers) அரசனது (James I) இடுக்கண் பொறுக்கொணுதாராய் தம் நாட்டை விட்டு ஒல்லாந்தர் நாடுசென்று, அங்கிருந்தும் அமெரிக்காவுக்குக் குடியேறும் நோக்கமாகச் சென்றனர். (1620) அமெரிக்காவிற் குடியேறிய ஆங்கிலேயர் தொடக்கத்தில் கஷ்டப்பட்டாராயினுங் காலகதியிற் செழித்தோங்கிச் சிறந்து விளங்கினர். அவர்கள் செல்வாக்கையறிந்த வேறு ஆங்கிலேயரும் அமெரிக்காசென்று கரையடுத்த பலபாகங்களிலுங் குடியேறினர். அவ்விதம் பத்து வருஷத்துக்குள் (1629—1640) குடியேறினோர் தொகை ஏறக்குறைய 20,000. குடியேறின பிரதான இடங்கள் மசாக்குசேற்ஸ் (Massachusetts), நியூஹாம்ஷையர் (New Hampshire), றோட்தீவு (Rhode Island), கோனேக்ற்றிக்கற் (Connecticut) மேன் (Maine) முதலியன.

## முதலாம் யேம்ஸ் (1603—1625)

எலிசபெத் இராணிக்குப் பின் இங்கிலந்தை ஆண்ட அரசன் முதலாம் யேம்ஸ் (James I) ஆவான். இவன் ஸ்கொத்திலந்துதேச அரசனாகிய நாலாம்யேம்ஸ், ஆங்கிலேய அரசனாகிய ஏழாம் ஹென்றியின் மகள் மாக்கிரேற்றை மணந்து பெற்ற புதல்வன் ஐந்தாம் யேம்ஸின் பௌத்திரனாவான். ஆகவே இவன் ஸ்கொத்திலந்துக்கு ஆறுவது யேம்ஸ் ஆகவும் இங்கிலந்துக்கு முதலாவது யேம்ஸாகவும் முடிதரிக்கப் பெற்று இரு நாடுகளையும் ஒருகுடைக்கீழ் இராச்சியஞ் செய்து வந்தான். இவன் பிற்சந்ததியாரும் அப்படியே

ஆண்டுவந்தனர். ஆனால் 1707-ம் ஆண்டுவரைக்கும் மேற்படி இருநாடுகளுக்கும் வேறு வேறான இரு பாராளுமன்றங்களிருந்தன. இவன் காலந்தொட்டு ஏறக்குறைய 8 , 90 வருஷங்களுக்குப் பாராளுமன்றத்திற்கும் ஆங்கிலேய வேந்தருக்குமிடையில் அநேக சச்சரவுகளுங் கலகங்களும் விளைந்தன. இவனும் இவன் சந்ததியிலுதித்த ஏனைய அரசரும் தம் அரசியற்பதவி தமக்குக் கடவுளாற் கொடுக்கப் பட்டதென்றும், அவ்விதம் தாம் கடவுளால் நியமிக்கப் பட்ட அரசராதலால் பிரசைகளெல்லாம் எக்காரியத்திலுந் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றுந் தங்கள் பதவியையிட்டு வேறும் இன்னோரன்ன விபரீத அபிப்பிராயமுடையராயிருந்தனர் (Divine Right of Kings). இந்தநியாயம்பற்றி முதலாம் யேம்ஸ் பாராளுமன்றத்தின் உதவியின்றிப் பத்துவருஷகாலம் (1611-1621) அரசுபுரிந்தான். அதனாற் சனங்கள் அவனை வெறுக்கத்தொடங்கினர். மார்க்கவிஷயத்தில் கத்தோலிக்கசபை (Catholic Church) யையும், புறொட்டெஸ்றன்ற் இங்கிலந்துச் சபை (Church of England) யையுந் தவிர, சன்மார்க்க புறொட்டெஸ்றன்றசபை (Puritans Church) யென ஓர் புதிய கட்சியும் இவன்காலத்துண்டாயது. மேற்படி சன்மார்க்கசபையாரே (Puritans) அரசனதக்கிரமத்தைச் சகிக்கமுடியாதாராய் ஒல்லாந்தர்நாடுசென்று ஈற்றில் அமெரிக்காவிற் குடியேறினோராவர். 1608-ல் பிரான்சியரும் அமெரிக்காவில் குவிபேக் (Quebec) என்ற இடத்தில் முதன் முதற் குடியேறினர். 1612-ல் ஆங்கிலேயர் போர்த்துக்கீசரை இந்தியாவில் சூரத் (Surat) துறைமுகத்துக் கணித்தாய் நடந்த கடற்போரில் முற்றாய்த் தோற்கடித்து, சூரத் பட்டினத்தில் ஓர் கைத்தொழிற்சாலை தாபிக்க மோகலிய சக்கிரவர்த்தி (Mogul Emperor) யிடமிருந்து

உத்தரவும் பெற்றனர். 1618-ல் மேற்காபிரிக்காவில் இடம் பெறவும் வியாபாரஞ்செய்யவும் ஓர் ஆங்கிலேய சமுதாயம் (Company of Adventurers Trading to Africa) ஏற்பட்டது. இவன் காலத்தில் கலிலியோ (Galileo) வால் வானசோதிகளைப் பரிசோதிக்கிறதற்கேற்ற தூரதிருஷ்டிக் கண்ணுடியும், கேப்ளரால் (Kepler) கிரகசஞ்சார பிரமாணங்களும், ஹார்வே (Harvey) என்பவனுல் இரத்தோட்டமுங் கண்டுபிடிக்கப்பட்டன.

## முதலாம் சாள்ஸ் (1625–1649)

முதலாவது சாள்ஸ் (Charles I) காலத்தில் பிரசைகளுக்கு அரசனில் வெகு திருப்தியீனங்களிருந்தன. முதலாவதாக இவனும் பிதாவைப்போலத் தனது அரசியற்பதவியையிட்டு வீண்பெருமையான அபிப்பிராயங்கொண்டிருந்தான். இரண்டாவதாக ஓர் கத்தோலிக்கப்பெண்ணை விவாகஞ்செய்து சனங்களைமிகவுந் திருப்தியீனப்படுத்தினுன். மூன்ருவதாக அநியாயமான வரிகளை (Illegal Taxes) விதித்தும் கடன் கொடுக்கும்படி நீதியீனமாய்த் தனவந்தர்களை வலோற்காரஞ்செய்தும் (Forced Loans) கொடுங்கோல்செலுத்த ஆரம்பித்தான். இந்த அக்கிரமச் செயல்களைத் தடுக்கும்பொருட்டு 1628-ல் பாராளுமன்றம் உரிமை விண்ணப்பம் (Petition of Righf) எனப்பெயரிய ஓர் மகா சாதனத்தை வரைந்து அதற்கு அரசன் சம்மதத்தையும் ஒருவாறு பெற்றது. அச்சாதனத்தின்படி பாராளுமன்றத்தின் உத்தரவின்றிப் பிரசைகளிடமிருந்து எவ்விதமேனும் பணமறவிடவேனும், போதிய நியாயமின்றி ஒருவனைச் சிறைப்படுத்தவேனும், தனது போர்வீரரைப் போஷிக்கும்படி எவரிடமனுப்பவேனும், சமாதான காலத்தில் ஒருவனை யுத்தகாலச் சட்டத்துக்காளாக்கவேனும்

அரசனுக்குத் தத்துவமில்லை. ஆனால் அரசன் தான் அச்சாதனத்துக்குக் கைச்சாத்திட்டது தவறென்று அதிகந் துக்கித்துப் பாராளுமன்றத்தைக் குலைத்தும் அதன் அங்கத்தவர் சிலரைச் சிறைப்படுத்தியும் பதினொருவருடகாலம் (1629-1640) பாராளுமன்றமின்றி அரசுபுரிந்தான். இந்தப் பதினொருவருஷகாலமும் அரசன் தன்னெண்ணப்படி அரசுபுரிய, வீடுசுடுகிற அரசர்க்குக் கொள்ளிகொடுக்கும் அமைச்சன்போல இருவர் அவனுடைய தீச்செயல்களுக்கெல்லாம் உதவியாயிருந்தனர். அவர்களிலொருவன் அயர்லந்துதேசப் பிரதிகாவலனாயிருந்த தோமஸ் உவென்ற்வோத் (Thomas Wentworth) ஆவான். மற்றவன் கான்ற்பெரி மாகாணத்துப் பிரதம குருவாகிய உவில்லியம் லோட் (William Lard) ஆவான். உவென்ற்வோத் அயர்லந்தில் பிரதிகாவலனாயிருந்து கொடியஅடக்குமுறைச் சட்டங்களை விதித்து ஐரிஷ் சாதியாருக்குள் அதிகங் கலகம் விளைத்தவன். லோட் சமயவிஷயத்தில் இங்கிலந்துச் சபைக்குச் சேராதோரை, விசேஷமாய்ச் சன்மார்க்கரென்ற கட்சியாரை, அதிகம் வதைத்துத் தேசாந்திரிகளாய்ச் செல்லவிட்டு ஈற்றில் அமெரிக்காவில் ஒதுக்கிடந்தேடும்படி விட்ட பாதகன். ஸ்கொத்திலந்திலும் இங்கிலந்துச் சமயசபையைத் தாபிக்கப் பெரும் முயற்சிசெய்து யுத்தம் நிகழும்படியுஞ் செய்தான். ஸ்கொற்றியரோ ஒருங்குதிரண்டு தமது சமயசபை ஒழுங்குகளைக் (Presbyterianism) கிஞ்சித்துங் கைவிடாது அரசனையும் பிரதமகுருவாகிய லோட்டையும் எதிர்த்து இராசாங்கபட்டாளத்தைத் தோற்கடித்தனர். ஈற்றில் இருகட்சியாருஞ் சமாதானப்பட, அரசன் ஸ்கொற்றியருக்குச் சமய சுயாதீனமுமீந்து மேற்படி யுத்தச்செலவைக் கொடுக்கவுஞ் சம்மதித்தனன். இந்த யுத்தச்செலவைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் சாள்ஸ் 1640

தொடங்கி 1660 வரைக்குங் குலையாதிருந்த ஓர் நெடுங்காலப் பாராளுமன்றத்தை (Long Parliament) இத்தருணத்தில் கூட்டினன். ஆனல் இந்தப் பாராளுமன்றத்தாரோ தங் கடமைகளைச் செவ்வனே செய்யத்தொடங்கி, அநியாயவரிகளைநீக்கியும், அரசனது குரூரச்செயல்களுக்குக் காரணராயிருந்த உவேன்ற்வோத், லோட் ஆகிய இவர்களை வதை செய்வித்தும், 1641-ல் அரசன்மீது 206 குற்றச்சாட்டுகளைக்காட்டி ஓர் பெரிய அடாத்துப்பத்திரத்தை (Grand Remonstrance) அச்சிட்டு வெளியரங்கப்படுத்தியும், அவனுடைய அக்கிரமச் செயல்களைத் தடுக்க முயன்றனர். அடாத்துப்பத்திரம் வெளியானதும் அரசன் பாராளுமன்றத்து அங்கத்தவர் ஐவரைக் கைதியாக்கும்படி கட்டளைவிடுத்தனன். ஆனல் அவ்வைவரும் மறைந்து தப்பி ஓடினர். பின்னர் அரசன் பாராளுமன்றத்தைக் குலைக்கமுயன்றும், முடியாது லண்டனைவிட்டகன்று பாராளுமன்றத்தார்மீது படையெடுத்துச் செல்வானுயினுன். (1642) ஆகவே இங்கிலந்தில் அரசகட்சி (Royalists), பாராளுமன்றத்தார்கட்சி (Parliamentarians) யென ஆங்கிலேயர் இருகூறுபட்டுச் சமர்புரியத்தொடங்கினர். இந்த வெஞ்சமரில் பாராளுமன்றத்தாரே ஸ்கொற்றியரினது உதவியையும் ஒலிவர் குறேம்வெல் (Oliver Cromwell) என்பவருடைய சேனபதித் திறமையையுங் கொண்டு அரசகட்சியாரை மாஸ்றன் மூர் (Maston Moor, 1644) என்ற இடத்திலும், நேஸ்பி (Naseby, 1645) என்ற இடத்திலும் அதிகேவலமாய்த் தோற்கடித்தனர். ஈற்றில் அரசன் கைதியாக்கப்பட்டுப் பாராளு மன்றத்தாராலாய ஓர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டுக் குற்றவாளியாகக் காணப்பட்டுக் கொலைத் தீர்ப்புக்காளாகி 1649-ல் சிரச்சேதஞ் செய்யப்பட்டான்.

இவ்வேந்தன் காலத்தில் ஐக்கிய மாகாணத்திலிருந்தும் (United Kingdom) வடஅமெரிக்காவுக்குக் குடியேற அநேகர் சென்றனர் மேற்கிந்திய தீவுப்பகுதிகளில் பார்படோஸ் Barbados) என்ற இடத்தில் ஆங்கிலேயர் முதன் முதற் குடியேறினர்; இந்தியாவிற் சென்னபட்டணத்தில் (Madras) ஆங்கிலேய வர்த்தகஸ்தாபன மொன்றும் அரண் செய்யப்பட்டது (1639—40).

## குறேம்வேலும் பிரசாதிபத்தியமும் (1649—1660)

1649 தொடங்கி 1660 வரைக்கும் இங்கிலந்து, ஸ்கொத்திலந்து, அயர்லந்தெனப்படும் ஐக்கிய இராசாங்க நாட்டில் ஓர்வித பிரசாதிபத்திய (Commonwealth) ஆட்சி முறை கையாடப் பட்டதெனலாம். ஆனல் உண்மையளவில் மேற்கூறிய ஐக்கிய நாடுகள் இந்தப்பதினெரு வருடகாலமும் குறேம்வேலெனும் சேனபதியின் சேனதிபத்தியத்தாலேயே (Army Government) பரிபாலிக்கப்பட்டு வந்தன. குறொம்வெலோ தனது கட்சிக்குமாறுகவும் முதலாவது சாள்ஸின் மகன் இளவரசனுக்குச் சார்பாகவும், அயர்லந்திலும், ஸ்கொத்திலந்திலும் நிகழ்ந்த சம்பவங்களையும் கலகங்களையும் நிராகரித்தும், பாராளுமன்றத்தில் இராசபட்சமாயிருந்தோரை நீக்கியும் (1653), ஓர் இராச்சிய பரிபாலன சபை (Council of State) யைத் தாபித்தும், அதற்கும் அரசாங்கத்துக்கும் தன்னையே பாதுகாவலனக (Lord Protector) வும் நியமித்தான். இவனது பரிபாலனகாலத்தில் ஒல்லாந்தரின் வர்த்தகச் செல்வாக்கைக் குறைத்து ஆங்கிலேயரின் கப்பல் வியாபாரப் போக்குவரவை விருத்திபண்ணும் வண்ணம் மாலுமிச்சட்டம் (Navigation Act) ஒன்று ஏற்பட்டது (1651). அதனல் ஆங்கிலேய துறைமுகங்களில் ஆங்கிலேய கப்

பல்களிலன்றி ஏனைய கப்பல்களிற் சாமான் சரக்குகள் கொண்டுவரப்பட்டு இறக்குமதியாக்கப்படாதென்ற சட்டம் பிறந்தலும், ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் யுத்தம் நிகழ்வதாயிற்று (First Dutch War) யுத்தம் சிறுக ஆங்கிலேயருக்கு அநுகூலமாய் முடிந்தது (1654). அடுத்தவருடம் குறொம்வெல் ஆங்கிலேய வியாபாரப்பாது காப்பினிமித்தம் ஸ்பானியருடன் பொருது ஜமேய்க்கா (Jamaica) தீவையும் டன்கேர்க் (Dunkirk) நாட்டையும் பிடித்தனன்.

## இரண்டாம் சாள்ஸ் (1660—1685).

சேனாதிபதியும் இராச்சிய பரிபாலன பாதுகாவலனு மான குறொம்வெல் இறந்துவிட இராச்சியபாரத்தைச் சிர மேற்கொண்டு நடாத்தக்கூடிய ஆளில்லாமையால், குறொம் வெலின்கீழ்ச் சேனாபதியாயிருந்த மங்க் (General Monk) என்பான் முதலாவது சாள்ஸின் மகன் இரண்டாவது சாள்ஸை இங்கிலந்துக்கு வரவழைத்து அன்னவனை அர சனாகக் கையேற்றனன். இந்த அரசன், உள்ளத்தில் கத் தோலிக்கமதப் பிரியனாயிருந்தும், கத்தோலிக்கருக்கும் இங்கிலந்துச்சபையைச் சேராத ஏனைய கிறிஸ்துமதக்கட் சியாருக்கும் விரோதமாக அநேக சட்டங்களைப் பாராளு மன்றம் பிறப்பிக்க அவற்றிற்கு உடன்பட்டான். 1661-ல் நகரசங்க உத்தியோகஸ்தர் அனைவரும் இங்கிலந்துச் சபை யைச் சேர்ந்தோராயிருக்கவேண்டுமென்ற பிரமாணங் (Corporation Act) கொண்டுவரப்பட்டது. 1673-ல் அர சாங்கத்தின்கீழ் கத்தோலிக்கராயினும் இங்கிலந்துச்சபைக் குச்சேராத ஏனைய கிறிஸ்தவராயினும் எவ்வித உத்தியோக பதவியிலுமிருக்கப்படாதென்ற சட்டம் (Test Act) உண் டாயது. மேற்படி இருபிரமாணங்களும் 1828 வரையும்

நிலைபெற்றன. 1664-ல் வர்த்தகப் பொறாமையினாலோ வேறேதுக்களினாலோ ஆங்கிலேயருக்கும் ஒல்லாந்தருக்கு மிடையில் யுத்தம் நிகழ (Second Dutch War), ஒருமுறை ஒல்லாந்தர் ஆங்கிலேய துறைமுகங்கட்குச் சென்று சில ஆங்கிலேய கப்பல்களை எரித்தும் சேதப்படுத்தியுந் திரும் பினர். ஈற்றில் சமாதான ஒழுங்குகள்செய்து (Peace of Breda, 1667) ஆங்கிலேயர் ஒல்லாந்தரிடமிருந்தும் அமெ ரிக்காவில் நியூயோக் (New York) பட்டினத்தைப் பெற் றனர். இந்த அரசன் தனது மனைவிமூலமாக இந்தியாவில் பம்பாயை (Bombay) யும் மொரோக்கோவில் (Morocco) ரன்சியர்ஸ் (Tangiers) என்றஇடத்தையுஞ் சீதனமாய்ப் பெற்றனன்; ஆனால் குரொம்வெலால் பிடிக்கப்பட்ட டன் கோர்க்கைப் பிரான்சியருக்கு ஒருசிறுதொகைப்பணத்துக்கு விற்றனன். இவன்காலத்தில் இங்கிலந்தில் ஓர் பெரிய கொள்ளைநோய் (Great Plague) பரவியது (1665). அடுத் தவருடம் லண்டன்மாநகர் தீவாய்ப்பட்டுக் கட்டடங்க ளெல்லாம் முற்றாய் எரிந்து அழிந்தன. இத்தீவிபத்தின் பின்னரே லண்டன் சிறந்த விசாலமான வீதிகளமைந்த அலங்கார மாநகராக நவமாய்க் கட்டப்பட்டது. இவன் காலத்திலும் இவன்பிதாக்காலத்திலும் கடற்படையைப் பெலப்படுத்துமாறு அரசிறை வருமானத்தில் அரைவாசிக் குமேல் போர்க்கப்பல்களைச் செய்வதிலும் கப்பற் போர் வீரர்களைச் சம்பாதிப்பதிலுஞ் செலவாயது. பிளேக் (Blake), மங்க் (Monk), டியூக் ஒவ் யோக் (பின்னர் இரண்டாம் யேம்ஸ் ஆனவன்) ஆகிய இவர்கள் பேர்பெற்ற கப்பற்பட்டாளத் தளகர்த்தராய் விளங்கி ஒல்லாந்தரின் கப் பல்வியாபாரத்தைக் குறைத்துத் தங்கள்சாதியாரின் வியா பாரத்தையும் கடல்விஷயத்தில் மகத்துவத்தையும் அபிவி ருத்திசெய்தனர். அரசாங்க சாஸ்திரசங்கமும் (Royal

Society), கிறீன்விச்சில் சோதிட உப்பரிகையும், அரசன் ஒருவனை நெடுங்கால விளக்கமறியலிலிருத்தாது தடுத்தற்கு ஓர் சட்டமும் (Habeas Corpus Act) இவன்காலத்திலேற் பட்டன. பிரான்சிலிருந்தும் புறெட்டெஸ்ற்றன்ற் கிறிஸ்து மதத்தவர் (Huguenots) துரத்தப்பட இங்கிலந்துமுதலிய இடங்களில் ஒதுக்கிடந்தேடித் தாம் நன்குகற்ற கைத்தொழில்களை-விசேஷமாய்ப் பட்டுநெசவுத் தொழிலைத்-தாம் அடைக்கலம்புகுந்த அந் நாட்டவர்களுக்குக் கற்பித்து விருத்திபண்ணினர்.

## இரண்டாம் யேம்ஸ் 1685-1688

இரண்டாம் சாள்ஸின் மகனாகிய யேம்ஸ் (James II) தான் ஒரு கத்தோலிக்கனாதலால், தனது இராசரீக தத்து வத்தைக் (King's Prerogative) கொண்டு கத்தோலிக்க ருக்கு மாறாகஏற்பட்ட பிரமாணங்களைக் கவனியாது, அவர் களுக்கு உத்தியோகபதவிகளைக் கொடுத்து, 1687-ல் அப்பிரமாணங்களை நீக்கும்படி ஓர் பத்திரம் விடுத்து அதனை ஒவ்வொரு தேவாலயங்களிலும் வாசித்துப் பிரஸ்தா பப்படுத்தும்படியுங் கட்டளைசெய்தனன். இதனை ஏழு பிர தம குருமார் (Bishops) எதிர்த்தனர். அதனால் யேம்ஸ் அக்குருமாரைக் கைதுசெய்து நீதிஸ்தலத்தில் நீதிவிசார ணைக்கனுப்ப அவர்கள் குற்றமற்றவரெனக்காணப்பட்டு விடுதலையடைந்தனர். அக்குருமாரைக் கைதுசெய்தவன்றே ஆங்கிலேயபிரபுக்களும் ஏனைய்குருமாரும் ஒல்லாந்துதேசத் தில் வசித்த யேம்ஸின்மருகன் உவில்லியத்தை (William of Orange) ஓர் நிருபமெழுதித் தங்கள் உரிமைகளையும் சுயாதீனத்தையும் பாதுகாக்கும்பொருட்டு இங்கிலந்துக்கு வரும்படி கெஞ்சிக்கேட்டனர். உவில்லியம் ஆங்கிலேயர் கேள்விக்கிசைந்து தனது மனைவியாகிய (யேம்ஸின்மகள்)

மேரியுடன் இங்கிலந்துக்குச் சென்றனன். 1680-ல் வங்காளத்தில் கற்கத்தா நகருக்கு ஆங்கிலேயரால் அஸ்திபாரமிடப்பட்டது.


### மூன்றாம் உவில்லியமும் மேரியும் 1689–1704

உவில்லியம் தனது பாரியுடன் இங்கிலந்திலிறங்குதலுஞ் சனங்களும், பிரதான உத்தியோகஸ்தரும், பிரபுக்களும் அவர்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தனர். யேம்ஸ், நாட்டைவிட்டு ஓட்டம்பிடித்துப் பிரான்சில் அடைக்கலம் புகுந்தனன். 1689-ல் ஓர் பாராளுமன்றங் கூடி உவில்லியத்தையும் மேரியையுஞ் சகல அரசாங்க தலைவராக முடிதரித்து உரிமை விண்ணப்பம் (Petition of Right) எனப்பெயரிய ஓர் மகாசாதனத்தை (Magna Carta of the Revolution) அவர்களிடமிருந்தும் பெற்றனர். பெறுதலும், இங்கிலந்தில் அரசருக்கும் பாராளுமன்றத்துக்குமுண்டாய நெடுங்காலச்சச்சரவு ஓர்முடிவுக்குவந்தது. எனினும் தேசாந்தரஞ்சென்ற யேம்ஸ் அரசனுக்குச் சார்பாகப் பிரான்சியஇராசன் பதினாலாம் லூயி (Louis XIV) யும், ஸ்கொற்றிய மலைநாட்டாரும் (Highlanders) ஐரிஷ் கத்தோலிக்கரும் கலகம்விளைத்து யுத்தத்தை வருவித்தனர். லூயியோ தனது இராச்சியத்தைப் பெருப்பிக்கும் பேரவாக்கொண்டு ஒல்லாந்தரையுஞ் சருவி அவர்கள் நாட்டிலும் இடம்பெறவெண்ணினன். ஒல்லாந்தரின் பிரசாதிபத்தியத்துக் (Dutch Republic) கதிபனாயிருந்த உவில்லியம், லூயியின் பேராசைக்குத் தடையாயிருந்தபடியால் லூயி யேம்சுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து 1689 தொடங்கி 1697வரைக்கும் ஸ்கொத்திலந்து, அயர்லந்து, நெதர்லந்து ஆகிய மூவிடங்களிலும் உவில்லியத்துக்கு விரோதமாக யுத்தம் நிகழச்செய்தனன். ஈற்றில் பிரான்சிய

அரசன் இடைவிடாது நடந்த மேற்படி யுத்தத்தாலிளைத்து ஓர் சமாதான உடன்பாடு (Treaty of Ryswick) செய்து, அதனால் உவில்லியத்தை ஆங்கிலேய அரசனாக ஒப்புக் கொண்டான். இவன்காலத்தில் ஸ்பானிய அரசன் சிசுவின் மையால், தனது இராச்சியங்களைப் பிரான்சிய அரசனின் பௌத்திரனுக்கு மரணசாதனஞ்செய்துவிட்டு இறக்க, உவில்லியம் ஸ்பானிய இராச்சியங்கள் பிரான்சுக்குச்சேர்ந் தால் பிரான்சு மிதமிஞ்சிய மகத்துவத்தையும் ஆணவ இறுமாப்பையுமடையுமென்றஞ்சி அப் பெரிய இராச்சியங் களை ஒருங்குசேரவொட்டாது தடுக்கும்பொருட்டு ஒல்லாந் தருடனும், ஜேர்மனிய அவுஸ்திரிய சக்ரவர்த்தியுடனும் ஓர் மகா உடன்படிக்கை (Grand Alliance) யைச்செய் தனன். இதனாலும், ஸ்பானிய இராச்சியங்களையிட்டு லூயி ஸ்பானிய அரசனின் மரணசாதனத்துக்கு முன் தான் ஸ்பா னிய இராச்சியங்களின் ஏனைய உரிமையாளருடன் செய்து கொண்ட பிரிவிடுதல் சமாதானத்தை (2 nd Partition Treaty, 1699-ல் மீறி நடந்தபடியாலும். ஓர் மகா யுத்தம் பின்னர் நிகழ்வதாயிற்று. உவில்லியத்துக்கும் பட்டத்துக் குப் பிள்ளையில்லாமையால் முடியுரித்தைப்பற்றி ஓர்ஒழுங்கு செய்யப்பட்டது (Act of Settlement.)

| ஸ்ற்றியு ஆட் அரசர் | அரசாண்டகாலம். | |
|---|---|---|
| முதலாம் யேம்ஸ் | 1603-1625 | 22 வரு |
| முதலாம் சாள்ஸ் | 1625-1649 | 24 வரு |
| பிரசாதிபத்திய ஆட்சி | 1649-1660 | 11 வரு |
| இரண்டாம் சாள்ஸ் | 1660-1685 | $24\frac{3}{4}$ வரு |
| இரண்டாம் யேம்ஸ் | 1685-1688 | $3\frac{3}{4}$ வரு |
| 3-ம் உவில்லியமும் மேரியும் | 1689-1702 | 13 வரு |
| அன் இராணி | 1702-1714 | 12 வரு |

## ஸ்ற்றியு ஆட் அரசர் பரம்பரை.



## சக்ராதிபத்திய வெற்றிக்காலம்.

## 1700—1815

## (The Century of War & Conquest.)

### ஆங்கிலேய பிரான்சிய யுத்த ஆரம்பம்.

பதினேழாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர் அமெரிக்காவிற் குடியேற்ற நாடுகளையும் இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் வியாபார ஸ்தாபனங்களையும் ஏனைய இராசாங்கத்தாருடன் அதிக சச்சரவின்றி இலேசாய்ச் சம்பாதித்தனர். ஆனுல் பதினெட்டாம் நூற்றுண்டிலோ ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா ஆகிய இம் மூன்று கண்டங்களிலும் ஒரே காலத்திலும், வெவ்வேறு காலங்களிலும் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் மகா யுத்தங்கள் நிகழ்வதாயின. முதலாவதாக, இரண்டாம் யேம்ஸ் அரசன் 1689-ல் நடந்த தேசகலகத் (Revolution of) தினிமித்தம் இங்கிலந்தை விட்டகன்று பிரான்சில் அடைக்கலம்புக, ஒல்லாந்து தேசத்ததிபனுகிய அவன் மருமகன் (மகள் மேரியின் புருஷன்) உவில்லிய மென்பான் ஆங்கிலேய சனத்தலே வரால ழைக்கப்பட்டு இங்கிலந்துக்கு அரசனுக முடிதரிக்கப் பெற்றனன். இதனுல் இதுகாறும் 1651-ல் ஏற்பட்ட ஆங்கிலேயரின் மாலுமிச்சட்டத்தினுலும், கீழைத்தேச வியாபார முன்னீட்டினுலும், ஒருவரோடொருவர் பெரும் பகைவராயிருந்த ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் ஒற்றுமைப்பட்டுத் தங்களிருசாதியாருக்கும் அயற்சாதியாரான பிரான்சியரின் பேரவாவையும் பெரும்பொருமையையுந் தடுக்க ஒருங்கு கூடி உழைத்தனர். பிரான்சுதேச அரசனுகிய பதினுலாம் லூயி (Louis XIV) யோ பேரவாவுடையவனும்,ஒல்லாந்தர்

மீது அவர்களடைந்த சுயாதீனத்தினிமித்தம் பேராழுக்காறுடையவனுமாயொழுகினன். மேலும் பிரான்சுக்கு வடகீழ்ப் பாகமாய்த் தனது தேசத்தைக் கூடியளவு கூட்டவேண்டுமென்றும், பழைய கண்டமாகிய ஐரோப்பாவில் மாத்திரமல்லப் புதிய கண்டமாகிய அமெரிக்காவிலுந் தனது ஆஞ்ஞையைச் செலுத்தித் தான் ஒப்புயர்வற்ற மன்னனெனப் புகழ்படைத்து வாழவேண்டுமென்று மவாவினன்.

1534-ல் பிரான்சியரால் கண்டுபிடிக்கப்பட்ட கனடா (Canada) தேசம் 1604-ல் அவர்களாற் குடியேறப்பெற்றுக் காலகதியிற் சிறந்து விளங்கியது. சிலகாலத்தின் பின்னர் கனடாவின் வடபாகங்களில் வசித்த பிரான்சியர் தெற்குப் புறமாகக் குடியேறிச் செல்லுதலும் ஆங்கிலேய குடியேற்ற நாடுகளையடைந்தனர். அதனால் அங்கு குடியேறிய ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் யுத்தம் நிகழ்ந்தது. குயிபெக் (Quebec) என்ற இடம் ஆங்கிலேயராற் பிடிக்கப்பட்டது. ஆனால் 1632-ல் சில சமாதான ஒழுங்குகள் செய்யப்பட்டுப் பிடிக்கப்பட்ட நாடுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. கடைசியாய், பிரான்சிய தேசாராய்ச்சிக்கரார் அங்குள்ள பெரிய வாவிகளையுந் தாண்டி மிசிசிப்பி (Mississippi) நதிவழியாய் மேக்சிக்கோக் குடாக்கடல்(Gulf of Mexico) வரைசென்று அதைச் சுற்றியிருக்கும் நாடுகளைத் தமதரசன் லூயியின் பேரால் லூயிசியானா (Louisiana) எனநாமமிட்டுப் பிரான்சிய நாடாக்கினர். இந்தவிதமாகப் பிரான்சியர் உள்நாடுகளையுந் தமதாட்சிக்குள் கொண்டுவர எத்தனித்ததால் ஆங்கிலேயர் தாம் செல்லவழியின்றிக் காடுக்கும் அலேக்கனி(Alleghany) மலைக்குமிடையிலகப்பட்டுச்சிடக்கவேண்டுமென்றஞ்சி வெருண்டனர். இப்படியிருக்குங் காலத்திலேயே மேற்கூறிய உவில்லியமும் ஒல்லாந்துதேசத்திலிருந்தும் இங்கிலந்துக்கு அரசனாக அழைக்கப்பட்டான்

இதுகாறும் இங்கிலந்துக்கு அரசனுயிருந்த இரண்டாம் யேம்ஸ் என்பானும் இதுபோதே பிரான்சையடைந்து லூயியின் உதவியை வேண்டினன். லூயியும் மேற்சொல்லிய பலகாரணங்களாலும் ஆங்கிலேயரை எதிர்க்கத் தலைப்பட்டனன். ஆதலால் 1689 க்கும் 1697 க்குமிடையில் பிரான்சியர் ஒரு கட்சியாகவும், ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் மறுகட்சியாகவும் யுத்தம் நிகழ்த்தினர். லா ஹோக் (La Hogue) என்னுங் கடற்போரிற் பிரான்சிய கடற்பட்டாளம் ஆங்கிலேயராலும் ஒல்லாந்தராலும் தோற்கடிக்கப்பட்டது. அதனுல் பிரான்சிய படையெழுச்சி பிரதிகூலமாக 1697-ல் ஓர்வித சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது (Treaty of Ryswick).

## அன் இராணி (Queen Anne 1702—1714)

வேந்தன் உவில்லியத்தின் அந்திய காலமாகிய 1702-ம் ஆண்டில் பிரான்சியரும் ஆங்கிலேயரும் மறுபடியும் யுத்தம் ஆரம்பித்தனர். இந்தயுத்தம் அன் இராணி காலத்தில் 1713 வரைக்கும் நடைபெற்றது. இதை ஸ்பானிய இராச்சிய உரிமை யுத்தமென்பர் (War of the Spanish Succession). 1700-ல் ஸ்பானிய அரசன் இறக்குந் தறுவாயில், தனக்குப் பட்டத்துக்குப் பிள்ளையில்லாமையால், தனது இராச்சியங்களைத் தனது உரிமைக்காரரிலொருவனுகிய பிரான்சிய தேசத்தரசன் பதினுலாம் லூயியின் பௌத்திரனுக்கு மரணசாதனஞ் செய்து கொடுத்தனன். இதனுல் ஏனைய உரிமையாளரும், அயற்சாதியாரான ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும், ஸ்பானிய இராச்சியங்கள் பிரான்சுடன் சேர்ந்தால் பிரான்சியர் ஐரோப்பாவில் மிதமிஞ்சிய வலிமையையும் ஆதிக்கத்தையும் பெற்றுவிடுவரென்றஞ்சி, தங்களுக்கிடையில்

ஓர் மகா உடன்படிக்கை (Grand Alliance) செய்து, பிரான்சியரை எதிர்த்துச் சமர்புரிந்தனர். இச்சமரில் டியூக் ஒவ் மாள்பரோ (Duke of Marlborough) என்னுஞ் சேனுபதி தனது காலத்திலும், அதற்கு முன்னும், பின் இதுவரையும், தனக்கு ஒப்பாரும் மிக்காருமான யுத்த வீரரில்லையெனத்தக்கதாகப் பிரான்சிய சைநியங்களை நிர்மூலமாக்கி வெற்றியை நாட்டினன். அத்தகைய சேனுபதி தான் புரிந்த எந்த யுத்தத்தையாவது வெல்லாது விடவுமில்லை, தான் முற்றிக்கையிட்ட எக்கோட்டையையாவது பிடியாமல் விடவுமில்லை. கடற்போரிலும் ஆங்கிலேயர் மத்தித்தரைக் கடலிலுள்ள ஜிபிறுல்றரை (Gibraltar) யும் மைனேக்கா (Minorca) தீவையும் வெற்றிகொண்டு பிடித்தனர். ஜிபிறுல்றரைப் பிடித்ததினுல் மத்தித்தரைக் கடலின் பிரதான திறவுகோல் ஆங்கிலேயர் கைவசப்பட்டது. அதனுல் ஆங்கிலேயரின் கடலாட்சிச் சுதந்தரம் மிகவும் வலிமைபெற்று விளங்குவதாயிற்று. 1713-ல் மேற்படி யுத்தம் சில சமாதான ஒழுங்குகளால் (The Treaty of Utrecht) முடிவெய்த, ஆங்கிலேயருக்கு மேற்சொல்லிய இடங்களும் அமெரிக்காவில் நியூபவுண்ட்லன்டும், நோவா ஸ்கோஷியா (Nova Scotia) வும் வெற்றி நாடுகளாகப் பிரான்சியராற் கையளிக்கப்பட்டன. மேலும் ஸ்பானிய இராச்சியங்களில் ஏனைய உரிமையாளருக்குப் பங்கு கொடுக்கப்பட்டது. கடலாட்சி வலிமையுங் கப்பற்சேனை வலிமையுங்கொண்ட பல இராச்சியங்களுடன் ஒன்ருக இதுவரையுங் கவனிக்கப் பட்டுவந்த இங்கிலந்து மேற்படி யுத்தத்தின் பின்னர் ஒப்புயர்வற்ற கடலாட்சித் திறனைப்பெற்றது. இச்சம்பவங்களைத்தவிர, இந்த நூற்றுண்டுத் தொடக்கத்தில் இன்னும் இரு விசேஷ சம்பவங்கள் நிகழ்ந்தன. 1700-ல் டாம்

பியர் (Dampier) என்னும் ஆங்கிலேயன் அவுஸ்திரேலியாவை முதன் முதல் ஆராய்ச்சிசெய்யத் தொடங்கினன். 1707-ல் இங்கிலந்தும் ஸ்கொத்திலந்தும் பெரிய பிரித்தானியா (Great Britain) என்னும் பெயருடன் ஒரு நாடாக்கப்பட்டு இருதேச பாராளுமன்றங்களும் ஒருங்கு சேர்க்கப்பட்டன. இதனல் ஸ்கொற்றியரும் ஆங்கிலேயருக்குரிய சிலாக்கியங்களிலெல்லாம் சரிவரப் பங்குபற்றும் உரிமை பூண்டனர்.

## முதலாம் ஜோர்ஜ்

## (George I: 1714—1727)

1689 வரைக்கும் சுயாதிபத்திய நாடென்றும், ஏகாதிபத்திய நாடென்றும் (Monarchy) சரித்திரகாரரால் வழங்கப்பட்டு வந்த இங்கிலந்து அதன் பின்னர் ஒருவாறு பாராளு மன்றத்துக்குக் கீழ்ப்பட்டு அதனல் ஏற்படுத்தப்பட்ட தேசசட்டங்களை மேற்கொண்டு வரையறுக்கப்பட்ட ஏகாதி பத்திய நாடாய் (Limited or Constitutional Monarchy) விளங்கியது. ஆகவே அரசரின் இராச்சிய தத்துவம் வலிகுறையவும் பாராளு மன்றத் தலைவரின் அதிகாரம் மேம்படவுந் தொடங்கின. ஆனல் முதலாம் ஜோர்ஜ் அரசன் காலத்திலோ மேற்படி இராசாதிகாரமும் இராச்சிய பாரமும் முற்ருய் அமைச்சர் பொறுப்பில், அதாவது பிரதம அமைச்சர் அல்லது முதல் மந்திரியென இந்த அரசன் காலந்தொட்டு அழைக்கப்பட்டு வந்த உத்தியோகஸ்தர் பொறுப்பில், வந்து விட்டன. முதலாம் யேம்ஸின் பௌத்திரி ஸோவையா (Sophia) என்பாள் ஜேர்மனிய தேசத்திலுள்ள ஹனோவர் (Hanover) நாட்டதிபனை மணந்து பெற்ற இந்த

ஜோர்ஜ் என்பானே மூன்றும் உவில்லியங் காலத்திற் கொண்டுவரப்பட்ட அரசுரிமைச் சட்டப்படி (Act of Settlement) அன் இராணிக்குப்பின் இங்கிலந்துக்கரச ஞகத் தெரியப்பட்டவன். அன்னவன் ஆங்கில மொழியை எழுதவோ, பேசவோ, வாசிக்கவோ அறியானும், அந்நிய ஞதலால் ஆங்கில அரசியல் விஷயத்தில் கிஞ்சித்துங் கரிசனையில்லானும் ஒழுக, அமைச்சர் சபை ஆலோ சனைக் கூட்டங்களுக்குச் சென்று இராச்சிய விஷயங்களை நிருவகிக்குஞ் சிலாக்கியத்தைப் பெற்றிலன். ஆனதனுல் அமைச்சர் தங்கள் மந்திராலோசனைச்சபை (The Cabinet) க்குத் தலைவனுக அரசன் சம்மதத்துடன் தங்களிலொரு வனையே தெரிந்தனர். அவ்விதந்தெரியப்பட்ட அமைச்சர் தலைவன் இந்த அரசன் காலந்தொட்டுப் பிரதம மந்திரி (Prime Minister) யென அழைக்கப்பட்டு வருகிறன். வழக்கத்தையே பிரமாணமாகக் கொள்ளும் ஆங்கிலேய பாராளு மன்றம் இவ்வேந்தன் காலந்தொடங்கி, அமைச் சர் ஆலோசனைச் சபைக்கு அரசனை அக்கிராசனனுகக் கொள்ளும் வழக்கத்தையுங் கைவிட்டது. மேலும் மந்திரி மாரால் கொண்டுவரப்பட்டுப் பாராளு மன்றத்தாலங்கீ கரிக்கப்பட்ட எப்பிரமாணத்தையுந் தடுக்கிற அல்லது நீக்குகிற வழக்கமும் அரசனுக்கில்லாது போயது. இந்த விதமாக அரசனது ஆஞ்ஞாசக்தி வரவரக்குன்ற, அமைச் சரதும் பாராளு மன்றத்தினதும் ஆதிக்கமே ஆங்கிலேய அரசுமுறையாயது. முதலாவதாயும், முதலாம் இரண் டாம் ஜோர்ஜ் அரசர் காலங்ளிலும் பிரதம மந்திரியாக உத்தியோகம் பார்த்து ஆங்கிலேய சாதியாரின் வியா பாரத்தை விருத்திசெய்தும், சண்டையின்றிச் சமாதா னத்தைக் கடைப்பிடித்துத் தென்கடற் குமிழி (The South Sea Bubble) யெனப் பெயரிய மகா வியாபார

சங்கத்தின் விருதா விளம்பரங்களால் ஏமாந்து தமது பொக்கிஷங்களையெல்லாம் அவ்வியாபாரசங்கத்தில் வீசிய ஏழைச் சனங்களையும் ஏனையோரையுந் தனது வரையற வான கணக்குவழக்கினாலும், பண வரவு செலவுத்திட்டச் சாமர்த்தியத்தினாலும், ஒருவாறு வீண் நட்டத்திலிருந்து இரட்சித்தும், கீர்த்திவாங்கிய மேதாவி, உவால்போல் (Walpole) என்பானே.

## இரண்டாம் ஜோர்ஜ்

## (George II: 1727—1760)

முதலாஞ் ஜோர்ஜின் மகன் இரண்டாஞ் ஜோர்ஜின் காலத்திலும் மந்திரிமாரின், அதாவது பிரதம மந்திரியாயிருந்தோரின், இராச்சிய பரிபாலன ஒழுங்குகளே அரசுமுறையாய் ஏற்பட்டன. சிலகாலங்களில் அரசனுக்கொவ்வாதோரும், அவனால் வெறுத்துத் தள்ளப்பட்டோரும் முதன்மந்திரியாக உத்தியோகம்பார்த்துத் தாங்களும் தங்கள் கட்சியும் நினைத்தபிரகாரம் யுத்தம் முதலிய விவகாரங்களிலீடுபட்டனர். இந்த இராசனது ஆளுகையின் கீழ் முதற் பன்னிரண்டுவருஷகாலமும் உவால்ப்போலே பிரதம மந்திரியாக இருந்தனன். அவன் அப்பன்னிரு வருஷமும் மேற்கூறிய பிரகாரம் கூடியளவு யுத்தத்தை நீக்கிச் சமாதானத்தைத் தாபித்து வியாபாரத்தை விருத்திசெய்து அரசிறை வரும்படியை அதிகரிப்பிக்கவும், அதனால் ஆங்கிலேய தேசியக்கடனைக் (National Debt) குறைக்கவும் வழி தேடினன். ஆனால் அவன் சில தீர்வைவரிகளைத் துறைமுகங்களிலறவிடாது உள்நாடுகளிலறவிடத்தக்கதாக ஓர் பிரமாணத்தைக் (The Excise Bill) கொண்டுவர, அப்பிரமாணம் வீடுகள் சோதிக்கப்படவேட்டிய ஒழுங்குகளுடன்

அமைக்கப்பட்டமையால், பொதுவாய் ஆங்கிலேயசாதியாரிற் பெரும்பாலார் அது தங்கள் சுயாதீனத்தைக் கெடுத்து விடுசோதிப்பதனுல் அநாவசியமான இடையூறுகளை வருவிக்குமென்று அவனை (உவால்போலே) எதிர்த்தமையும், மேலும் உவால்போல் சுயமரியாதையை இழக்கவேண்டி வந்தபட்சத்திலும் மாற்ருனை எதிர்த்துப் போர்செய்ய உடன்படாது சமாதானத்தையே கடைப்பிடித்தமையும், இராச்சியப்பொறுப்பை முற்றுய்த் தன் கைக்குள் வைத்துக்கொள்ளும் பேரவாவுடன் அநேகரைக் கைலஞ்சங் கொடுத்துத் தன் பட்சமாக்கினமையும், அவன் வீழ்ச்சிக்குக் காரணமாயின.

1733-ல் ஸ்பானிய பிரான்சிய அரசகுடும்பங்களுக்கிடையில் ஓர் இரகசியப்பொருத்தம் (The Family Compact) ஏற்பட்டது. மேற்படி இரு இராச்சியங்களும் ஒரேகுடும்பத்தைச் சார்ந்தவையாதலால், தங்களுக்குப் பொதுச் சத்துராதிகளான ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கமே அப்பொருத்தத்தின் இலக்காகவிருந்தது. தென் அமெரிக்காவிலுள்ள ஸ்பானிய நாடுகளுடன் இதுவரையும் நடந்துவந்த ஆங்கிலேயரின் வியாபாரத்தை ஸ்பானியர் படிப்படியாய்க் குறைத்து ஈற்றில் அவ் வியாபார சிலாக்கியங்களைப் பிரான்சியருக்குக் கொடுப்பதாகவும், அதற்குக் கைமாருக ஜிபிருல்ற்றரை ஆங்கிலேயரிலிருந்துங் கைப்பற்றப் பிரான்சியர் ஸ்பானியருக்கு வேண்டியஉதவிசெய்வதாகவும், மேற்படி இருதேச அரசரும் ஓர் அந்தரங்க உடன்பாடுசெய்தனர். அவ்வுடன்பாட்டை ஆங்கிலேயர் அந்நேரம் அறிந்திலர். ஆனல், இதனுற்ருன் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் குடியேற்ற நாடுகளையிட்டும் வியாபார முன்னீட்டையிட்டும் மகாயுத்தங்கள் நிகழ்வதாயின.

ஜிபிரால்றரை இழந்தமைபற்றி ஸ்பானியர் கிஞ்சித்தும் மனஞ் சகியாராய் அதை மறுபடியும் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்ற எத்தனித்தனர். அதனிமித்தம் பிற சாதியார் தங்கள் குடியேற்ற நாடுகளில் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரஞ் செய்ய வொண்ணாதென ஸ்பானியர் ஓர் சட்டமும் பிறப்பித்தனர். ஆங்கிலேயரோ தங்கள் சாமான்களைக் களவாய்க் கொண்டுசென்று ஸ்பானிய துறைமுகங்களி லிறக்கினர். அதனால் ஸ்பானியர் ஆங்கிலேய கப்பல்களைப் பரிசோதிக்கத் தங்களுக்குரித்திருக்கிறதென்று வாதித்துச் சோதனைத் தொழிலையதி கடினமாய் நடாத்தினர். ஒருமுறை ஆங்கிலேய கற்பித்தானொருவனின் (Captain Jenkins) காதுகளைவெட்டி அவனை மானபங்கப் படுத்தினராம். இச்செய்தியை யறிந்த உவால்போலின் விரோதிகள் ஆங்கிலேயர் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றவேண்டின் ஸ்பானியருடன் சமருக்குச் செல்லவேண்டுமென்று வாதித்து ஊரில் ஓர் யுத்தக்கிளர்ச்சியை யுண்டாக்க, சமாதானப் பிரியனான உவால்போலும் தனது விருப்பத்துக்குமாறாக யுத்தத்தை ஆரம்பிக்க ஏவப்பட்டான். ஆனால் சடுதியில் வேறுஞ் சில சம்பவங்கள் மேற்படி யுத்தத்துடன் சம்பந்தப்பட்டு அநேக ஐரோப்பிய இராச்சியங்களை யுத்தத்திலீடுபடுத்தி விட்டன.

அவுஸ்திரியா, ஜேர்மனி, ஹங்கேரி முதலிய ஐரோப்பிய தேசங்கட்குச் சக்கரவர்த்தியென அழைக்கப்பட்ட ஆறும் சாள்ஸ் (Emperor Charles VI) பட்டத்துக்குப் புத்திரனில்லாமையால் தனது மகளைப் பட்டத்து ஸ்திரியாக்கும் வண்ணம் ஏனைய ஐரோப்பிய மகா தத்துவ இராச்சியங்களுடன் ஒருவித ஒழுங்கு (Pragmatic Sanc-

tion) செய்துவைத் திறந்தான். ஆனால் 1740-ல் சக்ரவர்த்தி யிறக்க, அவ்வொழுங்குகளுக்கெல்லாங் கைச்சாத்திட்டுச் சம்மதங்கொடுத்த சிலர் சக்ரவர்த்தியின் நாடுகளைப்பிடித்துத் தமதாட்சிக் குள்ளாக்கினர். பிறஷியா தேசத்ததிபன் மகா விறெடெறிக் (Frederick II or the Great) என்பான் ஸிலீஷியா (Silesia) வைப்பிடிக்க, பவேரிய (Bavaria) மாகாணாதிகாரி அவுஸ்திரியா தனக்குச் சேரவேண்டுமென்று வாதாடினன். பிரான்சியரும் ஸ்பானியரும் பவேரிய சிற்றரசனைச் சார்ந்துநின்று சமர்செய்தனர். ஐரோப்பிய இராச்சியங்களின் சமதத்துவநிலை (Balance of Power) யைப் பிரான்சியரும் ஸ்பானியரும் ஒருங்கு சேர்ந்து கெடுத்து, அவர்கள் மிதமிஞ்சிய தத்துவ இராச்சியங்களாகாவண்ணம், சக்ரவர்த்தியின் மகள் மேரியா திறேஸா(Maria Theresa) பக்கத்தைச்சார்ந்து ஆங்கிலேயர் யுத்தஞ் செய்தனர்.

1744-ல் பிரான்சியர் இங்கிலந்துக்குப் படையெடுத்துச்செல்ல முயன்றனர். இரண்டாம் யேம்ஸின் சந்ததியானுகிய போனி பிறின்ஸ் சாள்ஸ் (Bonnie Prince Charles) என்பானை அல்லது அவன்பிதாவை ஆங்கிலேய அரசனுக்குவதே மேற்படி படையெழுச்சியின் நோக்கமாயிருந்தது. ஆனால் பிரான்சிய யுத்தக்கப்பல்கள் புயலிலகப்படவேண்டி நேரிட்டபடியால், படையெழுச்சி தடைப்பட்டது. எனினும், சாள்ஸ் அடுத்தவருடம் (1745) ஸ்கொத்திலந்துக்குச் சென்று தனது ஆண்மையினுலும், அழகினுலும், வாக்குவல்லபத்தினுலும் ஸ்கொற்றிய சேனையொன்றைச்சேர்த்து ஸ்கொத்திலந்து முழுவதையுஞ் சிலநாளைக்குட் பிடித்தும், தனதுபிதாவை ஸ்கொத்திலந்துக்கரசனுகப் பிரசித்தஞ் செய்தும், ஸ்கொத்திலந்தைக் கடந்து இங்கிலந்துக்குப் படையெடுத்துச் சென்றும் ஆங்கிலேயரைக் கலக்கினன்.

ஆனால் ஈற்றில் நெடுநாட்பிரயாணத்தாலும், காத்திருந்த வண்ணம் உதவியகப்படாமையாலும், வேறுஞ்சில தாமதங்களாலும் ஸ்கொற்றியர் மனஞ்சோர்ந்து மறுபடியுந் தமது நாட்டைநோக்க, ஆங்கிலேயர் பின்தொடர்ந்து தாக்கி அவர்களைச் சின்னாபின்னப்படுத்தினர். சாள்ஸ் இளவரசனும் ஓட்டம்பிடித்தனன். ஸ்கொற்றிய மலைநாட்டுப் போர்வீரர் (Highlanders) நிராயுதராக்கப்பட்டுப் போராவேசங் குறைக்கப்பட்டனர். ஏனைய யுத்தங்களும் 1748-ல் ஓர்வித சமாதானத்துடன் (Treaty of Auxla Chapelle) முடிவெய்தின.

பிரான்சியரும் ஆங்கிலேயரும் ஐரோப்பாவில் ஓரளவிற் சமாதானமாய்வாழ, மழை விட்டுந் தூவானம் மாறவில்லை யென்றாற்போல, மேற்படி இருசாதியாரும் முதல் இந்தியாவிலும், பின்னர் அமெரிக்காவிலுங் குடியேற்றநாடுகளைச் சம்பாதிப்பதில் ஒருவரோடொருவர் பகைசாதித்துக் கங்கணங்கட்டிப் பொருதுமெல்லையில் நின்றனர். சிலவருடங்களின்பின் ஐரோப்பாவிலும் யுத்தம்புதிதாய் ஆரம்பமாகப் பல ஏதுக்களிருந்தன. ஸிலீஷியா மாகாணத்தை விறெடெறிக் அபகரித்துக்கொண்டமைபற்றி மேரியா திறெஸாவின் மனம் இன்னும் புண்ணாகி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் விறெடெறிக்கின் நாட்டாண்மையைக்கண்டு ரூஷியா, சுவீடின், ஸாக்சனி, போலன்ட் முதலிய அயல்நாடுகள் அவன்மீது அழுக்காறுகொண்டு மேரியா திறெஸாவுக்குதவிபுரிய முன்வந்தன. ஆகவே சப்தாண்டு யுத்தமெனப் (The Seven Years' War) பெயரிய கொடும்போர் ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியாவாகிய முக்கண்டங்களிலும் ஆரம்பமானது (1756). ஆங்கிலேயர் முன்நிகழ்ந்த யுத்தத்தில் தாம் உதவிபுரிந்த சக்ரவர்த்தி

யின்மகள் மேரியாதிறெஸா பக்கத்தை இத்தருணத்திற் சாராது, விறெடெறிக்பக்கத்தை நாடினர். ஏனெனில் பிரான்சை எதிர்ப்பதே ஆங்கிலேயரின் பிரதானநோக்கம்; மேரியா திறெஸா பிரான்சியபக்கத்தை யடைந்தபடியால், ஆங்கிலேயர் அவளைக்கைவிட்டு விறெடெறிக் பக்கத்தைச் சார்ந்தனர். எனவே விறெடெறிக்கும் ஆங்கிலேயரும் ஒரு புறமாகவும் பிரான்சுமுதலிய மேற்கூறிய ஆறு ஐரோப்பிய தத்துவராச்சியங்கள் மறுபுறமாகவும் இந்தச் சப்தாண்டு யுத்தம் நிகழ்ந்தது.

சமாதானப் பிரியனுன உவால்போல் 1740 அளவில் பகைவரினிமித்தந் தனது உத்தியோகப்பதவியை விட்டு நீங்க, யுத்தப்பிரியர்சிலர் பிரதம மந்திரிகளாகத் தெரியப் பட்டார். இந்தச் சப்தாண்டு மகாயுத்தம் நிகழ்ந்த காலத்தில் பிரதம மந்திரியாயிருந்து யுத்த நடவடிக்கைகளையும் ஏனைய இராச்சிய விஷயங்களையுங்கொண்டு நடாத்தியவன் சதாம் (Chatham) எனப் பின்னர் அழைக்கப்பட்ட முதலாவது உவில்லியம் பிற் (William Pitt the Elder) ஆவான். அவன் அரசனுல் விரும்பப்படாத ஒருவனுயிருந்த பட்சத் திலும், அவனது திறனேக்கி அவனையே அத்தருணத்தில் பிரதமமந்திரிமாரிருவரி லொருவனுகவும், எவ்விஷயத்துக் குங் காரியஸ்தனுகவும், ஏனைய இராசதந்திரிகள் தெரிந் தனர். அவன் தனது நேர்மையான ஒழுக்கத்தினுலும், மனஞ்சோராத ஊக்கத்தினுலும், ததும்பிய தேசாபிமானத் தினுலும், யாவரையுங் கவரக்கூடிய வாக்குச்சாதுரியத்தினு லும், பகைவருமஞ்சக்கூடிய திடசித்தத்தினுலுஞ் செய்வ தென்னவென்றறியாது ஏங்கித் தியங்கிக்கிடந்த ஆங்கிலே யசாதியாரை விழிக்கச் செய்துந் தைரியப்படுத்தியும் நாற்புறங்களிலும் நடந்த யுத்தத்தை நாநாவித யுக்தி தந்திர சூட்சிகளுடன் நன்குநடாத்தினன். பிரான்சியர் தமது

நாட்டாண்மையை ஐரோப்பாவில் மாத்திரமல்லக் குடியேற்றநாடுகளிலும் நிலைநிறுத்த வேண்டுமெனப் பேரவாக்கொண்டு தமது ஊக்கத்தைப் பலபாகங்களிலுஞ் செலுத்தினர். சதாம் என்னும் ஆங்கிலேய மந்திரியோ மேற்படி மூன்றுகண்டங்களிலும் ஒரேதன்மையாய்ப் போர்புரிவது கஷ்டமென்றும் பெலக்குறைவென்றுமறிந்து, ஐரோப்பிய யுத்தத்தில் தனது கட்சியானகிய விறெடெறிக் என்பானுக்கு வேண்டிய பணம் உதவி, அவனைப் பிரான்சியரோடு சண்டையை மும்முரமாக நடாத்தும்படிஏவ, பிரான்சியர் தம்நாட்டைப் பாதுகாக்கும்வண்ணம். தம் முழுக்கவனத்தையும் ஐரோப்பாவிலேயே செலுத்த, இந்தியா, அமெரிக்காமுதலிய குடியேற்றநாடுகளிலும் கடலாட்சி முகாமையிலும் ஆங்கிலேயர் கண்ணுங்கருத்துமாயிருந்து பிரான்சியரை வேண்டிய வேண்டிய இடங்களிலெல்லாம் அபஜெயப் படுத்தினர். யுத்தம் ஆரம்பமானபோதே சதாம் என்னும் இந்த முதலாம் பிற் தானன்றி வேறொருவனும் இங்கிலந்தை மேற்படி யுத்தத்தில் பாதுகாக்க மாட்டானென்றும், இந்திய அமெரிக்க குடியேற்றநாடுகளை ஐரோப்பிய யுத்தத்தால் தான் வெல்வனென்றும், தனது சக்தியில் பூரண விசுவாசமும் பெருமையுமுடையனாய் உறுதிமொழி கூறினன். உண்மையாய் அவன் சொன்ன பிரகாரமே யுத்த சம்பவங்களும் நிகழ்ந்தன. எப்படியெனில், விறெடெறிக் மகா சாமர்த்தியமாய் ஐரோப்பிய யுத்தத்தை நடாத்தப் பிரான்சியர் தங்கள்நாட்டைக் காக்கும்பொருட்டுத் தங்கள் சைநியங்களை ஐரோப்பாவிலேயே வைத்திருக்கவேண்டியவர்களானர். ஆதலால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பிரான்சியசைநியங்கள் செல்லமுடியாமற் போயின. எனவே பிரான்சியர் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஆங்கிலேயராற் தோற்கடிக்கப்பட்டு குடியேற்றநாடுகளை இழந்தமை நூதனமல்ல.

ஐரோப்பாவில் விற்றெற்றிக் என்பவனுக்கு உதவி புரிவதோடு, பிரான்சிய கடற்பட்டாளம் இங்கிலந்துக்குப் படையெடுத்துச் செல்லாவண்ணந் தடுக்கவும் அதையழிக்கவும் ஆங்கிலேயர் முயன்றனர். ஆங்கிலேயரை எதிர்ப்பதற்குக் கடற்பட்டாளமே பெரிதும் வேண்டற்பாலதெனவுணர்ந்து சமாதான காலத்தில் அதைப் பெருப்பித்தும் பெலப்படுத்தியும் வைத்திருந்த பிரான்சியர் யுத்த ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயரிடமிருந்து மைனேக்கா தீவைக் கைப்பற்றியும், கனடாதேசத்துக்குச் சைநியங்களை அனுப்பியும், இங்கிலந்துக்கும் படையெடுத்துச் செல்லத் துணிந்தனர். ஆனல் ஹோக் (Hawke) என்னும் ஆங்கிலேய தளகர்த்தன் கனடாதேசத்துக்குச் சைநியங்களை ஏற்றிச்சென்ற பிரான்சிய கப்பல்களைத் தாக்கி அவையனைத்தையும் ஆழிவாய்ப்படச் செய்தனன். இங்கிலந்தைநாடிவந்த பிரான்சிய கப்பற் சைநியங்கள் இருதுறைப்பட போஸ்கோவேன் (Admiral Boscawen) என்னும் ஆங்கிலேய கப்பற்சேனுபதி போர்த்துக்கல் கரைக்குச் சமீபமாக ஓர்பகுதியைச் சந்தித்துத் தோற்கடித்தான். ஏனைய பிரான்சிய கப்பற்படையை ஹோக் என்பான் குவிபறன் (Battle of Quiberan Bay) குடாக்கடலிற் சந்தித்துப் பொருதி முற்றுயழித்தனன். ஆகவே பிரான்சிய கப்பற் சேனைகள் நிர்மூலமாய்ச் சிதைக்கப்பட்டன. அத்துடன்பிரான்சிய படையெழுச்சியும் அவலமாய் முடிந்தது.

முன்கூறிய பிரகாரம் அமெரிக்காவிலும் முதன்மையையிட்டு ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கு மிடையில் அநேக குழப்பங்களிருந்தன. தெற்கே வுளோறிடா (Florida) தொடங்கி வடக்கே லோறென்ஸ் குடாக்கடல் (The Gulf of St. Lawrence) வரை ஆங்கிலேய குடி-

யேற்ற நாடுகளிருந்தன. பிரான்சியரோ லோறேன்ஸ் நதியின் முகத்துவாரந் தொடங்கிப் பெரியவாவிகள் (The Great Lakes) ஈறுகவுள்ள கனடா தேசத்தையும் மிசிசிப்பி நதியோரமாய் லூசியானுவையும் அரசாட்சி பண்ணினர். மேற்படி ஆங்கிலேய நாடுகளுக்கும் பிரான்சிய நாடுகளுக்குமிடையில் ஒஹியோ (The Ohio) நதியையடுத்த செழிப்பான பள்ளத்தாக்கிருந்தது. இந்தப் பள்ளத்தாக்கை யிட்டுத்தான் அமெரிக்காவிற் சப்தாண்டு யுத்தக்கிளர்ச்சி பரவியது. கனடாவையும் லூசியானுவையும் ஒருங்குசேர்ப்பதற்கு அப்பள்ளத்தாக்குப் பிரான்சியருக்கு அவசியஞ்சேர வேண்டியிருந்தது. அனுலப்படிச் சேர்க்கப்பட்டால் ஆங்கிலேயர் சமுத்திரத்துக்கும் அலெக்கனி மலேக்குமிடையி லடைபட்டுப் போவர். ஆதலால் அதைப் பிரான்சியர் பிடிக்க ஆங்கிலேயர் இடங்கொடார். மேலும், நாகரிகத்தையிட்டும் இருசாதியாருக்கு மிடையில் அதிக அழுக்காறிருந்தது.

சப்தாண்டு யுத்தம் ஆரம்பமாகு முன்னரே அமெரிக்காவில் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் கலகங்களிருந்தன. முதன் முதல் பிரான்சியர் ஒஹியோ நதியோரங்களில் அநேக கோட்டைகளேத் தொடுத்துக் கட்டி அவ்விடங்களே அரண்படுத்தினர். ஆங்கிலேயர் அதைத்தடுக்க முயன்று பிறடோக் (Braddock) கென்னுஞ் சேனுபதியை ஓர் சேனேயுடன் யுத்தத்துக்கனுப்ப, பிரான்சியர் அவனேத் தோற்கடித்துக் கொன்றனர். இத்தறுவாயில் சப்தாண்டு யுத்தமும் ஆரம்பமாயது.

லோறென்ஸ் நதி முகத்துவாரத்தையும் மிசிசிப்பி நதியையும் பிரான்சியர் அரண்செய்து தங்கள் சேனேகளே அவ்விடங்களில் நிலேநிறுத்தி விட்டால் அவர்களேத் தோற்

சடிக்க முடியாதென்று கண்ட யுத்த மந்திரி சதாம் கடல் மார்க்கமாய் லோறென்ஸ் நதி முகத்துவாரத்தை ஓர் சைநியமும், ஒஹியோ நதி தீரத்திலமைக்கப்பட்ட கோட்டைகளை இன்னோர் சேனையுந்தாக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். ஆங்கிலேயர் அவ்வாறு தாக்கி முகத்துவாரத்திலுள்ள லூயிஸ்பேர்க் (Louisburg) கையும் ஒஹியோ நதிக் கோட்டைகளையும் பிடித்து, கனடாவையும் லூசியானவையும் ஒருங்குசேரவொட்டாது தடுத்தனர். அப்பால் கனடாவை ஆங்கிலேயர் லேசாய்ப் பிடிப்பரென யாவருமெண்ணினர். ஆனல் பிரான்சிய சேனபதியாகிய மோன்ற்காம் (Montecalm) என்பானே தங்கள் பெலவீனமான நிலையைக் கண்டு குவிபெக் (Quebec) கென்னும் ஓர் அரண்செய்த இடத்தையண்டித் தனது சேனையை நிறுத்தினன்.

இப்படியிருக்கும் பட்சத்தில் சதாம் சேனபதித்துவத்தை உவுல்வ் (Wolfe) என்னுமோர் யௌவன புருஷனிடம் ஒப்படைத்தான். உவுல்வ் இருபத்தொரு வயதாவதற்கு முன்னரே எழுபோர்களில் பங்குபற்றிப்பொருது அநுபவம் வாய்ந்தவனானன். லூயிஸ்பேர்க்கைப் பிடித்ததிலும் இவனே பேர்வாங்கியவன். ஆதலால் இவனே கனடாவைப் பிடிக்கத்தக்க தைரியசாலியெனச் சதாம் எண்ணிக் குவிபெக் கைப் பிடிக்கும்படி இவனையே விடுத்தனன். 9000 பேரைக் கொண்ட சைநியத்தோடு சென்ற உவுல்வ் மலைத்திடரினிற்கும் 16, 000 பிரான்சியரை எதிர்க்கவேனும் தாக்கவேனும் இயலாது அநேக வாரங்களை வீணே கழித்து மனஞ்சோர்ந்தனன். எனினும், காத்திராப்பிரகாரம் அவன் மனதில் ஓர் வழிதட்டுப்பட்டது. உடனே அன்றிராத் தனது சைநியங்களை ஓர் சிறுகால்வாய் வழியாய்ச் சத்தமின்றி வள்ளத்திலேற்றிச்

சென்று மலேக்கேறும் ஓர் செங்குத்தான பாதையை யடைந்தனன். பொழுது விடியுமுன் ஆங்கிலேயரனைவரும் ஆபிரகாம் மலேத்திடரை (Heights of Abraham) யடைந்தனர். ஒருவாறு ஒரு பீரங்கியையுங் குன்றின் மேலிழுத்துச் சென்றனர். விடிந்தவுடனே ஆங்கிலேயரை அம் மலேத்திடரிற் கண்ட பிரான்சியர் ஆச்சரியப்பட்டுத் திகிலடைந்தனர். பின்னர் இருசாதியாருஞ் சமதரையில் நின்று யுத்தம் புரிந்தனர். ஆங்கிலேயர் பிரான்சியரைத் தாக்கி முடுகிச்செல்லப் பிரான்சியர் பின்வாங்கினர். அத்தருணத்தில் சேனபதியாகிய உவுல்வ் ஓர் குண்டினுல் காயப்பட்டு வீழ்ந்தனன். பிரான்சிய சேனபதியாகிய மொன்ற்காமும் அக்கணத்தே கொல்லப்பட்டான். சிலநாட்களின் பின்னர் குவிபெக் பிடிபட்டுக் கனடாமுழுவதும் ஆங்கிலேயர் கைவசப்பட்டது. அக்காலந்தொட்டு இன்றுவரை கனடா ஆங்கிலேய சக்ராதிபத்திய நாடுகளுள் ஒன்ருய் விளங்குகின்றது.

## ஆங்கிலேயரும் இந்தியாவும்.

இக்காலத்தில் பசிப்பிணியால் வருந்தும் இந்தியாவானது முற்காலத்தில் "பொன் விளேயும் பூமி" யெனப் பெயரும் புகழும் படைத்திருந்தது. அக்காலத்தில் இந்தியா அடைந்திருந்த செல்வச்செழிப்பையும் மற்றுஞ் சீர்சிறப்பையும் அறிந்த ஐரோப்பியசாதியார் ஒருவர் பின்ஞெருவராய் இங்கே வந்து வியாபாரஞ்செய்யத் தலேப்பட்டார்கள். முதன் முதலாக இங்கே வந்தவர் போர்த்துக் கீசரெனப்படுவர். அவர்களேப் பின்பற்றி வந்தோர் ஒல்லாந்தர். அப்பால்வந்தவர்கள் ஆங்கிலேயரும் பிரான்சியருமாவர். அண்டினவர்களே ஆதரிப்பதே இந்தியாவின் சரித்திரபரம்பரை. ஆதலால் இங்குவந்து வசிக்கவும் வியா

பாரஞ் செய்யவும் முயன்ற பற்பல ஐரோப்பியரும் இலேசாய் இடம்பெற்றனர். இற்றைக்கும் நிலையாய் நிற்பவர்கள் ஆங்கிலேயர், பிரான்சியர், போர்த்துக்கீசராகிய இவர்களே. ஆனால் பின் கூறிய இருசாதியாருக்கும் இச்சமயம் இந்தியாவில் மூன்று நான்கு நகரங்கள் மாத்திரமே உரிமையாயிருக்கின்றன. ஆங்கிலேயருக்குத்தான் தேசமெங்கும் சர்வாஞ்ஞை இருந்து வருகிறது.

போர்த்துக்கீசர் ஒல்லாந்தராலும், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் பிரான்சியரென்னும் இருசாதியாராலும், கீழைத்தேசங்களிலிருந்தும் துரத்தப்பட, ஆங்கிலேயரும் பிரான்சியருமே இந்தியாவில் வியாபார ஸ்தாபனங்களை அநேகமாக ஏற்படுத்திக் குடிகொண்டனர். ஆங்கிலேய வியாபாரிகள் சிலர் இந்தியா முதலிய கீழைத்தேசங்களுடன் வர்த்தகஞ் செய்வதற்கு இங்கிலந்தை ஆண்டுவந்த அரசி எலிசபெத் இராணியிடமிருந்தும் 1600-ம் வருஷத்தில் அநுமதிபெற்று ஓர் சாதனத்தையும் பெற்றனரென முன்னே கூறினேம். அவ்வாறு அநுமதிபெற்ற ஓர் கூட்டம் வியாபாரிகள் 1606-ம் வருஷமளவில் இந்தியாவின் மேலைக்கடற்கரையில் வந்து இறங்கினர்கள். அக்காலம் இந்தியாவை ஆண்டுவந்த மகமதிய சமயத்தானகிய மோகலிய சக்ரவர்த்தி ஜெகாங்கீர் (Jehangir) ஆவன். அவனுடைய தயவால் மேலைக்கடற்கரையில் சூரத், காம்பே (Cambay) ஆமதாபாத் முதலிய இடங்களில் ஆங்கிலேயர் பண்டகசாலைகளை அமைத்துக்கொண்டனர். ஆனால் ஆங்கிலேயரையும் மோகலிய சக்ரவர்த்தியையும் பகைவராக்கவும், ஆங்கிலேயர் இந்தியாவில் இடம்பெறுதொழியவும், போர்த்துக்கீசர் சில சூழ்ச்சிகள் செய்தனர். அவற்றையறிந்த ஆங்கிலேயர் போர்த்துக்கீசரைத் தாக்கி மேற்குக்கடலில் அவர்களைத் தோற்கடித்தனர். மேலும்

ஆங்கில வியாபாரிகளுக்கு இந்தியாவிற் சிலாக்கியங்களைப் பெற்றுக்கொடுக்கும்படி இங்கிலந்திலிருந்தும் முதலாம் யேம்ஸ் அரசனால் மோகலிய சக்ரவர்த்தியின் சமஸ்தானத்துக்கு 1615-ல் சேர் தோமஸ் றே (Sir Thomas Roe) வென்னும் இராசதூதன் அனுப்பப்பட்டான். அவ்வொற்றனை மோகலிய சக்ரவர்த்தியின் அரண்மனையில் மூன்று வருடம் வசித்து ஆங்கிலேயருக்கு வேண்டிய சிலாக்கியங்களை யெல்லாம் சம்பாதித்துக் கொடுத்தனன். அவற்றின்பயனாகக் கீழைக் கடற்கரையிலுள்ள மசூலிப் பட்டினம், பெற்றூப்பள்ளி முதலிய இடங்களிலும் 1616-ல் ஆங்கிலேயரால் பண்டகசாலைகள் அமைக்கப்பட்டன. பின்பு 1639-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் சந்திரகிரி இராசனது அன்பிற்கு ஆளாய் இப்போ சென்னைபுரி (Madras) யென்றழைக்கப்படுகிற இடத்திலும் ஒரு பண்டகசாலை யமைத்தனர். இச்சென்னைபுரி மோகலிய சக்ரவர்த்தியின் ஆஞ்ஞைக்கப்பாலிருந்தமையால் ஆங்கிலேயர் தாமே தம்மைப் பாதுகாக்க வேண்டியவர்களாய், அவ்விடத்தில் ஓர் கோட்டை (Fort St. George) யைக்கட்டித் துப்பாக்கி, பீரங்கி முதலிய யுத்தக்கருவிகளையும் அமைத்து, சில போர்வீரர்களையும் அங்குவசிக்கச் செய்தனர். 1633-ல் வங்காளத்தில் ஹரிஹரப்பூர், பலாசூர் என்னுமிடங்களில் ஆங்கிலேய பண்டகசாலைகள் ஏற்பட்டன. 1651-ல் இங்கிலந்துக்கு அரசனாயிருந்த இரண்டாம் சாள்சுக்கு அவன் மனைவி மூலமாகப் பம்பாய் (Bombay) த்தீவு முழுவதும் சீதனமாய்ப் போர்த்துக்கீசரால் கொடுபட, அரசன் அதை 1658-ல் கீழைத்தேச ஆங்கிலேய வியாபாரிகளுக்கு நன்கொடையாக ஈந்தனன். 1698-ல் கல்கத்தா நகரும் ஸ்தாபனமாயது. சென்னையிற்போல கல்கத்தா, பம்பாய் ஆகியநகரங்களிலும் ஆங்கிலேயர் கோட்டைக

ளைக்கட்டி தங்கள் பண்டகசாலைகளைக் காவல் புரிந்து நிற்ப தற்காகப் போர்வீரர்களையும் அங்கு அமர்த்திக்கொள்ள லாயினர். பிழைக்கவந்தவர்களைத் துரத்திவிட மனங் கொள்ளாத இத்தேச வேந்தர்பலரும் ஆங்கிலேய வியா பாரிகளுக்கு வேண்டிய சௌகரியங்களையுஞ் சாதனங் களையுந் தேடிக்கொடுக்கப் பின்னிரங்கவில்லை. தவிர, ஆங் கிலேயர் இங்கே கால்வைத்த காலமும் அவர்களுக்கோர் அதிட்டகாலமாயிருந்தது. ஏனெனில் அவர்கள் வியா பாரம் ஓர் பக்கமாய் ஓங்கிவர, மற்றொருபக்கத்திலோ அவர்களுக்கு விசேஷ உரிமைகளும், சாதனங்களும், ஆதரவும் வலியவந்து கொண்டிருந்தன. இப்படியிருக் கும் நாளில் இதுகாறும் இந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த மோகலிய சக்ராதிபத்தியமானது 1707-ம் வருடத்தில் அவுரங்கசீப் பென்னும் சக்ரவர்த்தியின் மர ணத்தால் சின்னபின்னமாயிற்று. ஆகவே இந்தியாவின் பல பாகங்களும் சிற்றரசர் நாடுகளாயின. அதனால் அச் சிற்றரசருக்குட் பெருஞ் சச்சரவும் உட்பகையு முதிக்க லாயின. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு நற்கால மென்றாற்போல ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு இச்சமயம் ஓர் நற்சமயமாயது. எனவே அவர்களின் தந்திரம், மித் திரபேதம், சமயோசித ஊக்கம், சூழ்ச்சி முதலிய கார ணங்களினால் அவர்களுக்கு இந்தியாவில் அநேக தேசங் கள் கைவசமாயின. ஆனதும், ஆங்கிலேயர் வியாபார வருமானத்துடன் மாத்திரம் திருப்தியடையாது, தங்க ளுக்குக் கீழ்ப்பட்ட தேசங்களில் வரிமுதலியன விதித்து அவற்றாலும் பெரிய நிதியைத் திரட்டினார்கள். வியாபார வருமானம் ஒருபுறமிருக்க வரிவருமானத்தைக் கொண்டே தம் கோட்டைகொத்தளங்களைக் காத்துக்கொள்ள வேண்டு மென்றும் இந்தியாவில் தாம் நிலையாய் நின்றுவிடவேண்டு

மென்றும் ஏலவே தீர்மானித்துக் கொண்டனர். காரியம் இப்படியிருக்க, இந்தியாவைப் பிடிக்க ஆங்கிலேயர் ஒருகால மும் எண்ணியிருக்கவில்லையென்றும், வேறுமென்று யாதா மொரு பிரயத்தனமும் அவர்கள் செய்யவில்லையென்றும், அவர்கள் வியாபாரத்தை மாத்திரம் நோக்கி இங்குவர, இரா ச்சியபாரம் தானுயோ தற்செயலாயோ அவர்கள் தோள்மே லேறிக்கொண்டதென்றும் வாதிக்குஞ் சரித்திரகாரரின் மதி இருந்தவாறென்னே?

மோகலிய சக்ராதிபத்தியம் நிலைகுலைய, இந்தியாவில் அப்போ குடியேறியிருந்த ஐரோப்பியர் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்றபடி இதுதான் நற்சமய மென்று தங்கள் பண்டகசாலைகளிலெல்லாம் போர்வீரர்களை வைத்தும் சில இடங்களில் கோட்டைகளைத் தாபித்தும் இந்தியாவில் தங்களுக்கு இராச்சிய நாடுகளைச் சம்பாதிக்க ஆரம்பித்தனர் அவ்விதம் இந்தியாவில் நாடுகளைச் சேர்க்க முதன் முதல் வழிகண்டோர் டூமோ (Dumas) டூப்ளே (Dupleix) என்னுமிரு பிரான்சியராவர். பிரான்சியரின் பிரயத் தனங்களைக் கண்ட ஆங்கிலேயரும் அருட்சியடைந்து தாமும் இந்தியாவில் நாடுகளைத் தேடமுயன்றனர். ஆனால் புதுச்சேரி (Pondicheri) யில் பிரான்சிய தேசாதிபதியா யிருந்த டூப்ளேயோ தென் இந்தியாவிற் பிரான்சியரன்றி ஏனைய ஐரோப்பியர் இடம்பெறுவண்ணம் தனது வலிமை யை நாட்டப் பலவாறு சிரமப்பட்டனன். அதனால் ஆங்கி லேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் தென் இந்தியாவில் யுத்தம் நிகழவேண்டி வந்தது.

### இந்தியாவில் ஆங்கில பிரான்சிய முதலாம் யுத்தம். (1744—1748)

ஆங்கிலேயர் இந்தியாவுக்குவந்து அநேக வருஷங்கள் சென்றபின்னர் பிரான்சியரும் இங்குவந்து சூரத் (1668),

புதுச்சேரி (1672) சந்திரநகர் முதலிய இடங்களில் பண்டக சாலைகளை ஏற்படுத்தினர். வந்தநாள் தொடக்கம் ஐம்பது, அறுபது வருடங்கட்கு பிரான்சியர் வியாபாரிகளாகவே மாத்திரந் தொழில்செய்தனர். ஆனால் மோகலிய இராச்சியம் நிலைகுலைய டூமோ (Dumas) என்பவன் புதுச்சேரிக்குத் தேசாதிபதியாகப் பிரான்சியரால் அனுப்பப்பட்டு (1735) இந்தியாவில் பிரான்சிய அரசியல் நிலவுமாறு அநேகமுயற்சிகள் செய்யப்பட்டன. இத்தருணத்தில் அவுஸ்திரிய முடியுரிமையி னிமித்தம் (The War of the Austrian Succession) ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் ஐரோப்பாவில் யுத்தம் நடைபெற, அதனிமித்தம் இந்தியாவிலும் அவர்களுக்கிடையில் யுத்தம் ஆரம்பமாயது. நாகபட்டினத்துக்குச் சமீபமாக நடந்தகடற்போரில் பிரான்சியர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர் (1646), பின்னர் பிரான்சியர் சென்னைபுரியையும் பிடித்து அநேக ஆங்கிலேயரைக் கைதிகளாக்கினர் ஆனால் 1748ல் ஐரோப்பாவில் நிகழ்ந்த சமாதான உடன்படிக்கையால் இந்தியாவில்பிடிக்கப்பட்ட நாடுகள் முன்சொந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டன.

## இந்தியாவில் ஆங்கில பிரான்சிய இரண்டாம் யுத்தம்.

## (1750—1754)

மேற்கூறிய பிரகாரம் ஆங்கிலேயரும் பிரான்சியரும் இந்தியாவில் இடம்பெற வசதிகண்டு கொண்டனர். இவ்வசதியையறிந்த காலந்தொடக்கம் இருசாதியாரும் சுதேசமன்னரின் கலகங்களில் பங்குபற்றவும் இந்திய சிப்பாய்மாரை (Sepoys) த் தங்கள் இராணுவத்திற் சேர்க்கவுந் தொடங்கினர். இவ்விஷயத்தில் ஆங்கிலேயரிலும் பிரான்சியரே முதன்மை பெற்றனர். எப்படியெனில், தென் இந்தியாவில்

நவாப் (Nawab–பிரதிகாவலன்) உத்தியோகத்தையிட்டு அநவருதின், சந்தாசாகிப் என்னு மிருவருக்கிடையில் அதிக சச்சரவிருந்தது. சந்தாசாகிப் மராட்டியரால் பிடிக்கப்பட்டுச் சிறையிலிருக்க அநவருதின் நவாப்பாக நியமிக்கப்பட்டான். ஆனல் சில காலத்தின் பின்னர் சந்தாசாகிப் சிறையிலிருந்தும் மீட்கப்பட்டு, பிரான்சியரினதும் மாராட்டியரினதும் உதவியுடன் அநவருதினை எதிர்த்துப் போருக்கேகினன். போரில் அநவருதினும் அவனது மூத்தமகனும் இறக்க, இரண்டாம் மகனுகிய மகமதலி திருச்சினுப்பள்ளியிலடைக்கலம் புகுந்தான். ஆகவே சந்தாசாகிப் நவாப்பானன். அதனல் அவனுக்குச்செய்த உதவியினிமித்தம் பிரான்சியர் அவனிடமிருந்தும் அநேக சிலாக்கியங்களைப் பெறுவரென்றறிந்த ஆங்கிலேயர் மனஞ்சகியாராய் மகமதலி பக்கஞ்சார்ந்து, சந்தாசாகிப்பையும் பிரான்சியரையு மெதிர்த்து யுத்தஞ் செய்தனர். யுத்தம் ஆரம்பமாகப் பிரான்சியரும் சந்தாசாகிப்பும் திருச்சினுப்பள்ளியைச் சூழ்ந்து முற்றிக்கையிட்டனர். ஆனல் அந்நேரத்தில் சந்தாசாகிப் தனது இராசதானியாகிய ஆர்க்காட்டை (Arcot) ப்பாதுகாக்கப் போதிய ஒழுங்குசெய்திலன். சந்தாசாகிப் தனது இராசதானியை விட்டகன்ற செய்தியையறிந்த ஆங்கிலேயர், றபேட் கிளைவ் (Robert Clive) என்பவனின் தலைமையின் கீழ்ப் படையெடுத்துச்சென்று ஆர்க்காட்டைக் கைப்பற்றினர் (1751). ஆனல் சடுதியில் ஆங்கிலேயர் கைவசப்பட்ட ஆர்க்காட்டுக் கோட்டை சந்தாசாகிப்பின் மகனல் முற்றிக்கையிடப்பட்டது. கிளைவ் தனது வீரதீரத்தினல் சிப்பாய்மாரையும் தனதுசாதியாரையும் உற்சாகப்படுத்தி முற்றிக்கையைக் குலைத்து வெற்றியை முடித்து மகமதலியை நவாப்பாக்கினன்.

## இந்தியாவில் ஆங்கிலேய பிரான்சிய மூன்றும் யுத்தம். (1756—1763)

1756ல் ஐரோப்பாவில் சப்தாண்டு மகாயுத்தம் ஆரம்பமாக, இந்தியர், அமெரிக்கர் முதலிய ஐரோப்பிய வியாபார, குடியேற்ற நாடுகளிலும் மேற்போந்த யுத்தம் நடைபெறலாயிற்று. ஆங்கிலேயரைத் தென் இந்தியாவிலிருந்துந் துரத்திவிடும்படி, பிரான்சியர் பிரான்சிலிருந்துங் கவுன்ற் லாலி (Count Lally) என்பானை இந்தியாவுக்கு ஓர் சேனையுடன் அனுப்பினர். அவன் இந்தியாவில் வந்திறங்கும்போது (1758) ஆங்கிலேயர் வங்காளத்தில் அவ்வூர் நவாப்புடன் யுத்தம் புரிந்து நின்றனர். ஆதலால் பிரான்சியர் தென் இந்தியாவில் ஆங்கிலேயராதீனத்தின் கீழிருந்த ஆர்க்காடு முதலிய இடங்களை இலேசாய்ப் பிடித்து, சென்னைபுரியையுஞ் சூழ்ந்து கொண்டனர் (1759). காத்திராப் பிரகாரம் பிரான்சியர் பிரான்சிலிருந்தும் இந்தியாவில் வந்திறங்கிய செய்தியை வங்காளத்திற் போர்புரிந்து நின்ற கிளைவ் முதலியோர் அறிந்தவுடனே, ஆங்கிலேய பட்டாளமொன்றைக் கடல்மார்க்கமாய்த் தக்கணம் அனுப்பி, சென்னையைச் சூழ்ந்துநின்ற பிரான்சிய படையைப் பாக்கத் துரத்தும்படி செய்தனர். அடுத்த வருடம் (1760)கவுன்ற்லாலியுஞ் சேனையும் உவன்டி உவாஷ் (Wandiwash) என்னுமிடத்தில் ஆங்கிலேயராற் சிதற அடிக்கப்பட்டார்கள். 1761ல் ஆர்க்காடும் காரைக்காலும் ஆங்கிலேயராற் பிரான்சியரிலிருந்தும் வெற்றிகொள்ளப்பட்டு, புதுச்சேரியும் முற்றிக்கையிடப்பட்டது. அப்பால் லாலியுங் கைதியாக்கப்பட்டான். எனவே இந்தியாவில் பிரான்சியரின் வலிமையுங் கௌரவமும் தாமே குன்றி மறைந்தன. ஆனல் 1763ல் பாரீஸ் நகரத்தில் நடந்த ஆங்கிலேய பிரான்சிய சமாதானத்தால் புதுச்சேரியும் வேறுசில இந்தியநகரங்களும் பிரான்சியருக்குக்கிடைத்

தன. எனினும் அந்நகர்களை அரண்செய்யுஞ்சுதந்திரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

## றபேட் கிளைவ்

## (Robert Clive)

கிளைவ் என்பான் 1744ல் இந்தியாவுக்குவந்து ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தில் (The British East India Company) ஓர் லேககனாக அமர்ந்து உத்தியோகம் பார்த்து வந்தான். அப்படியிருந்து வரும் நாளில், ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கு மிடையில் இந்தியாவில் நடந்த இரண்டாம் யுத்தத்தில் ஆர்க்காட்டை வெற்றிகொண்டு தனது வீரதீரத்தையும் போர்த்தொழில் திறமையையும் யாவரும் மெச்சும்படி காட்டிவைத்தான். சுகவீனத்தினிமித்தம் 1755ல் இங்கிலந்துக்குச் சென்றான். அங்கே நல்லாயுபசரிக்கப்பட்டும், சென்னையிலிருந்த இராணுவத்துக்கதிபனாக நியமிக்கப்பட்டும், மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பி வந்தான். வந்து சென்னையையடைதலும் வங்காளத்தில் ஆங்கிலேயருக்கும அவ்வூரதிபன் நவாப்ஸிறஜ்டவுலாவுக்குமிடையில் பெருஞ் சச்சரவுகளும் அநர்த்தங்களும் விளைந்தமையையறிந்து ஆங்குச் சென்றான்.

நவாப் ஸிறஜ் தனது அரண்மனையில் வசித்த மகா தனவந்தனொருவனின் பணத்தையபகரிக்க உபாயஞ் செய்தானும். அதை ஒருவாறறிந்த தனவந்தன் கற்கத்தாவில் வசித்த ஆங்கிலேயரிடஞ்சென்று அடைக்கலம்புகுந்தனன். அவ்வாறு சரண் புகுந்த தனவந்தனைத் தனது அரண்மனைக்கனுப்பும்படி ஸிறஜ் ஆங்கிலேயரைப் பலமுறை கேட்கவும் அவர்கள் மறுத்துவிட்டனர். இரண்டாவதாக,

நவாப்பின் அநுமதியின்றி ஆங்கிலேயர் பிரான்சியரிலிருந்தும் தம்மைப்பாதுகாக்கும்பொருட்டுக் கற்கத்தாவை அரண்செய்தனர். அவ்விதம் அரண்செய்தமை ஆங்கிலேயர் அங்கு குடியேறியகாலத்து நவாப்புடன் செய்துகொண்ட நிபந்தனைகளுக்கு முற்றாய் மாறானது. கடைசியாய், அரணிமித்தம் கற்கத்தாவிற் கட்டப்பட்ட மதில்களை இடிக்கும்படி ஸிறஜ் ஆங்கிலேயருக்கு விண்ணப்பிக்க, அதையும் அவர்கள் மறுத்துவிட்டனர். ஆதலால் ஸிறஜ் ஆங்கிலேயர் மீது படையெடுத்துச்சென்று, கற்கத்தாவைப் பிடித்து, ஆணும் பெண்ணுமாய் 146 ஆங்கிலேயரைச் சிறைப்படுத்தினன். ஆனால் சிறைப்படுத்தப்பட்ட 146 ஆங்கிலேயரும் ஒரு இருட்டறை (The Black Hole) யில் அடைக்கப்பட்டனரென்றும், அவ்வாறு அடைக்கப்பட்டோரில் 23 பேர் தவிர ஏனையோர் சுவாசிக்கப்போதிய பிராணவாயுவின்றி உயிர் துறந்தனரென்றும், இக்குரூரச் செயலுக்குப் பழிவாங்கும் நிமித்தமே கிளைவ் வங்காளத்துக்குச் சென்றனனென்றும் ஆங்கிலேய சரிதாசிரியர் கூறுவர். உண்மையளவில், மேற்படி இருட்டறைவிபத்து ஒரு கற்பனைகதையெனவே இந்திய சரித்திராராய்ச்சிக்காரர் அநேகர் கொள்ளுகிறார்கள். இந்திய சர்வகலாசாலைகளில் இச்சமயம் சரித்திர பண்டிதர்களாகக் கடமை பார்க்கும், பட்சபாதமில்லாதவும் விசால மனமுடையவுமான, ஆங்கிலேய மேதாவிகள் தாமும் மேற்சொல்லிய இருட்டறைச் சமாசாரத்தை நம்பப் பின்னிற்கின்றனர். தவிர, அச்சமாசாரத்தை உண்மையெனக் கொள்ளும் பட்சத்திலும், அக்குரூரச்செயலை நவாப் ஸிறஜ் அந்நேரமறிந்திலனென்றும், அதற்கு அவன் எவ்விதமும் பாத்திரனல்லனென்றும் அநேக சரிதாசிரியர் சொல்வர்.

மேற்போந்த இருட்டறைச் சம்பவத்தினாலோ வேறே துக்களினாலோ ஆங்கிலேயரடைந்த அவமானத்தை நிவிர்த்தி செய்வதற்காகவே கிளைவ் வங்காளத்துக்குப் படையெடுத்துச்சென்றனன். சென்று, பாஜ் பாஜ் என்ற இடத்திலிருந்த கோட்டையைப் பிடித்தும் அப்பால் காசிப்பூரில் நவாப்பையெதிர்த்துப் பொருதியுந் தனது ஆவேசத்தைத் தணித்தான். பின்னர் நவாப்புக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் ஓர்வித சமாதான மேற்பட்டது. அதனால் நவாப் ஆங்கிலேயருக்குச் சில வர்த்தக சௌகரியங்களைச்செய்ய உடன்பட்டான். (1756)

வங்காளத்தை வெற்றிகொண்டு அதை ஆங்கிலேய அரசியலுக்குள்ளாக்க வேண்டுமென்ற எண்ணம் ஒருவாறு கிளைவின் உள்ளத்திலுதித்தது. உதிக்கவே, பிரான்சியர் தென் இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டச் செய்த சில சூழ்ச்சிகளைக் கிளைவுங் கையாடத் தொடங்கினன். சீக்கிரம் தனக்குத் தேவையான ஒருவனையுந் தேடிக்கொண்டனன், அவன் நவாப்பின் அத்தை புருஷனுஞ் சேனாபதியுமான மீர்ஜாவர் ஆவான். இவனோடு வேறுசில சமஸ்தானப் பிரபுக்களையும் பாரிய தனவந்தர்களையுஞ் சேர்த்துக்கொண்டனன். இவர்களெல்லாரும் ஒருங்குதிரண்டு நவாப் ஸிறஜ் ஜுக்கு மாறாக ஓர்சதியாலோசனைசெய்தனர். சதியாலோசனைப்படி சேனாபதி மீர் ஜாவரும் ஏனையோரும் நவாப்பை ஆங்கிலேயருடன் போருக்கேகும்படி ஏவ, நவாப் கற்கத்தாவை நோக்கிப் படையெடுத்துச் செல்ல, ஆங்கிலேயர் எதிர்கொண்டு தாக்க, உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்த படுபாவியாகிய சேனாபதியோ தான் ஆங்கிலேயருடன் முன் செய்துகொண்ட துர் யோசனைப்படி போர்புரியாது வாளாநின்று, ஈற்றில் தனது சேனையுடன் ஆங்கிலேயர் பக்கஞ்

செல்ல, வங்காளம் ஆங்கிலேயர் கைவசப்பட்டது. நவாப் ஸிறஜ் பிளாஸே (Battle of Plassey, 1757) யென்ற இடத்தில் அபஜெயமடைந்து தப்பியோடினன். ஆனல் அவன் ஆங்கிலேயர் பக்கஞ்சென்ற சேனபதி மீர் ஜாவரால் பிடிக்கப்பட்டு ஈற்றிற் கொல்லப்பட்டான். இருட்டறை அக்கிரமம் (The Black Hole Incident) உண்மையெனில், அதற்கும் இந்த இரண்டகன் மீர் ஜாவரே பொறுப்பாளியென்பர் சில சரிதாசிரியர்.

ஸிறஜின் பின்னர் மீர்ஜாவரே வங்காளத்துக்கு நவாப்பாக ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்டான். நவாப் உத்தியோகத்தையும் அதனல் வங்காள தேசாதிகாரத்தையும் ஆங்கிலேயரின் உதவியைக்கொண்டுபெற்ற மீர் ஜாவர் ஆங்கிலேயருக்குப் போதிய கைமாறு புரிந்தனன். கற்கத்தாவையடுத்த 24 கிராமங்களை ஆங்கிலேயருக்கு நன்கொடையளித்தனன். மேலும் ஆங்கிலேயரைப் பாதுகாக்கவும் அவர்கள் வியாபாரத்தைப் பெருக்கவும் வாக்களித்து வியாபாரசங்கத்தாருக்குங் கற்கத்தாவில் வசித்த ஆங்கில நகரவாசிகளுக்கும், ஆங்கில சேனைக்கும், ஏனைய ஆங்கிலேய உத்தியோகத்தருக்கும், காலத்துக்குக் காலம் வேண்டிய பணங்கொடுக்கவும் உடன் பட்டான். ஆங்கிலேயரின் உதவியின்றி மீர் ஜாவர் நவாப் உத்தியோகத்தை நடாத்த மாட்டானென்றறிந்தே கிளைவ் மேற்படி நிபந்தனைகளைச் செய்யத்துணிந்தான். ஆகவே நவாப் உத்தியோகம் மீர் ஜாவருக்கு "சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்" என்ற சிலமாய் முடிந்தது. மீர் ஜாவர் பேரளவில் மாத்திரம் நவாப்பாயிருந்தானேயன்றி, காரியத்தளவில் அதிகாரம் முற்றாய் ஆங்கிலேயர் கைவசப்பட்டது.

இதுகாறுங் கூறியவற்றால் பிளாஸே வெற்றியே இந்தியாவை ஆங்கிலேயருக்குட்படுத்திய தென்பதும், கிளைவ் ஓர் மகாயுத்த வீரனென்பதும், அவனே ஆங்கில அரசையும் அதிகாரத்தையும் இந்தியாவில் நிலைபெறச் செய்தவனென்பதும் போதரும். ஆனால் இந்தியாவில் ஆங்கிலேய ஆளுகையை ஸ்திரப்படுத்தக்கருதிக் கிளைவ் செய்த சிலசெய்கைகள் யாவராலும் எக்காலத்தும் அருவருத்துத் தள்ளப்படத்தக்கன. ஆங்கிலேய பாராளு மன்றத்தின் பிரதான அங்கமான பிரதிநிதிகள் சபை (The House of Commons) யாரால் கிளைவின் நடவடிக்கைகள் விசாரணை செய்யப்பட்டபோது, அவன் இந்தியாவில் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தைக் கொண்டு ஆங்கிலேய இராச்சியத்துக்கு அவமரியாதையுங் கேடும் விளையத்தக்க சில பாரதூரமான தவறுகளைச் செய்தானென்றும், தான் எடுத்துக்கொண்ட கருமஞ் சித்தியெய்துதற்கு மிகவும் நீதியீனமான சில வழிகளைத் தேடினனென்றுங் காணப்பட்டான். ஆனால், தாய்த்தேச நன்மைக்காகப் புகழ்ச்சிக்கிடமான அரும்பெருஞ் செயல்களைச் செய்தனனும். ஆதலாற்றான் அவன் நிரபராதியென விடப்பட்டான்.

["The correct judgment on Clive is the judgment which the House of Commons passed on him—that Clive 'through the influence of the powers, with which he was entrusted in India, committed certain very grave wrongs and used certain very unrighteous means for the attainment of his end, resulting to the dishonour and detriment of the State;............at the same time he rendered great and meri torions services to the country".]

## மூன்ரும் ஜோர்ஜ் (George III) (1760—1820)

இரண்டாம் ஜோர்ஜ் வேந்தனின் பின் இங்கிலந்தை அரசாண்ட மன்னன் மூன்ரும் ஜோர்ஜ் ஆவான். இவன் இரண்டாம் ஜோர்ஜின் பௌத்திரன். இவன்காலத்திலும் சப்தாண்டு யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது. ஆனல் அதுசீக்கிரம் முடிவெய்தியது. அதன் பின்னராகுதல் இங்கிலந்தில் சமாதான சுகவாழ் வேற்படுமென்ருலோ, இல்லையே இல்லை. வட அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயரும் வேறுசிலரும் இராச்சிய விஷயத்தில் தமது பூர்வ தாய்நாடாகிய இங்கிலந்திலிருந்தும் பிரிந்து சுயராச்சியத்தை ஏற்படுத்த வேண்டியவர்களானுர். அதனல் சில குழப்பங்களும் யுத்தநிகழ்ச்சிகளு முண்டாயின. இந்த அமெரிக்க குழப்பத்தைத்தொட்டு பிரான்சிய மகாயுத்தங்களும், பிரான்சிய தேசகலகமும் (The French Revolution, 1789), நெப்போலியனது கொடுங்கோல் அரசும் உண்டாயின. இவையனைத்தாலும் ஆங்கிலேயருக்குப் பயமும் ஆத்திரமும் விளைந்தன.

அமெரிக்க குழப்பம் (The American Revolt) வட அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயரும் சில ஒல்லாந்தரும் இதுகாறும் பிரித்தானிய அரசியற் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்து வந்தார்கள். சப்தாண்டு யுத்தம் நடந்த காலத்தில் மேற்கூறிய அமெரிக்கரைப் பிரான்சியரின் யுத்த நிஷ்டூரங்களினின்றும் பாதுகாத்தற்கு ஆங்கிலேயர் தமது சைநியங்களையுமனுப்பிப் பெரும் பணமுஞ் செலவிட்டனர். புதிய இங்கிலந்து வாசிகளான (The New Englanders) அமெரிக்கரோ மிகவும் ஐசுவரியவான்களாயிருந்தனர். ஆதலால் அக்குடியேற்ற நாட்டாரே மேற்படி யுத்தச் செலவில்

பெரும்பாகத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஜோர்ஜ் அரசனும் சில மந்திரிமாரும் எண்ணங்கொண்டு, அமெரிக்காவிலிறக்குமதியாகுஞ் சில பொருட்களுக்குத் தீர்வைவரி விதித்தார்கள். அதற்கு அமெரிக்கர் தம்முடைய சம்மதமின்றிப் பிரித்தானிய பாராளுமன்றத்துக்குத் தம்மீது வரிவிதிக்க அதிகாரமில்லையென்றும், அப்படிவிதிக்கில் தமது க்ஷேமாதிகருமங்களைப் பாராளு மன்றத்தில் எடுத்தாளுவதற்குத் தம்மால் தெரியப்பட்ட பிரதிநிதிகள் பாராளு மன்றத்தின் அங்கத்தவர்களாக வேண்டுமென்றும், அன்றேல் தாம் எவ்வித வரிக்கும் உடன்பட மாட்டோமென்றும் வாதாடினர். கடைசியாக, பிரித்தானியமந்திரிமார் எல்லாவரிகளையும் நீக்கி, தேயிலைத்தீர்வை வரியைமாத்திரம் வைத்திருந்தார்கள். இத்தேயிலைவரி மிக அற்பவரியாயிருந்தபோதிலும், அமெரிக்க வாசிகளுக்குப் புண்ணிலே புளிப்பற்றினாற்போலிருந்தது. ஆங்கிலேய அரசாட்சியார் தமக்கு அமெரிக்கர் மீது வரிவிதிக்கத் தத்துவமிருக்கிறதென்பதை நிரூபிக்குமாறே அவ்வற்ப தேயிலைவரியை நீக்காதுவைத்திருக்கின்றனரென்றறிந்த அமெரிக்கர் சிலர் மாறுவேடம் பூண்டவர்களாய் பொஸ்றன் துறைமுகத்தை (Boston Harbour) யடைந்து அங்கு கட்டப்பட்டுநின்ற மூன்று தேயிலைக்கப்பல்களிலுள்ள தேயிலை எல்லாவற்றையும் பறித்துக் கடலுள் வீசிவிட்டனர். இச்செய்தி இங்கிலந்துக்குச் செல்லுதலும் ஆங்கிலேயர் இன்னுஞ் சில அடக்குமுறைச்சட்டங்களைப் பிறப்பித்தனர். அமெரிக்கரோ அப்பிரமாணங்களைத் தாங்கி நடக்க ஆற்றுதவராய் யுத்தத்தை ஆரம்பித்தனர் (1775).

1774-ல் பிலெடெல்பியா (Philadelphia) என்றவிடத்தில் பதின்மூன்று மாகாணவாசிகள் (அமெரிக்கர்) ஓர் மகாநாடு கூடிக் கனடாவில் வசித்த பிரான்சியரையுந் தங்க

ளுடன் சேரும்படி வேண்டினர். யுத்தத்திற்குரிய ஆயத்த தங்களுஞ் செய்தனர். முதன்முதல் அமெரிக்கரும் ஆங்கிலேயரும் லெக்ஸிங்ரன் (Lexington) என்ற இடத்திற் சந்தித்துப் பொருதினர். அதன்பின்னர் பங்கேர்ஸ் ஹில் (Bunker's Hill) என்னுமிடத்தில் ஆங்கிலேயர் அதிக சேதத்துடன் சிறுகவெற்றியடைந்தனர். இப்படியிருக்கும் பட்சத்தில் ஜோர்ஜ் உவாஷிங்ரன் (George Washington) என்னும் அமெரிக்க தலைவன் போர்த்தொழிலை இதுவரையும் பழகாத அமெரிக்கரையும் அத்தொழிலில் நன்குபயிற்றி அமெரிக்கசேனையொன்றை வகுத்தனன். 1776-ல் மேற்போந்த 13 மாகாணவாசிகளும் தங்களை அமெரிக்கரெனவும் ஐக்கியநாட்டாரெனவுமழைத்து, சுவ தந்திர விஞ்ஞாபனமொன்றில் தங்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளுந் தலைவருமானோரிடங் கையொப்பங்களைப் பெற்று, தாம் ஆங்கிலேய அரசின்கீழ்ப் பிரசைகளல்லவென்றும் ஓர் சுயாதீனமுடைய சாதியாரென்றும் பிரசித்தப் படுத்தினர். அப்பால், கனடியர் (Canadians) தமக்குதவிசெய்ய விரும்பாததையிட்டு அவர்கள் நாட்டுக்குப் படையெடுத்துச்சென்று மோன்றீல் (Montreal) என்ற இடத்தைப் பிடித்துக் குவிபெக்கையுஞ் சூழ்ந்தனர். ஈற்றில் கனடியரால் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் ஆங்கிலேயருடன் செய்த சமரில் அமெரிக்கர் ஆரம்பத்தில் அபஜெயமடைந்தாரெனினும் பின்னர் வெற்றிகொள்ளத் தொடங்கினர். 1777-ல் சறற்றேக்கா (Saratoga) என்னுமிடத்தில் ஆங்கிலேயர்தம்மை அமெரிக்கருக்கு முற்றாய் ஒப்புக்கொடுத்தனர். இந்தவெற்றியையும், அமெரிக்காவில் இதுவரையும் நிகழ்ந்த மற்றுஞ் செய்திகளையும் மிக ஆவலுடன் பார்த்திருந்த ஆங்கிலேயரின் நெடுங்காலப் பகைவரான பிரான்சியரும் ஸ்பானியரும் சப்தாண்டு யுத்தத்திலும் அதற்கு

முன்னருந் தாமடைந்த அவமானத்தை நிவிர்த்திசெய்யவும், இழந்த மைனேர்க்கா, ஜிபிறுல்ற்றர் முதலியநாடுகளைத் திரும் பக் கைப்பற்றவும் இதுதான் தருணமென நினைந்து, அமெ ரிக்கரின் சுயாதீனத்தை அங்கீகரித்து அவர்கள் பக்கஞ் சார்ந்து போர்புரிய முற்பட்டனர் (1778–1779). 1780-ல் ஒல்லாந்தரும் அமெரிக்கரைச் சேர்ந்தனர். ரூஷியா, பிற ஷியா, சுவீடின், டென்மார்க் ஆகிய இந்நாடுகளும் சிலவி ஷயங்களில் ஆங்கிலேயர்மீது கோபங்கொண்டு தமது நடுவு நிலைமையை ஆயுதபாணிகளாய் (The Armed Neutrality) நிலைநாட்டத் தொடங்கினர். ஆகவே தரைச்சண்டையிலும் பார்க்கக் கடற்சண்டையே மும்முரமாயெழுந்தது. ஐரோப் பாவில் பிரான்சியர் மைனேர்க்காவையும் மேற்கிந்திய தீவுக ளில் தமக்கு முன் உரியனவற்றையும் பிடித்தனர். ஆனல் ஸ்பானியர் சேன்ற் வின்சேன்ற் (St. Vincent) முனைக் கணித்தாய் நடந்த கடற்போரில் ஆங்கிலேயரால் அதி மோசமாய்த் தோற்கடிக்கப்பட்டனர். ஜிபிறுல்ற்றரைப் பிடிக்கப் பிரான்சியரும் ஸ்பானியரும் நான்குவருடங்களா கப் பிரயத்தனப்பட்டும் ஆங்கிலேயர் கிஞ்சித்தும் இளைக் கவுமில்லை, இடங்கொடுக்கவுமில்லை. ஆனல் அமெரிக்காவில் நடந்த தரைப்போரில் ஆங்கிலேயசேனபதி கோண்வாலிஸ் (Cornwallis) தனது சேனையுடன் யோக்ரவுன் (York town) என்ற இடத்திற் பிரான்சியராலும் உவாஷிங்ரனு லுஞ் சூழப்பட்டு, பசியாலும் நோயாலும் வருந்தி, தன் னையுஞ் சேனையையும் அமெரிக்கருக்கு ஒப்புக்கொடுத்த னன். இத்துடன் ஆங்கிலேய அமெரிக்க யுத்தம் முடி வெய்தியது. எனவே, அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங் கள் (The United States) என்ற ஓர் பெருந்தேசமும் அமெரிக்க ரென்ற ஓர் பெருஞ்சாதியாருந் தோற்றினர். 1783-ல் வேர்ஸேல்ஸ் சமாதானத்தால் (The Treaty of Versailles) அமெரிக்கரின் சுயாதீனம் ஆங்கிலேயரால்

அங்கிகரிக்கப்பட்டது. அமெரிக்க சுயாதீன சம்பந்தமாய் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கு மிடையில் இந்தியாவிலுஞ் சில யுத்தங்கள் நிகழ்ந்தன. அவற்றை இந்தியாவின் பலதேசாதிபதிகளுக்குந் தலைவனாய் (Governor General) அக்காலத்திருந்த உவாறேன் ஹேஸ்டிங்ஸ் என்னும் ஆங்கிலேய மேதாவியின் சரித்திரத்திலமைத்துக் கூறுவாம்.

## உவாறேன் ஹேஸ்டிங்ஸ்.
## (Warren Hastings.)

உவாறென் ஹேஸ்டிங்ஸும் கிளைவைப் போலவே பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திலமர்ந்து முதல் ஓர் லிகிதனுகக் கடமைபார்த்து வந்தான். அவன் இந்தியாவுக்கு 1750-ல் வந்து, தனது காலத்தைப் பெரும்பாலும் வங்காளத்திலேயே கழித்தனன். ஆங்கிலேயர் வங்காளத்தை வெற்றிகொண்டு, கிளைவை அவ்விடத்துக்குத் தேசாதிபதியாக்கினர். சிலகாலத்தின் பின்னர் கிளைவ் இங்கிலந்து செல்ல, வங்காள நவாப் மீர்ஜாவருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் சில சச்சரவுகள் நேர்ந்தன. அவற்றல் ஆங்கிலேயர் மீர்ஜாவரை நவாப் பதவியிலிருந்தும் நீக்கி மீர் காஸிம் என்பானை நவாப் பாக்கினர். அப்போதே ஹேஸ்டிங்ஸும் நவாப்பின் சமஸ்தானவாசியாய் அவனது நடவடிக்கைகளை மேற்பார்வையிடும்படி நியமனம் பெற்றனன் (1761). வாக்குப்பண்ணிய உரொக்கத்தைக் கொடுக்கவில்லையென்று மீர் ஜாவரை உத்தியோகத்திலிருந்தும் விலக்கிய ஆங்கிலேயர் மீர் காஸிம் என்பான் மீதுங் குற்றமேற்றப் பின்வாங்கவில்லை. ஆதலால் ஆங்கிலேயருக்கும் மீர் காஸிம் என்பவனுக்கு மிடையில் அநேக சச்சரவுகள் விளைந்தன அப்போ ஹேஸ்டிங்ஸ்

நவாப்பையும் ஆங்கிலேயரையுஞ் சமாதானப்படுத்தக் கூடிய வரை முயன்றனன். நவாப்பின் குற்றமற்ற செய்கைகளையுந் தேசாபிமானத்தையும் மெச்சி, ஆங்கில வியாபாரிகளின் பணவாஞ்சையால் ஏற்பட்ட நீதியீனங்களையும் எடுத்துக் காட்டி, நவாப்புக்காகப் பரிந்து பேசினன். ஆங்கில வியாபாரிகளோ அவன் நடுவுநிலைமையை அலட்சியஞ் செய்தனர். அதனால் மீர் காஸிம் ஆங்கிலேயர்மீது படையெடுத்துச் சென்றனன். ஆனால் ஆங்கிலேயர் அவனைத் தோற்கடித்து மறுபடியும் மீர் ஜாவரை நவாப்பதவியிலமர்த்தினர். மீர் காஸிம் மோகலிய சக்ரவர்த்தியினதும் அயோத்தியாபுரி (Oudh) நவாப்பினதும் உதவியைக் கொண்டு ஆங்கிலேயரை வங்காளத்தினின்றுந் துரத்திவிடப் பார்த்தனன். ஆனால் ஆங்கிலேயர் அவனை எதிர்கொண்டு பக்ஸார் என்ற இடத்தில் அதிமோசமாய்த் தாக்கி வீழ்த்தினர் (1764). காசி, சூனாறு, அல்லாபாத் ஆகிய இடங்கள் ஆங்கிலேயர் வசமாயின. இந்த யுத்தத்தின்பின்னர் ஹேஸ்டிங்ஸ் சிறுக மனத்திருப்தியீனமடைந்து தனது உத்தியோகத்தைக் கைவிட்டு இங்கிலந்துக்குத்திரும்பினன்.

வங்காளத்தில் ஆங்கில இராசாங்கம் வரவரப் பழுதடைந்து குறைகளுந் தவறுகளும் அதிகப்பட்டு வந்தன. மீர்ஜாவர், மீர்காஸிம் ஆகிய நவாப்மாரும் இறந்துவிட்டனர். வங்காளத்திலப்போ வசித்த ஆங்கிலேயருக்குப் பணப்பைத்திய மதிகரிக்க, கைக்கூலியாகவுங் கள்ளத்தனமாகவும் பணந்தேடும் வழிவகைகளை அவர்கள் இலேசாகக் கண்டுபிடித்துக் கையாடினர். இக்குறைகளையெல்லாம் ஒழிக்கும்பொருட்டு, 1765-ல் கிளைவ் விசேஷ அதிகாரத்தோடும் வங்காளத்துக்குத் தேசாதிபதியாகவுஞ் சேனைத்தலைவனாகவும் நியமிக்கப்பட்டு இரண்டாம்முறையும் அங்கு அனுப்பப்

பட்டான். கிளைவ் வங்காளத்துக்கு வந்தவுடனும் அநேக திருத்தங்களைச்செய்து அரசியலையும் பெலப்படுத்தினன். ஆங்கிலேயர் இந்தியரிடமிருந்தும் எவ்வித பரிதானத்தை யேனும், உபகாரப்பொருட்களையேனும் பெறப்படாதென் றும், அவர்களைச் சிறிதேனும் நெருக்கி ஆக்கினைக்குள்ளாக் கப்படாதென்றுங் கட்டளையிட்டான். அரசியல் விஷயத் திலும் அப்போ பேரளவில் மாத்திரம் சக்ரவர்த்தியென்றி ருந்த ஷா அலம் என்பானிடமிருந்து வங்காளத்துக்கு நவாப்பை நியமிக்கிற உரித்தையும், அங்குள்ள அரசிறை, நீதிவிசாரணைமுறை அதிகாரத்தையும் பெற்றனன். எனி னும், உத்தியோகபதவிகளைப் பெரும்பாலும் இந்தியரே ஏற்று இராச்சியமுறைகளையும் அவர்களே கையாடிவந்த னர். ஆனல் எக்காரியமும் ஆங்கிலேயர் சொற்படி நடை பெறவேண்டியிருந்தது. இத்தவிதமாக ஆங்கிலேயரிடம் அதிகாரமும் இந்தியரிடம் ஆட்சிப்பொறுப்புமாய் வங்காள அரசியல் நடந்துவந்தது. இது ஓர் தந்திரமான இரட்டை ஆட்சிமுறை (Dual or Double Government System). இந்தவிதமான முறைகளை ஆங்கிலேயர் இன்னுங் கையாடி வருகிறார்கள் (Diarchy). நிற்க, கிளைவ் ஆங்கிலேயர் ஆட்சி யைப் பெலப்படுத்த அயல்நாட்டதிபர்களோடு சில ஒழுங் குகள்செய்து காசி, சூனுறு, அல்லாபாத் முதலிய இடங் களில் இராணுவஸ்தானங்களையமைத்துத் தனது ஆட்சிக் குள்ளமைந்த மாகாணங்களைச்சுற்றி அரண் வகுத்தனன் (The Ring Fence System). மேற்கூறிய பிரகாரம் ஆங்கில அரசை வங்காளத்தில் நிலைநாட்டிவிட்டு, கிளைவ் 1767-ல் இங்கிலந்துக்குச் சென்றுவிட்டனன். பின்னர் அவனது அரசியல்முறைகளை அநுசரித்தே ஏனைய ஆங்கிலேயரும் இராச்சியம் நடத்திவந்தனர். ஆனல் ஆங்கிலேயரின் பண வாஞ்சையால் மறுபடியும் அநேகதவறுகளும் நீதியீனங்க

ளும் நிகழ்வதாயின. ஆகையால் ஆங்கிலேய வர்த்தக சங்கத்தார் 1772-ல் ஹேஸ்டிங்ஸை வங்காளத்துக்குத் தேசாதிபதியாக நியமித்தனர். அதற்குமுன் ஹேஸ்டிங்ஸ் 1769-ல் சென்னைக்குவந்து, ஹைதர் அலி முதலியோரின் விவகாரங்களையும் யுத்தங்களையுந் தடுக்கமுயன்று இயலாதபட்சத்திலும், வேறு ஒழுங்கீனங்களையும் அரசியற் குறைகயுளையுந் தவிர்த்து அதிகங்கீர்த்தியெய்தினன்.

ஹேஸ்டிங்ஸ் வங்காள தேசாதிபதியானவுடன் இரட்டை ஆட்சியே அநேக குறைகளுக்குக் காரணமா யிருக்கிறதென்று கண்டு, ஆங்கிலேயரைப் பிரதான உத்தியோக பதவிகளிலமர்த்தி ஆங்கிலேய ஏக ஆட்சி முறையைத் தாபித்தனன். பின்பு, முறையே சட்டசபை, அரசிறை முறை, நீதிவிசாரணைமுறை, நகர் காவல்முறை, வியாபாரமுறை ஆகிய இத்துறைகளிலெல்லாம் குறைகளை நீக்கி, வேண்டிய திருத்தங்களைச் செய்தனன்.

இவ்வாறு ஆங்கிலேய இராச்சியம் வங்காளத்திற் சிறந்து விளங்க, இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் மராட்டியரும் தென்பாகத்தில் ஹைதர் அலி என்பானுந் தத்தம் இராச்சியங்களைப் பெலப்படுத்தி அந்நிய அரசியல் விஷயங்களினுந் தலைகாட்டத் தொடங்கினர். மராட்டியரோ சிற்றரசராகத் தமது நாடுகளைக் கூறுகூறாக ஆண்டுவந்தனர் ஆனல் இத்தருணத்தில் அவர்களெல்லாரும் ஒருங்குதிரண்டு இராசபுத்ரருக்கும், ஹைதிராபாத்தை யாண்டுவந்த நைஸாமுக்கும், வட இந்தியாவாகிய இந்துஸ்தான் வாசிகளுக்கும், அவர்கள் நாட்டையழித்துங் கொள்ளையடித்தும் பெருங் கேடுவிளைத்தனர். இப்படி நடக்குங் காலத்தில் இந்தியாவின் வடமேற்கெல்லைகளில் வசித்த சில பிரதானிகளும் உள் நாடுகளில் வந்து கொள்ளையடித்துக் கொண்டுபோவது வழக்க

மாய் வந்து விட்டது, அச்செய்தியை யறிந்த ஆபுகானிஸ்தர் ஆமத் ஷா அப்தாலி என்னும் தலைவனுடன் இந்தியாவுக்கு வந்து கொள்ளையடித்தனர். அப்போ சக்ரவர்த்தியின் தலைநகராகிய டேல்ஹிக்குச் சமீபமாக மராட்டியர் அரண் செய்து நிற்பதை ஆமத்ஷா அறிந்து அவர்களைப் பனிப்பத்தென்னுமிடத்தில் தாக்கித் தோற்கடித்தனன். அதனால் மராட்டியரின் வெற்றி விஜயந் தடைப்பட்டது. அன்றேல் மராட்டியர் ஆங்கிலேயருடனும் முரணியிருப்பர். எனினும் மராட்டியரின் முன்னேற்றத்தையும் அதிகார விருத்தியையுமிட்டு ஆங்கிலேயருக்குத் திகிலும் பொறாமையுமுண்டாயின. ஹேஸ்டிங்ஸும் பலவிதத்தாலும் அவர்களோடு பகைக்காமலும் முரணிக்கொள்ளாமலும் ஒழுகத் தெண்டித்தனன்.

பம்பாய்த்தீவில் வசித்த ஆங்கிலேயர் 1773ம் ஆண்டு வரையுந் தங்கள் வியாபார முயற்சியிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து பொருளீட்டி வந்தனர். ஆனால் அவர்கள் அரசியற் செலவதிகரித்து ஆதாயங்குறைய, அயல்நாடுகளைத் தமதாட்சிக்குட்படுத்தும் நோக்கமாய்ச் சில முயற்சிகள் செய்தனர். வங்காளத்திலும் சென்னையிலும் நடந்த சம்பவங்களும் நாடு சேர்ப்பதில் அவர்களுக்கு அதிகம் அவாவை எழுப்பி விட்டன. மேற்படி ஆங்கிலேயரின் அவா பூர்த்தியாவதற்குப் பூனாவென்ற இடத்தில் சிலசந்தர்ப்பங்கள் தோன்றின. பூனாவையாண்டுவந்த மராட்டியஇராசன் இறந்துவிட பட்டத்துரிமைபற்றிச் சிலகட்சிகள் உண்டுபட்டன. அவற்றில்ஒருகட்சியார் பம்பாயில் வசித்த ஆங்கிலேயரை அண்டி அவர்களுதவியை வேண்டினர். அவ்வுதவிக்காக அவர்களுக்குச் சில நாடுகளையுங் கொடுப்பதாக வாக்களித்தனர். மராட்டியருடன் யுத்தவிஷயங்களில் ஈடுபடுவது கேடாய் முடியுமென்றஞ்சிய ஹேஸ்டிங்ஸும் கற்கத்தாவிலி

ருந்த ஆங்கிலேய இராசாங்க சபையாரும் மேற்படி உடன்படிக்கையை அங்கீகரியாது மராட்டியருடன் வேறு சமாதான ஒழுங்குகள் செய்துகொண்டனர். ஆனால் பம்பாய் நாட்டு ஆங்கிலேயரோ மேற்சொல்லிய ஒழுங்குகளைமீறி மராட்டியருடன் போருக்கேகினர். அவ்விதம் ஆங்கிலேயர் சமாதானத்தை மீறிச் சமர்க்கோலங்கொள்வதைக் கண்ட மராட்டியர் மிகவெகுண்டு, தாமாய்வந்த பிரான்சியரின் உதவியை அங்கீகரித்தனர். பிரான்சியர் யுத்தத்தில் ஈடுபடுவதைக்கேள்விப்பட்ட ஹேஸ்டிங்ஸ் உடனே கற்கத்தாவிலிருந்தும் பூனுவுக்கு ஓர் பட்டாளத்தையனுப்பினன். ஆங்கிலேயர் ஆரம்பத்தில் அபஜெயமடைந்து மராட்டியருடன் சமாதானப்பட்டனர். ஆனால் இச் சமாதானத்தையும் கற்கத்தா இராசாங்கசபையார் அங்கீகரியாது மறுபடியும் ஓர் சேனையை அனுப்பினர். அதையறிந்த மராட்டியர் மிகவும் கோபாவேசங்கொண்டு தங்கள் பிரதானிகளையும் ஹைதர் அலி, நைஸாம் முதலியோரையுஞ் சேர்த்து ஓர் மகாநாடு (The Mahratta Confederacy) கூடினர். அப்பால் யுத்தம் மும்முரமாக ஆரம்பமாயது. ஆங்கிலேயர் மராட்டிய பிரதானிகளிற் சிலரை ஒருவர் பின்னொருவராக மகாநாட்டிலிருந்தும் பிரித்துத் தங்கள் பக்கத்துக்கிழுத்துக் கொண்டனர். கடைசியாக ஷிந்தியா மகாராசாவையும் ஆங்கிலேயர் தங்கள் பக்கத்துக்கிழுக்க, அவன்மூலமாக ஆங்கிலேயருக்கும் மராட்டியருக்குமிடையில் ஓர் சமாதானமேற்பட்டது (Treaty of Selbai). இச்சமாதானப்படி மராட்டியர் தங்கள் நாடுகளில் ஆங்கிலேயருக்கன்றி ஏனைய ஐரோப்பிய சாதியாருக்குப் பண்டகசாலைகளை யமைக்க இடங்கொடுக்கப்படாதென்றும், அவர்களோடு மராட்டியர் எவ்விதத்தாலும் நேசம் பாராட்டப்படாதென்றும் நிபந்தனைகள் செய்யப்பட்டன.

இந்தியாவின் தென்பாகத்தில் ஆங்கிலேயரைத்தவிர மூன்று பிரதான சுதேச இராச்சியங்களிருந்தன. ஹைதிராபாத்தில் நைசாமும், மைசூரில் ஹைதர் அலியும், தஞ்சாவூர் முதலிய இடங்களில் மராட்டியரும் அரசாண்டுவந்தனர். இவர்களில் ஹைதர் அலி சில காலம் மைசூர் மகாராசாவின் சேனாபதியாயிருந்தனன். மகாராசா இறக்க, தானே அவ்வூருக்கதிபனாகச் செங்கோல் நடத்த ஆரம்பித்தனன். தனது திடசித்தத்தினாலும், பராக்கிரமத்தினாலும், சேனையின் வலிமையினாலுந் தனது இராச்சியத்தைப் பெலப்படுத்தி அயல் நாடுகளையுங் கவர்ந்தனன். நைஸாம் பிரதானியையும் மராட்டியரையுந் தன்வசப் படுத்தி ஆங்கிலேயரையுஞ் சருவினன். ஆகவே முதலாவது மைசூர் யுத்தம் (The First Mysore War. 1767) ஆரம்பமாயது. தொடக்கத்தில் ஹைதர் திரிச்சிணுப்பள்ளியிலும் சங்கமென்ற இடத்திலும் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டானேயாயினும், ஈற்றில் அவன் சென்னைக்குப் படையெடுத்துச் சென்று தான் நினைந்த பிரகாரம் ஓர் சமாதான உடன் படிக்கையை ஆங்கிலேயருக்குக் கற்பிதஞ் செய்யக்கூடியவனானன். இந்த யுத்தமும் பின்னர் ஏற்பட்ட சமாதானமும் (Treaty of Madras, 1769) ஹேஸ்டிங்ஸ் சென்னையிலிருந்த காலத்தில் நிகழ்ந்தன.

ஹேஸ்டிங்ஸ் வங்காளஞ்சென்றுவிட, சென்னையிலிருந்த ஆங்கிலேயர் மறுபடியும் பணஞ் சம்பாதிப்பதிலும் பரிதானமேற்பதிலுங் கரிசனையாயிருந்தாரேயன்றி அரசியலைக்கிஞ்சித்துங் கவனித்தாரல்லர். ஆங்கிலேயரின் நண்பனும் பரிதான உபகாரியுமான ஆர்க்காட்டு நவாப்பின் ஏவுதலால் ஆங்கிலேயர் ஹைதர் அலிக்கும் நைஸாம் பிரதானிக்கும் மாறான சில கருமங்களைச் செய்தனர். ஆதலால் ஹைதரும் நைஸாமும் மராட்டியரையுந் தம்பக்கஞ் சேர்த்து யுத்தத்துக்காரம்

பித்தனர் (1780). இப்படியிருக்கும் பட்சத்தில், இதேதருணத்தில் ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்கு மிடையில் ஐரோப்பாவில் ஓர் யுத்தம் நிகழ, இந்தியாவிலும் அன்னவருக்கிடையில் யுத்தம் நிகழ்வதாயிற்று. அதனால் பிரான்சியரும் ஹைதர் பக்கஞ் சார்ந்தனர். யுத்தத்தில் ஆங்கிலேயர் காஞ்சிபுரத்திலும் சிதம்பரத்திலும் அபஜெயமடைந்து ஆர்க்காட்டையு மிழந்தனர். ஆனால் ஆங்கிலேயர் தங்கள் சூழ்ச்சியால் மராட்டியருடனும் நைஸாமுடனும் சமாதானஞ் செய்துகொண்டு ஹைதரை ஏகாங்கியாக்கினர். பிரான்சியரும் இதுகாறும் அவனுக்கோருதவியும் புரியமாட்டாதவரானர். ஏனெனில் அவர்கள் பட்டாளத்தைக் கரையேற விடாது ஆங்கிலேயர் தடுத்து நின்றனர். ஆனால் ஆங்கிலேய பட்டாளமொன்று ஒல்லாந்தரைத் தாக்கும்பொருட்டு இலங்கைக்குச்செல்ல, பிரான்சியர் பறங்கிப்பேட்டையிலிறங்கினர். இறங்கிக் கூடலூரைப் பிடித்தனர். ஆங்கிலேயரும் ஹைதரும் ஆரணியிற் சந்தித்துப்பொருத, பம்பாயிலிருந்தும் ஒரு ஆங்கிலேய பட்டாளம் மங்களூரைத் தாக்கி அதையுங் கள்ளிக்கோட்டையையும் பிடித்தது. அதற்கிடையில் ஹைதரும் மரித்தான். அப்பால் ஹைதரின் மகன் ரிப்பு சுலுத்தான் யுத்தத்தைநடாத்தினன். ஆனால் வேர்ஸேல்ஸ் சமாதானத்தால் (1783)பிரான்சியர் யுத்தத்தை இந்தியாவிலும் நிறுத்தினர். ரிப்பு முற்றாய்த் தனித்தவனானன். எனினும் மகா ஆவேசங்கொண்டு மிகவும் உக்கிரமாய் அக்கிரமங்களை விளைந்து பின்னரும் யுத்தத்தை நடாத்தினன். ஆங்கிலேயர் அவன் அக்கிரமங்களுக்கஞ்சி அவனோடு சமாதானஞ் செய்துகொண்டனர் (Treaty of Mangalore, 1784).

ஹேஸ்டிங்ஸ் கிளைவைப்போன்ற ஓர் யுத்தப் பிரியனுமல்லன், யுத்தவீரனுமல்லன். ஆனால் அரசியற் கருமங்களில் மிகுநிபுணனுஞ் சாமர்த்தியனும் விளங்கினன். இந்தியா

விற் பிரித்தானிய சக்ராதிபத்தியத்தை அடியிட்டவன் கிளைவானால் அதைப் பெலப்படுத்தி உருப்படுத்தினவன் ஹேஸ்டிங்ஸாவான். ஆங்கிலேயரல்லாத ஏனைய ஐரோப்பியரை, விசேஷமாய்ப் பிரான்சியரை, இந்தியாவில் இடம் பெறாது தடுப்பதும், ஆங்கிலேய வர்த்தக சங்கத்தின் ஆட்சியை அபிவிருத்தி செய்து அதை மகத்துவப் படுத்துவதுமே ஹேஸ்டிங்ஸின் பிரதான முழுநோக்கமும் இலக்காகவு மிருந்தன. சுதேச மன்னரளவில், அவர்களை நண்பராயேனும், சமாதான சம்பந்தராயேனும், அன்றேல் தனக்குக் கீழ்ப்பட்டோராயேனும் ஆக்கிக்கொள்ளப் பெரிதும் பிரயத்தனப் பட்டனன். ஆனால் பிரான்சியரினாலும், தனது கீழ் உத்தியோகஸ்தரின் மதிகேட்டினாலும் மராட்டியருடனும் ஹைதர் முதலியோருடனும் யுத்தம்புரிய ஏவப்பட்டான். ஓய்வில்லாமல் யுத்தம் நடைபெற, திறைசேரியில் பணமின்றி ஹேஸ்டிங்ஸ் மிகவும் மிடைப்பட்டனன். ஆதலால், கைப்பொருளில்லாது சிறுமைப்பட்டாலும், யுத்தத்தை நடாத்தவேண்டியும், சில நீதியீனங்களையும் அக்கிரமங்களையுஞ் செய்தனன். ரோஹிலாஸ் என்னும் பட்டாணிச் சாதியாரையும் அவர்கள் நாட்டையும் எரித்து அழிக்க, தனது நண்பன் அயோத்தியாபுரி நவாப்புக்குத் தனது சேனையை இரவலாகப் பணத்துக்கீந்ததும், காசிமகாராசா மீது ஐம்பது லட்சம் ரூபாயை அநியாயமாய் அபராதமேற்ற, அன்னவன் அப்பணத்தைக் கொடுக்க மறுக்க, அவனைத் துரத்தி வேறொருவனை அரசனாக்கித் திறைப்பணத்தை அதிகரிப்பித்ததும், அயோத்தியாபுரி மகமதிய இராணிகளான பெக்கம்மாரின் திறைசேரியைக் கொள்ளையடித்துப் பெரும் நிதியை யபகரித்தமையும் யாவரும் மறுக்கொணு நீதியற்ற செயல்கள். எனினும் இச்செயல்களையெல்லாம் ஹேஸ்டிங்ஸ் சுயநயங்கருதிச் செய்திலன். ஆங்கில வர்த்தக

சங்கத்தையும் அதன் ஆட்சியையும் இந்தியாவில் நிலைபெறச் செய்யுமாறே இவற்றையெல்லாஞ் செய்தனன். ஹேஸ்டிங்ஸ் இந்தியாவில் தனது ஆளுகையை முடித்து இங்கிலந்துக்குச் செல்லுதலும், அங்கே பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையாரால் குற்றஞ்சாட்டப்பெற்று பிரபுக்கள்சபை முன்னிலையில் நீதிவிசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். அவனது பகைவரான எட்மன்ட் பேர்க் (Edmund Burke) ஷெறிடன் (Sheridan) முதலியோர் அவன் றலைமீது இருபதுகுற்றங்களைச் சுமத்தி வியாச்சியத்தைநன்குநடாத்தினர். விசாரணை ஏழுவருடகாலத்துக்கு நீடித்தது. ஈற்றில் அவன் நிரபராதியெனக் காணப்பட்டான். ஆனால் அவனுடைய சுகமுங் குறைந்தது, பணமுந் தொலைந்தது.

1772ல் பிரித்தானிய வர்த்தக சங்கத்தார் இந்தியாவில் நடந்த யுத்தத்தின் பொருட்டு ஆங்கிலேய பாராளுமன்றத்தாரிடங் கடன்பெறத் தொடங்கினர். அதனாற் சங்கத்தாரின் ஆட்சிமுறைகளைப் பாராளுமன்றங் கவனிக்கவேண்டி வந்தது. உடனே சங்கத்தாரின் அரசாங்கத்தைத் திருத்தும் பொருட்டு ஓர்சட்டம் நோர்த் (Lord North) என்பவனாற் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்தின் பின்னர்தான் ஹேஸ்டிங்ஸ் தேசாதிபதிகளுக்குத் தலைவனாக (Governor-General) நியமனம் பெற்றான்; இந்தியாவிலுள்ள சர்வ ஆங்கிலேய நாடுகளும் அவன் பாதுகாப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன; நீதிவிசாரணையின் பொருட்டுக் கல்கத்தாவில் ஓர் விசேஷ கோடுங் (Supreme Court) தாபிக்கப்பட்டது. ஹேஸ்டிங்ஸ் இங்கிலந்துக்குச் சென்றதின் பின்பும் இந்தியாவில் இன்னுஞ்சில அரசியல் திருத்தங்கள் இரண்டாவது பிற் (Pitt the Younger) என்னும் மந்திரியால் கொண்டுவரப்பட்டன. அவற்றால் இந்திய அரசாட்சிப் பொறுப்பு வர்த்

தக சங்கத்தாரிடமிருந்து எடுக்கப்பட்டுப் பிரித்தானிய இராசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகார சபையாரிடங் (Board of Control) கொடுக்கப்பட்டது. ஆயினும் வர்த்தக சங்கத்தாரே அரசாட்சியை நடத்திவந்தனர். ஆனால் பாராளுமன்றமும் பிரித்தானிய அரசாங்கமும் இந்திய விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தத் தொடங்கின. இந்தியாவில் ஆங்கிலேய வியாபார ஊக்கமும் அரசியல் ஊக்கமும் ஒன்றோடொன்று முரணுவண்ணம் வேறுபிரிக்கப் பட்டன.

## பிரான்சிய தேசகலகமும் ஆங்கிலேய பிரான்சிய யுத்தமும். (1789—1815)

1789ல் பிரான்சில் ஓர் மிகவும் பயங்கரமான தேசகலகம் ஆரம்பமாயது. அங்கே தாழ்ந்த வகுப்பினரும் சாதாரண பிரஜைகளும் அரசனாலும் மந்திரிமாராலும் உயர்ந்த வகுப்பினராலும் நெடுங்காலமாக அதிகம் இம்சைப்படுத்தப் பட்டார்கள். ஆதலால் கஷ்டத்துக் காளானோரெல்லாம் ஒருங்குதிரண்டு, அரசனைச் சிரச்சேதஞ் செய்து, இராச்சியத்தைக் குலைத்து, படுகொலையும் பலஅக்கிரமமும் நிறைந்த கொடுங்கோலை (Reign of Terror) நாட்டினர். ஐரோப்பா முழுவதுந் திகிலடைந்தது. பிறஷியாதேசத் தரசனும் அவுஸ்திரியசக்ரவர்த்தியும் மேற்படி கலகத்தைத் தணிக்கும் பொருட்டுக் கலகக்காரரை எதிர்த்துப் போருக்கேகினர். கலகக் காரரோ அவர்களை வென்று, அயல் நாடாகிய பெல்ஜியத்துக்கும் படையெடுத்துச் சென்றனர். பெல்ஜியத்தைக் காக்கும்பொருட்டு ஆங்கிலேயரும் பிரான்சிய கலகக்காரரை எதிர்த்து யுத்தத்துக்குச் செல்வாராயினர் (1793).

இச்சமயத்தில் ஐரோப்பாக்கண்டம் முழுவதையும் அதிரச்செய்து, சக்ராதிபத்தியங்களையும் ஏனைய அரசுகளையும் அடியற்றவைபோல அசைத்து, இக்கலகக் காலத்தி

லேயே பிரான்சிய இராச்சிய ஸ்தாபனங்களையுஞ் சனசமூக வாழ்வையுந் தான் நினைத்தபடி தன்வசதிக்கேற்பத் திருத்தி உருப்படுத்தி, சில அந்நிய இராச்சியங்களையுந் தனக்குக் கீழ்ப்படுத்தி, தனது அதிஅற்புதமான வீரதீரத்தை என்ஞான்றும் உலகம் மெச்சும்படி விளங்கவைத்த நெப்போலியன் போனப்பாட் (Napoleon Bonaparte) என்பான் பிரான்சிய கலகக்காரரின் பிரசாதிபத்தியத்துக்குத் தலைவனுஞ் சேனபதியுமானுன். அன்னவனின் ஆட்சியாலுஞ் சூழ்ச்சியாலும் ஸ்பானியரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரைப் பகைத்து அவருடன் சமர்புரிய ஏவப்பட்டனர். ஆங்கிலேயரும் அஞ்சிப் பின்வாங்கினரல்லர். ஆங்கிலேயர் பக்கத்திலும் இரண்டாவது பிற் (Pitt the Younger) என்னும் மந்திரியும் நேல்சன் என்னும் கப்பல் தளகர்த்தனும் (Admiral Nelson), டியூக் ஒவ் உவேலிங்ரன் (Duke of Wellengton) எனப் பிற்காலத்தில் மகத்துவப் பட்டப்பெயர் தாங்கிய உவெல்ஸ்லி (Wellesley) என்னுஞ் சேனுபதியும் பிரான்சியரின் நானுவித பிரயத்தனங்களையும் ஆங்காங்கு பிரதிகூலமாக்கித் தம்மையும் தம் ஊரையுங் கௌரவப் படுத்திக் கீர்த்தியெய்தினர்.

இரண்டாவது பிற்றே சதாம் என்னும் முதலாவது பிற்றின் மகன். அவன் பிதாவைப்போல மிக்க வாக்குவல்லபனும், யுத்த விவகாரங்களில் விற்பன்னனும், அரசியல் தந்திரத்தில் மகா நிபுணனும், தனது திறமையில் கடைப்பிடியான பூரண விஸ்வாசமுடையவனும், சிறந்த நேர்மை நன்னெறியுடையனுமாய்விளங்கினன். பாலியப்பருவத்திலேயே பாராளுமன்றத்தின் பிரதிநிதிசபைக்கு ஓர் அங்கத்தவனுகத் தெரியப்பட்டான். இருபத்தைந்தாவது வயதிலே பிரதம மந்திரியானுன் (1783). பிரதம மந்திரியான காலந்தொட்டு அடுத்தபத்துவருடங்களாக நாட்டின்உள்விவகாரங்களை ஒழுங்கு

படுத்தி, வரியைக் குறைத்து, வியாபாரத்தை அபிவிருத்தி செய்து, நாட்டைச் செல்வநாடாக்கிப் பெலப்படுத்தினன். முக்காலே மூன்றுவீசமும் கத்தோலிக்க சமயத்தாரான அயர்லந்து வாசிகளை அங்குள்ள புரொட்டெஸ்றன்ற் கிறிஸ்து மதஸ்தர் மூன்றாவது உவில்லியங் காலந்தொட்டு அடக்கி ஆள முயன்றமையாலும், பிரான்சிய கலகக்காரரின் ஏவுதலாலும், தேசகலகமென்னுந் தொற்றுநோயாலும், மேற்போந்த கத்தோலிக்கர் 1798ல் அயர்லந்தில் ஓர் கலகம் விளைக்க, அதனால் அங்குள்ள அரசாட்சியரர் சில அக்கிரமங்களைச் செய்ய, அவற்றையெல்லாம் பார்த்திருந்த இரண்டாவது பிற் அயர்லந்தையும் இங்கிலந்துடன் சேர்த்து இரு தேச பாராளுமன்றங்களையும் இணைத்து ஒன்றாக்கி (Act of Union, 1800), இருசாதியாரையும் ஒரேவித பிரமாணங்களால் ஆளுகை செய்யத்தக்க ஒழுங்குகளையும் அமைத்து, கலகக்காரரை ஒருவாறு பிரீதிப் படுத்தினன். மேலும் கத்தோலிக்கர், புரொட்டெஸ்றன்ற் மதஸ்தர்என்றபேதமின்றி இருவகுப்பினருக்கும் ஒரே மாதிரியான அரசியற் சிலாக்கியங்களையும் ஏனைய உரிமைகளையுங் கொடுக்க முயன்றனன். ஆனால் அதற்கு அரசன் உடன்படாமையால் தனது மந்திரி உத்தியோகத்தைக் கைவிட்டனன். மேற்கூறிய கத்தோலிக்கர் வாக்குரிமை (Right of Voting) யையும் ஏனைய அரசியற் சௌகரியங்களையும் 1829 வரையும் பெற்றிலர்.

ஆங்கிலேயருக்கும் பிரான்சியருக்குமிடையில் பிரான்சியதேச கலக சம்பந்தமாக முதன்முதல் 1794-ல் ஓர் கடல்யுத்தம் நடந்தது. அதில் ஆங்கிலேயர் பிரான்சியரை ஆங்கிலகால்வாயிற் தோற்கடித்தனர். எனவே பிரான்சியர் வேறுவழிபார்த்தனர். ஒல்லாந்தரை வென்று அவர்களுடைய கப்பல்களுடனும், ஸ்பானியரைப் பலவந்தப்படுத்தி

அவர்களுடைய கடற்பட்டாளத்துடனும் இங்கிலந்தைச் சூழ எத்தனித்தனர். ஆனால் ஆங்கிலேயர் அச்செய்திகளை யறிந்து ஸ்பானியரைப் போர்த்துக்கல் தேசத்துக்குச் சமீபமாகச் சேன்ற் வின்சேன்ற்முனை (Cape St. Vincent) யடியிலும் ஒல்லாந்தரை காம்பர்டவுன் (Camperdown) என்ற இடத்திலும் அபஜெயப்படுத்தினர். சேன்ற் வின் சேன்ற் என்ற கடற்போரிலேயே நேல்ஸன் என்னும் ஆங்கிலேயமாலுமி தனது கீர்த்தியை முதன்முதல் நாட்டிவைத்தான். பின்னர், ஆங்கிலேயரின் கீழைத்தேச வியாபாரச் செல்வாக்கைக் கண்டுங் கேட்டும் அழுக்காறடைந்த பிரான்சியர், ஆங்கிலேயரை அவ்விடங்களினின்றுந் துரத்தித் தாமே ஓர் கீழைத்தேச சக்ராதிபத்தியத்தைத் தாபிக்க வேண்டுமென்னும் பெருநோக்கங்கொண்டு, நெப்போலியனை எகிப்துக்கனுப்பி அவ்வூரைப்பிடிக்க, நேல்ஸன் பிரான்சியர் கடல்மார்க்கமாய் அங்கு அனுப்பிய சேனையை நைல் நதிக்கணித்தாய்ச் சந்தித்து அதை முற்றுயழித்தனன் (The Battle of Nile). ஆனதனால் நெப்போலியன் பிரான்சுக்குத் திரும்பினன். பிரான்சியரின் கீழைத்தேச சக்ராதிபத்தியமும் மனோராச்சியமளவில் மாத்திரம் நின்றுவிட்டது. அப்பால், ஆங்கிலேயருக்குமாறுக ஆயுதபாணிகளாய்த் தமது நடுவுநிலைமையை நாட்ட எத்தனித்த ஐரோப்பாவின் வடபாகத்தாரை அடக்கும்பொருட்டு ஆங்கிலேயர் நெல்ஸனைப் பால்ற்றிக்கடலின் முகத்துவாரத்துக்கனுப்ப, அவன் டேனியரைக் கோப்பனேஜென் (The Battle of Copenhagen) என்ற இடத்தில் தாக்கி அவர்கள் கப்பல்களைச் சிதைத்தனன். இந்தவிதமாக ஆங்கிலேயர் கடற்போரிலுங் கடல் விஜயத்திலும் மென்மேலும் மகத்துவமடைந்து வந்தனர். கேப்கொலனி (Cape Colony), இலங்கை, அம்போயினு (Amboyna), சில மேற்கிந்திய தீவுகள் ஆகிய இவையெல்லாம் ஆங்கிலேயர் கைவசப்பட்

டன. 1802-ல் பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் ஓர்வித சமாதானமேற்பட்டது (Peace of Amiens).

இந்தியாவிலும் மேற்கூறிய யுத்தக்கிளர்ச்சி பரவாது விடவில்லை. உவாறென் ஹேஸ்டிங்ஸின் பின் கோண்வாலிஸ் (Lord Cornwallis) என்பான் ஆங்கிலேயரின் இந்திய இராச்சியங்களை ஆளுகை செய்துவந்தான். அவன் இந்திய பிரஜைகளுக்குப் பிரீதியாய் இராச்சியம் புரிந்து வங்காளத்தில் அரசிறை விகிதத்தைக் குறைத்து அதை எக்காலத்தும் ஒரேமாதிரியாகவிருக்கத்தக்கதாகத் திட்டஞ்செய்து, (Permanent Settlement of Revenue of Bengal) நீதி விசாரணை முறைகளையுந் திருத்தி, சமாதானத்தை மேற்கொண்டும் ஒழுகினன். மைசூரதிபன் ரிப்பு சுலுத்தானும் மராட்டியருந் தங்கள் இராச்சியங்களைச் சிறுபான்மை பெலப்படுத்தி அந்நியரான ஆங்கிலேயரின் அதிகாரத்தை அடக்கினலோமெனப் பொருமைகொண்டனர். இத்தருணத்திற்றான் பிரான்சியர் கீழைத்தேச சக்ராதிபத்தியமொன்றைத் தாமும் தாபித்து நிலைநிறுத்த வேண்டுமென்று அவாவினர். ஆதலால் அவர்கள் சில காரிய காரரை இந்திய மன்னரின் சமஸ்தானங்களுக்கனுப்பிச் சில சூழ்ச்சிகளைச்செய்தனர். அவற்றை யறிந்த ஆங்கிலேய காவலன் இந்தியமன்னரை எதிர்த்துப் போருக்கேகினன். முதலாவது ஆங்கிலேயர் ரிப்பு சாஹிப்பைத் தாக்கி அவனது தலைநகராகிய சிறீரங்கபட்டினத்தைப் (Seringapatam) பிடித்து அவனையுங் கொன்றனர் (1799). இந்தயுத்தத்தில் உவெல்ஸ்ஸிலி யென்னும் ஆங்கிலேய சேனுபதியே பேர்வாங்கினன். இரண்டாவது, மராட்டியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் யுத்தம் நடந்தது. அதிலும் உவெல்ஸ்ஸி மராட்டியரை அஸே (Assaye) என்ற இடத்திலும் லஸ்வாடி (Laswari) என்ற இடத்திலும் சின்னபின்னப்பட அடித்து

வெற்றிமாலை சூடினன். (1803) இந்த உவெல்ஸ்லியே பின்னர் டியூக் ஒவ் உவெலிங்டன் என மகத்துவ பட்டதாரியாகி நெப்போலியனை வென்றவன். மேற்போந்த யுத்தங்களின் பயனாக ஆர்க்காடுந் தஞ்சாவூரும் ஆங்கிலேயரின் நேர் ஆளுகைக்குட்பட, மைசூர் மகாராசனும், மராட்டிய அரசனான பேஷ்வா (The Peshwa) வும், அயோத்தியாபுரி நவாப்பும் திறை அரசரானார்.

1802-ல் நடந்த அமியென்ஸ் சமாதானத்தால் நெப்போலியன் பிரான்சிய பிரசாதிபத்தியத்துக்கதிபனாக ஆங்கிலேயரால் அங்கீகரிக்கப்பட்டான். ஆனால் சடுதியில் ஆங்கிலேயரும் பிரான்சியரும் ஒருவர்மீதொருவர் அவநம்பிக்கை கொள்ளத் தொடங்கினர். அதனால் மறுபடியும் யுத்தம் ஆரம்பமாயது. உடனே நெப்போலியன் தன்னைப் பிரான்சியரின் சக்ரவர்த்தியாக்கி (1804), இங்கிலந்துக்குப் படையெடுத்துச்செல்ல ஒரு இலட்சம் போர்வீரரை ஒருங்கு சேர்த்துப் பிரான்சின் வடகரையை யடைந்தான். அந்தக்ஷணமே அச்சேனையை இங்கிலந்துக்குக் கொண்டுசெல்லும் பொருட்டு ஸ்பானியாவிலிருந்தும் ஓர் கடற்பட்டாளத்தை வரவழைத்தான். ஆங்கிலேயருந் தங்கள் கால்வாய்க் கரைகளை மிக எச்சரிக்கையுடன் காவல்புரிந்துநின்றனர். அதற்கிடையில் நேல்சன் என்னும் ஆங்கிலேய கப்பற்சேனாபதி ஸ்பானிய கடற்பட்டாளத்தை எதிர்கொண்டு தாக்கி ரிறவல்கார் (Trafalgar) என்றஇடத்தில் பிரான்சிய ஸ்பானிய கப்பல்களை உடைத்துந் தகர்த்துஞ் சேதப்படுத்தி வெற்றிமாலைசூடினன். அத்துடன் பிரான்சியரின் கப்பற்சேனாதத்துவமு (Naval power) மழிந்தது; அவர்களின் படையெழுச்சியுந் தடைப்பட்டது. நெல்சனும் ரிறவல்காரிலேயே இறந்தனன்.

பலவிதத்தாலும் ஆங்கிலேயரை அடக்கவோ அழிக்கவோ நெப்போலியன் கூடியளவு முயன்றும் இயலாது, ஈற்றில் வேறுவழிதேடினன். ஆங்கிலேயர் கடலாட்சியில் ஒப்புயர்வற்ற மகத்துவமு மதிகாரமு முடையவரென்றால், தான் தரையாட்சியில் அவ்விதம் மகத்துவமு மதிகாரமு மடைந்து அவர்களை வேறுநாடுகளுடன் வியாபாரஞ்செய்ய விடாமல் தடுத்து அடக்கவேண்டுமென்றெண்ணினன். அவ்வாறு எண்ணங்கொண்டு கிட்டத்தட்ட ஐரோப்பாக்கண்டம் முழுவதையும் ஒவ்வோர் நாடாகத் தன்னாணைக்குள்ளாக்கி, ஆங்கிலேயரின் ஐரோப்பிய வியாபாரப் போக்குவரவைத் தடுத்தனன் (The Berlin Decree, 1808). ஆங்கிலேயரும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் பிரான்சியருடன் வர்த்தகஞ்செய்யவிடாது தடுத்தனர் (Order in Council). கடைசியாய்ப் பிரான்சியருடன் சேர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளே அதிகம் நஷ்டப்பட்டன. ஏனெனில் ஆங்கிலேயர் தமது கடலாட்சி யதிகாரத்தால் ஏனைய ஐரோப்பிய நாடுகளை ஆசிய அமெரிக்க வியாபாரத்தி லீடுபடவிடாது தடுத்துக்கொண்டனர். இதற்கிடையில் நெப்போலியன் தான் இதுகாறும் பிடித்த நாடுகளிலுள்ள அரசரை அகற்றி, தனது சகோதரரையும் ஏனைய சுற்றத்தாரையும் அரசராக்கினன். அதனால் ஸ்பானியரும் போர்த்துக்கீசரும் ஆங்கிலேயரின் உதவியைவேண்டி, பிரான்சியரை எதிர்த்துப் பொருதினர் (1808). இந்த மகா குடாநாட்டு யுத்தத்தில் (The Great Peninsular War) ஆங்கிலேய ஸ்பானியரும் பிரான்சியரும் அநேக போர்க்களங்களில் எதிர்முகமாக நின்று யுத்தம்புரிந்தனர். கோறுனு (Coruna) என்ற இடத்தில்மாத்திரம் பிரான்சியர் சிறுகவெற்றியடைந்தனர் ஆனால் தலவீரு (Talavera), புசாய்க்கோ (Busaco), பரோசா (Barossa), அல்புஎரு(Albuera), ஸலமன்கா (Salamanca,)

விற்ரோறியா (Victoria) என்ற இடங்களில் ஆங்கிலேய சேனுபதிகள், அவர்களுள்ளும் விசேஷமாய் உவெல்ஸிலி, பிரான்சிய சேனைத் தலைவரைக் கலங்கச்செய்து, தப்பியோடத்தானும் வழியின்றி ஈற்றிற் பிறனீஸ் (The Pyrenees) மலையைக்கடந்து பின்வாங்கும்படி செய்தனர் (1813). உவெல்ஸிலியென்பான் மேற்போந்த யுத்தங்களில் தான் செய்துகொண்ட வீரச்செயல்களின் பெறுபேருக டியூக் ஓவ் உவெலிங்ரன் என மகத்துவப் பட்டதாரியாயினன். நெப்போலியனே பின்னர் ருஷியாவுக்குப் படையெடுத்துச் சென்று தன் சேனையின் ஐந்தில் நாலுபங்கையுமிழந்தனன். அப்பால் ருஷிய, அவுஸ்திரிய, பிறஷிய சேனைகளால் தாக்கப்பட்டு, லீப்ஸிக் (Leipzig) என்றஇடத்தில் தோற்கடிக்கப்பட்டு, ஈற்றில் பாரீஸ் நகரத்தில் பிடிக்கப்பட்டு முடியிழந்தவனுய் எல்பா (Elba) தீவையாளும்படி தேசாந்தர மனுப்பப்பட்டான். ஆனுல் சிலமாசங்களின்பின் நெப்போலியன் எல்பாவை விட்டுத் தப்பியோடிப் பிரான்சில் நுழைய, மறுபடியும் யுத்தம் ஆரம்பமாயது. இம்முறை ஆங்கிலேய சேனுபதி உவெலிங்ரன், பிறஷியரின் உதவியைக்கொண்டும் நெப்போலியனை உவாட்டர்லூ (Waterloo 1815) என்ற இடத்தில் அதிமோசமாய்த் தோற்கடித்தனன். பின்பு நெப்போலியன் ஆங்கிலேயராற் பிடிக்கப்பட்டு ஸேன்ற் ஹேலினுத் (St. Helena) தீவுக்கனுப்பப்பட்டான் (1815). அவன் அங்கே சிலகாலம் வசித்துப் பின் இறந்தனன். ஏனையோர் சமாதானப்பட்டனர் (Treaty of Paris, 1815). மோல்ற்ரு, மோறிஸஸ், பிரித்தானிய கையனு, ஹொன்டுருஸ், சிலமலாய்நாடுகள் ஆகிய இடங்கள் ஆங்கிலேயருக்குச் சேர்ந்தன.

## அவுஸ்திரேலியாவிற் குடியேற்றம்.

1700-ம் ஆண்டு டாம்பியர் என்னும் மாலுமி அவுஸ்திரேலியாவைத் தரிசித்தானென்று முன்னே கூறினேம். ஆனுல் அக்காலத்தில் ஒருவரும் அங்கு குடியேற நினைக்க

வில்லை. சப்தாண்டு யுத்தத்தின்பின்னர், 1768-ல் குக் கென்னுங் கப்பற் றலைவன் (Captain Cook) அவுஸ்திரேலியாவை ஆராய்ச்சி செய்து நியூஸீலன்ட் (New Zealand) தீவையுங் கண்டுபிடித்தனன். பின்பு சில கரைப்பாகங்களைப் பரிசோதித்து, அவுஸ்திரேலியா ஓர் செழிப்பான நாடென்றும், அது குடியேறுவதற்கோர் வசதியான இடமென்றுந் தஞ்சாதியரான ஆங்கிலேயருக்குத் தெரிவித்தனன். இச் சமாசாரத்தைக் குக் ஆங்கிலேயருக்குத் தெரிவித்த காலத்திலேயே அமெரிக்கர் இங்கிலந்திலிருந்தும் பிரிந்து சுயராச்சியத்தை நாட்டினர். இவ்வளவுகாலமும் ஆங்கிலேயர் தம்மூர்க் கடுங்குற்றவாளிகளை அமெரிக்காவின் சிலபகுதிகளுக்குத் தேசாந்திரிகளாயனுப்பிவந்தனர். ஆனால் அமெரிக்கரின் சுதந்திரத்துடன் ஆங்கிலேய குற்றவாளிகளை அமெரிக்காவுக்குத் தேசாந்தரமனுப்புமுரிமையுங் கெட்டது. ஆதலால் இனி அவுஸ்திரேலியாவே குற்றவாளிகளுக்குத் தேசாந்தர வாசத்துக்குத் தக்க இடமென்று ஆங்கிலேயர் அறிந்தனர். முதன்முதல் 1787-ல் ஓர் கூட்டங் குற்றவாளிகள் அவுஸ்திரேலியாவுக் கனுப்பப்பட்டார்கள். அடுத்தவருடமும், பின்பு 1803-ம் ஆண்டிலுஞ் சிலகூட்டம் மறியற்காரர் அங்கு அனுப்பப்பட்டார்கள். இந்தவிதமாகக் குடியேறப்பெற்ற அவுஸ்திரேலியா, காலகதியிற் பிரித்தானிய சக்ராதிபத்தியத்தின் ஓர் பிரதான அங்கமாயது. அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்களை ஆங்கிலேயர் இழந்தமை, அவுஸ்திரேலியாவை அவர்கள் சம்பாதிப்பதற் கேதுவாயது. ஆனால் உண்மையளவிற் பிரான்சியரை முந்திக்கொள்ளவெண்ணியே ஆங்கிலேயர் அவுஸ்திரேலியாவை யடைந்து குடியேறினர்.

---

# சக்ராதிபத்திய வளர்ச்சிக்காலம்.
## (Period of Development.)
## 1820—1825.

### கமத்தொழில் அருக்கமுங் கைத்தொழிற்பெருக்கமும்.
### (The Industrial Revolution.)

பதினெட்டாஞ் சதாப்த ஆரம்பத்திலே (1700) பிரித்தானியா முழுவதும் ஓர் கமத்தொழில் நாடாயிருந்ததெனலாம். ஆனல் அச் சதாப்த அந்தத்திலே அது ஒரு கைத்தொழில் நாடாய்மாறி உலகம் முழுவதற்கும் கைத்தொழிற் பொருள்களை இழைத்து விற்குமோர் சிறந்த வியாபார தேசமாயது. அதற்குக்காரணம் அநேக இயந்திரங்களை நவமாய்க் கண்டுபிடித்தமையும், இரும்பை உருக்கி ஆயுதங்கள், துப்பாக்கி, இயந்திரங்கள் முதலியனவற்றை உண்டுபண்ணக் காட்டுவிறகு குறைந்துபோக, நிலக்கரியை விறகாய்ப்பாவிக்கக் கண்டுபிடித்தமையுமேயாம். ஜோசையா உவெஜ்உவூட் (Josiah Wedgewood)என்பான் சில புதுமாதிரியான மட்பாத்திரங்களை வனையவும் அவற்றிற் சித்திர வேலைகள் செய்யவும் சில வழிகண்டுபிடித்தான். ஹார்கிறீவ்ஸ் (Hargreaves), ஆக்றைற் (Arkwright), குறேம்ரன் (Crompton), காட்றைற் (Cartwright) என்போர் நெசவுத் தொழிலை விருத்திசெய்வதற்காக அநேக வேறுவேறு புது இயந்திரங்களைக் கண்டுபிடித்தனர் (1766—1769). முதன் முதல் இந்த இயந்திரங்கள் 'நீரோட்ட சக்தியால்' (Water power)இயக்கப்பட்டன. 'பின்னர் ஜேம்ஸ் உவாற் என்பவனுற்கண்டுபிடிக்கப்பட்ட நீராவிச் சக்தியாலியக்கப்பட்டன.

நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும் நீரை வெளியேபாய்ச்சுவதற்கும் ஓர்வித நீராவியந்திரத்தை உவாற் கண்டுபிடித்தான். ஆகவே நிலக்கரியறுப்புவேலையும், இரும்புவேலைகளும், நெசவுவேலைகளும், மட்பாத்திரவேலைகளும், பிரித்தானியாவில் மலிந்துபொலிந்து விளங்கத்தொடங்கின. நீராவிச் சக்தியைக் கொண்டு கப்பல்களை ஓட்டவும் இரதங்களை இழுத்துச் செல்லவும் ஜோர்ஜ் ஸ்ரிவின்ஸன் (George Stephenson) சில வழிகளைக் கண்டுபிடித்தான். பிரயாணிகளை இழுத்துச் செல்லும் ஓர் புகையிரதமும் அப்புகையிரதமோடுவதற்கோர் பாதையும் அவனால் 1825-ல் முதன் முதல் தாபிக்கப் பட்டன. கைத்தொழிற் சாலைகளும் பிரயாண வசதிகளும் வரவர அதிகரித்துவந்தன. தொழிலாளரெல்லாங் கமத் தொழிலைவிட்டுக் கைத்தொழிலைப் பின்பற்றத் தொடங்கினர். ஏனெனிற் கமத்தொழிலிலுங் கைத்தொழிலே காலகதியில் அதிக வருமானத்தைக் கொடுத்தது. எனவே ஆங்கிலேயரின் சீவனோபாய வழிகள் முற்றாய் ஓர் மாற்றமடைந்தனவெனலாம். அநேக பழைய நகரங்கள் குடிசனமின்றி மங்க, தொழிற்சாலைகளேற்பட்ட விடங்களிலெல்லாம் புதிய நகரங்கள் மலிந்து சிறந்தன.

## நாலாம் ஜோர்ஜும் (1820—1830).
## நாலாம் உவில்லியமும் (1830—1837).
## George IV. & William IV.)

இவ்விருவரசருஞ் சகோதரராவர். இவர்கள் மூன்றாம் ஜோர்ஜின் புதல்வர்கள். இவர்கள் காலத்திலே ஆங்கிலேயர் கலகமின்றியும் யுத்தமின்றியுஞ் சமாதானமாய் வாழ்ந்து கைத்தொழிலையும், வியாபாரத்தையும், அரசியலையும் விருத்திசெய்தனர். இந்தியாவில் மாத்திரம் பிரமதேச வாசிகளுடன் (The Burmese) ஓர் சிறுயுத்தம் நடந்தது (1824).

அதில் ஆங்கிலேயரே வெற்றியடைந்து இறங்கூனையும், அரக்கனையுங் கைப்பற்றினர். இங்கிலந்தில் ஓர் விசேஷ அரசியல் திருத்தம் (The Reform Bill, 1832) கொண்டுவரப்பட்டது. கைத்தொழிற் பெருக்கத்தாலுண்டாய புதுநகர வாசிகளுக்குப் பாராளுமன்றத்திற் பிரதிநிதிகளில்லாமையும், குடிசனமின்றிச் சிதைந்துபோன பழைய நகரங்களோவ்வொன்றுக்கும் இன்னுமிரண்டொரு பிரதிநிதிகள் அனுவசியமாய்த் தெரியப்பட்டுவந்தமையும், வாக்குரிமையைச் சாதாரண சனங்களுக்குங் கொடுக்கவேணுமென்ற அவாவும் மேற்படி அரசியற்றிருத்தத்துக்குக் காரணமாயின. இதுகாறும் தனவந்தரையே அங்கத்தவராகக்கொண்ட பாராளுமன்றம் மேற்படி திருத்தத்தால் சாதாரண சனங்களேயே பெரும்பாலும் அங்கத்தவராகக்கொண்டது. பிரதிநிதித்தெரிவு முதலியவற்றைப் பற்றியுஞ் சிலதிருத்தங்கள் செய்யப்பட்டன. இந்த அரசியல் திருத்தத்தின் பயனாக பிரித்தானிய சக்ராதிபத்தியத்தின்கீழ் அடிமை வியாபாரமேனும் அடிமைத்தொழிலேனு மிருக்கப்படாவென 1833ல் ஓர் சட்டங் கொண்டுவரப் பட்டது. இதற்காக உவில்லியம் உவில்பவோஸ் (William Wilberforce) என்பவன் தனது வாணாள் முழுவதும் பாடுபட்டு உழைத்தனன். அடிமைகளை வைத்திருந்த தோட்டக்காரருக்கு அரசாட்சியார் நட்டஈடு கொடுத்தனர். அப்படிக் கொடுக்கப்பட்ட பணம் இரண்டுகோடி பவுணும். விவாக மரண ஜெனனப் பதிவுப் பிரமாணங்களும் இவ்வரசர் காலத்திலேயே கொண்டுவரப் பட்டன.

## விக்ரோறியா இராணி.
## (Queen Victoria. 1837—1901)

மகத்துவந்தங்கிய இந்த அரசியாரின் இராச்சியகாலம் மிகவும் விசேஷமுடைத்தாயும் நீடித்தும் விளங்கியது. இவர் காலத்தில் முதன்முதல் கனடாவும் அதைபடுத்த நாடுகளும் ஐக்கிய இராச்சிய நாடுகளாக ஒருங்கு சேர்க்கப்பட்டு பிரித்

தானிய சக்ராதிபத்தியத்தின் பாதுகாப்பில் சுய இராச்சியத்தை யடைந்தன. அப்பால் அவுஸ்திரேலியாவும் அதை யடுத்த நியூஸீலண்டும் (New Zealand) ஆங்கிலேய பேரரசாங்கத்தின்கீழ் ஓர் மகா பிரசாதிபத்தியமாயது. தென் ஆபிரிக்காவிலும் ஆங்கிலேயர் அநேக நாடுகளைச் சேர்த்து, தங்கள் சக்ராதிபத்தியத்தின் மேற்பார்வையில் ஓர் ஐக்கிய சுயாதிபத்தியத்தை வகுக்கவேண்டிய முயற்சிகள் செய்தனர். பரதகண்டத்திற் பாஞ்சால நாட்டையும் பிரமதேசத்தையும் பிடித்தும், 1857ல் எழுந்த இந்திய தேச கலகத்தைத் தணித்தும், ஏறக்குறைய இந்தியா முழுவதையும் இராணியாரின் நேராளுகைக்குள் கொண்டுவந்தனர். இந்திய விஷயங்களைப் பாராளுமன்றத்தில் எடுத்தாளுவதற்கும் இந்திய அரசியலைக் கட்டுப்பாடு செய்வதற்கும் இந்தியா மந்திரியென்ற ஓர் இராசமாலிகிதரையும் (The Secretary of State for India) அவருக் குதவிபுரிவதற்கு "கவுன்சில் ஒவ் இன்டியா" என்னும் ஓர் ஆலோசனைச் சங்கத்தாரையும் ஆங்கிலேய பேரரசாங்கத்தார் நியமித்தனர். எகிப்துதேசமும் ஆபிரிக்காவில் இன்னுஞ்சில நாடுகளும், பூமியில் ஆங்காங்கு வேறுசில தீவுகளும், சிறுநாடுகளும் இந்த அரசியார் காலத்தில் ஆங்கிலேயருக்குச் சேர்ந்தன. புகைரதமார்க்கங்களும், தபால் மின்சார தந்தி ஸ்தானங்களும், நீராவியந்திரக் கப்பல்களும் ஏராளமாக அமைக்கப்பட்டன. சாஸ்திர ஆராய்ச்சியும், இலவசகட்டாயக் கல்வியும், தீர்வைவரியில்லா இறக்குமதி வியாபாரமும், விசேஷ அரசியற்றிருத்தங்களும், இன்னோரன்ன வேறு சீர்சிறப்பும் இந்த இராணியார் காலத்தில் பிரித்தானியாவில் மலிந்து விளங்கின. மேற்போந்த நிகழ்ச்சிகளிற் பிரதானமானவற்றை ஒவ்வொன்று மெடுத்துச் சிறுக ஆராய்ச்சி செய்வாம்.

## கனடாதேச விரிவும் ஐக்கிய சுயராச்சியமும்.

## (Expansion and Confederation of Canada.)

அமெரிக்கர் ஆங்கிலேயராளுகையிலிருந்தும் பிரிந்து ஓர் ஐக்கிய பிரசாதிபத்தியத்தை ஏற்படுத்திக் கொண்டன ரென்பதை முன்னே விபரித்தேம். தாய் அரசாகிய ஆங்கிலேய பேரரசாங்கத்தினின்றும் பிரிய மனங்கொள்ளாத சில அமெரிக்கர் கனடாதேசத்தின் வடபாகங்களிலும் நோவாஸ்கோஷியாவின் ஓர் பாகத்திலுஞ் சென்று குடியேறினர். நோவா ஸ்கோஷியாவிற் குடியேறினோர் அப்பாகத்தை நியூ பிறன்ஸ்விக் (New Brunswick) என அழைத்து அதையோர் பிரித்தானிய குடியேற்ற நாடாக்கினர். கனடாவின் தென்பாகங்களில் வசித்தோர் யாவரும் பிரான்சியராவர். எனினும் இப்பிரான்சியர் ஆங்கிலேய அரசாங்கத்தின்கீழ் இராச நேசமும் இராச விஸ்வாசமுமுள்ள பிரசைகளாய் வசித்து வந்தார்கள். ஆனால் ஆங்கிலேய பேரரசாங்கத்தார், இக்கனடியருஞ் சிலகாலங்களில் அமெரிக்கரைப்போலவே கலகங்களை விளைத்துச் சுவதந்திரத்தை நாட்டித் தம்மினின்றும் பிரிவாரோவென்ற அச்சத்தாற் கனடாவை இரண்டுமாகாணங்களாகப் பிரித்து ஆளுகை செய்தனர். வடபாகங்களில் வசித்த ஆங்கிலேயருக்கு ஆங்கிலேய சீர் திருத்தத்துக்கேற்ற பிரமாணங்களையும், தென்பாகங்களில் வசித்த பிரான்சியருக்கு அவர்கள் பழக்க வழக்கத்துக்கும் நாகரித்துக்குமேற்ற பிரமாணங்களையும் வகுத்தனர். என்றாலும் இருசாதியாருக்குமிடையில் அநேக சச்சரவுகளும் விவகாரங்களுமுண்டாயின. லண்டனிலிருந்துகொண்டு கனடாவை ஆளுகை செய்வது ஆங்கிலேய பேரரசாங்கத்தாருக்கு ஓர் முடியாத காரியமாயிருந்தது. அங்கு தேசாதிபதிகளாக அனுப்பப்பட்டோரும்

ஊரவர்களுடைய தேவைகளை யறியாராய், அங்குள்ள நாட்டாண்மையுள்ள சில குடும்பத்தாரின் சொற்படியே நடச்கத் தொடங்கினர். பிரசைகளுந் திருப்தியடைந்திலர். கடைசியாய், பிரான்சியர் கலகஞ்செய்யவும் ஆரம்பித்தனர். ஆதலால் ஆங்கிலேய பேரரசாங்கம் லோட் டேர்ஹாம் (Lord Durham) என்பவரை அங்கு அனுப்பி, கனடியரின் குறைமுறைகளைப் படித்து, அவர்களுக்கேற்ற அரசியற்றிருத்தங்களைக் குறிப்பிட்டு வகுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டது. அவரோ 1832ல் ஏற்பட்ட அரசியற்றிருத்தத்தின்பின் கூடிய பாராளு மன்றத்தின் முற்போக்கு அல்லது உதாரகட்சியாரை (Liberals) ச் சேர்ந்தவர். அவரும் அவருடன் கனடா சென்றோரும் குடியேற்ற நாடுகளைக் குடியேறினோர் பொறுப்பிலேயே விடவேண்டுமென்றும், அரசியற் சுயாதீனமே ஈற்றிற் பெருநன்மை பயக்குமென்றும், அவ்வித அரசியற் சுயாதீனத்தைக் குடியேற்ற நாடுகளுக்குக் கொடுப்பதால் ஆங்கில அரசாங்கம் ஓர் ஐக்கிய மகா சக்ராதிபத்தியமாகுமென்றும், அடக்குமுறையால் இராசபக்தி தடைப்படுமென்றும், பெரும் உதாரகுண அபிப்பிராய முடையராய் விளங்கினர். ஆதலால் அவர்கள் கனடாவின் இருபகுதிகளையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்றும், கனடியருக்குப் பொறுப்பாட்சி (Responsible Government) கொடுபட வேண்டுமென்றும், அந்த ஆட்சியை அவர்கள் சனங்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் பாராளு மன்றத்தால் நடாத்தவேண்டுமென்றும் அறிக்கையிட்டனர். அவ்வறிக்கைப்படியே 1840ல் கனடாவுக்குப் பொறுப்பாட்சியுங் குடித்தெரிவுப் பாராளு மன்றமுங் கொடுபட்டது.

கனடாவைத் தவிர அதைஅடுத்த நியூபவுண்ட்லன்ட், நியூபிறன்ஸ்விக், நோவா ஸ்கோஷியா முதலிய குடியேற்ற நாடுகளுக்கும் குடித் தெரிவாட்சி முறைகளும் பொறுப்பாட்

சியுங் கொடுக்கப்பட்டன. ஆனால் இந்த நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் அரசாங்கத்தை வேறுவேறாக நிறுவி, பிறிது உதவியின்றிச் சுயேச்சையாய் நடக்கத்தக்க போதிய வலிமையுள்ளனவா யிருக்கவில்லை. கனடாவில் நிறுவப்பெற்ற பாராளுமன்றத்தில் ஆங்கிலேயரும் பிரான்சியரும் நீண்ட வாக்குவாதங்கள் நிகழ்த்தவும், அரசியற் கருமங்களில் ஒத்துழையாது முரணிக்கொள்ளவும் பாராமுகமா யிருக்கவுந் தொடங்கினர். 1861-ல் அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தையும் அடிமைத் தொழிலையும் அகற்றுவதை யிட்டு அமெரிக்கருக்கிடையில் ஓர் மகாயுத்தம் எழுந்தபோது, கனடியர் மிகவும் பயந்து தம்மைப் பாதுகாப்பதற்கு வடபாலுள்ள ஆங்கில குடியேற்ற நாடுகளெல்லாம் ஒருங்கு சேரவேணுமென்ற அவசரத்தை நன்குணர்ந்தனர். ஹட்சன் குடாக்கடலை (Hudson Bay) யண்டியிருக்கிற நாடுகள் தமக்கு எவ்வளவோ ஆதாயத்துக்கிடமா யிருக்கு மென்றும், அவற்றைப் பரிசோதித்து அங்கு குடியேறவேண்டுமென்றும், அன்றேல் ஒருசமயம் வேறு சாதியார் அங்கு குடி யேறக் கூடுமென்றும் ஒருவாறு அஞ்சினர் சிலர். ஆதலால் மேற்போந்த வேறுவேறான குடியேற்ற நாடுகளெல்லாந் திரண்டு ஓர் ஐக்கிய பிரசாதிபத்தியமாக வேண்டுமென்றவெண்ணம் அவர்களுள் உதித்தது. கனடா நாட்டு முதன் மந்திரியான சேர் ஜோன் மாக்டனல்ட் (Sir John Macdonald)என்பவரே இந்தஅபிப்பிராயத்தைப் பெரிதும் பரப்பினர். அநேக கஷ்டங்களின் பின்னர் கனடியதலைவர் மேற்படி அபிப்பிராயத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினர் எனவே 1867-ல் பிரித்தானிய வட அமேரிக்காச்சட்டம் (The British North America Act) என ஓர் மனு ஆங்கிலேய பாராளுமன்றத்திற் கொண்டு வரப்பட்டு, கனடா ஐக்கிய இராச்சியம் (The Federation of Canada) என்ற

மகா பிரசாதிபத்தியம் பிறந்தது. மூன்று வருடங்களின் பின் ஹட்சன்குடாக்கடலையடுத்த ஹட்சன் குடாக் கடற் சங்கத்தாரிட மிருந்தும் (The Hudson Bay Company) கனடியரால் விலைக்கு வாங்கப்பட்டன. 1871-ல் பிரித்தானிய கலம்பியாவும் (British Columbia) மேற்படி பிரசாதிபத்தியத்தைச் சேர்ந்தது. இந்த விதமாக வட அமெரிக்காவிற் கீழ்த்திசையில் அத்திலந்திச் சமுத்திரந் தொடங்கி மேற்றிசையில் பசுபிக் சமுத்திரம் வரையும், தெற்கே பெரிய வாவிகள் (The Great Lakes) தொடங்கி வடக்கே வடதுருவம் வரையும் ஆங்கிலேயக்கொடி பறக்குமோர் அதிபெரிய இராச்சியம் நிறுவப்பெற்றது. நியூபவுண்ட்லண்ட் மாத்திரம் இந்தப் பிரசாதிபத்தியத்தைச் சேராது இன்றுமோர் பொறுப்பாட்சிச் சுயாதீனக் குடியேற்ற நாடாய் விளங்குகிறது.

கனடாவில் ஐக்கிய பிரசாதிபத்தியம் நிறுவப்பெற்றதும் கனடியர் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசைக்குப் பல்லாயிரம் மைல் தூரத்துக்கு இரண்டு சமுத்திரங்களையும் இணைக்குமோர் புகைரதப் பாதையைத் திறந்தனர். அதனால் வெட்டாந்தரையாயும் சிறு புற்றரையாயும் (Prairies) இருந்த நிலங்கள் கோதுமை விளையுஞ் செழும் வயல்களாயும் ஆடு மாடு குதிரைமேயும் பசும்புற்றரையாயும் மாறின. இவ்வசதிகளையெல்லாங் கொண்ட கனடாவில் இன்றைக்கும் ஆங்கிலேயர் சென்று குடியேறுகின்றனர். அங்கு குடியேறுவதற்கு நீர்வளம் நிலவளம் நிறைந்த மருதநிலங்களும் இன்னும் ஏராளமாயிருக்கின்றன. கனடா ஐக்கிய இராச்சியத்தின் குடிசனமும் ஐஸ்வரியமும் ஏனைய தத்துவ இராச்சியங்களாற் கவனிக்கப்படக்கூடிய விதமாய் அதிகரித்துவிட்டன. கனடியரும் தம் தாய்நாட்டாராகிய பிரித்தா

னிய அரசாங்கத்தாரில் தங்கியிராது, தாய்நாட்டுக் குதவி செய்யக்கூடிய பெலத்தையுந் தத்துவத்தையுந் தாமேயடைந் துவிட்டனர். வியாபார விஷயத்திற் பிரித்தானியநாட்டுப் பொருள்களையே அமோகமாய் இறக்குமதிசெய்யும் பொருட்டு, கனடியர் பிரித்தானிய நாடுகளிலிருந்துங் கனடாவுக்குச் செல்லும் பொருள்களுக்குக் குறைந்த தீர்வை வரியும் (Preferential Tariffs) ஏனைய நாடுகளிலிருந்தும் அங்கு இறக்குமதியாகும் பொருள்களுக்குக் கூடிய தீர்வை வரியும் விதித்து (1897), தாய் நாட்டாரின் வியாபாரத்தைத் தம்நாட்டில் அபிவிருத்திசெய்தனர். யுத்தவிஷயத்தில் தென் ஆபிரிக்காப்போரிலும், கடந்த மகா ஐரோப்பிய யுத்தத்திலுந் தாய்நாட்டுக்குப் போதிய உதவி புரிந்தனர். 1909-ல் கடற்சேனையொன்றையுந் தாபித்து, தம்மை மேலும் பெலப்படுத்திக் கொண்டனர்.

## அவுஸ்திரேலியாவிற் குடியேற்றமும் பிரசாதிபத்தியவமைப்பும்.

## (Colonization of Australia and the Formation of the Commonwealth.)

1787ல் 757 குற்றவாளிகள் இங்கிலந்திலிருந்தும் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கே தென்கிழ்க் கரையில் நியூ சவுத் உவேல்ஸ்(New South Wales)என்ற இடத்திற் குடியேறினர். அடுத்தவருடம் சற்றே வடக்கே யுள்ள ஸிட்னி (Sydney) யென்ற பட்டினத்துக்கு அவர்கள் அகற்றப்பட்டார்கள். 1820 வரையும் அவுஸ்திரேலியாவிற் குடியேறப்பெற்றபாகம் அந்த ஸிட்னி பட்டினமும் அதன் சுற்றுக் கிராமங்களுமேயாம். 1784-ல் பாஸ் (Bass) என்பவன் பிற்காலத்தில் தன் பேரால் வழங்கப்பெற்ற

பாஸ் நீரிணைக்கூடாகச் சென்று ரஸ்மேனியாத் (Tasmania) தீவை ஆராச்சிசெய்து அங்குங் குற்ற வாளிகளைக் குடியேறச் செய்தனன். இவ்விதமாகக் குற்றவாளிகளைக் கொண்டு அவுஸ்திரேலியாவைக் குடியேற்றத் தொடங்கிய பூர்வ பிரயத்தனங்கள் அதிகம் அனுகூலமாகவில்லை. ஏனெனில் ஆங்கில வியாபாரம் அங்கு செல்லவில்லை. ஆதலாற் சனங்கள் போதிய உணவுப் பொருட்களின்றிப் பசியால் வருந்தும் பக்குவத்தையும் அடைந்தனர். ஆனல் 1823-ல் மேற்கு அவுஸ்திரேலியா பரிசோதிக்கப்பட்டு அது ஆங்கிலேயருக்குச் சமீபமான இடமென்றுங் குடியேறுவதற்குச் செழிப்பான பூமியென்றுங் காணப்பட்டது. எனவே அங்கு குற்றவாளிகளைத் தவிர ஏனைய ஆங்கிலேயருங் குடியேறலாஞர். இந்தவிதமாக அவுஸ்திரேலியா குடியேறப் பெற்று வரும்பொழுது, காலகதியில் அது ஓர் சிறந்த இராச்சிய நாடாக வருமென்பதை நன்குணர்ந்த உவென்ற்வோத் (Wentworth) என்னும் உத்தமகுணசீலர் அவுஸ்திரேலியாவிற் குற்றவாளிகளைக் குடியேற்றுவது முறையன்றென்றும், அவர்கள் அங்கு தாபிக்கப்பட்டவிருக்கும் அரசாங்கத்துக்குப் பெருந் தடையாயிருப்பரென்றும் அவர்களை அங்கு குடியேற்றுவதினுல் அவர்களைப் போன்ற பின் சந்ததியாரே அங்கு தோற்றுவரென்றும் ஆங்கில பேரரசாங்கத்தாருக்குத் தெரிவித்தனர். அரசாங்கத்தாரோ அவற்றைச் சிலகாலங் கவனியாது விட்டனர். பின் 1840-ல் ஆங்கில அரசாங்கத்தாருங் குற்றவாளிகளை அவுஸ்திரேலியாவுக்கனுப்புவதைத் தடைசெய்தனர். அத்தடையால் அவுஸ்திரேலியாவிற் குடியேற்றங் குறைந்துபோகாவண்ணம், சீவனோபாயத்துக்கு வழியின்றி யலைந்து திரியும் ஆங்கிலேயரையும் ஏனைய ஆங்கிலேய தொழிலாளரையும் அங்குசென்று குடியேறும்படி உவேக்வீல்ட் (Wakefield)

என்பார் ஏவினர். அவரது முயற்சிகளால் அவுஸ்திரேலியாவின் தென்பாகங்கள் குடியேறப்பெற்று, தேன் அவுஸ்திரேலியா, விக்ரோறியாவென்னுமிரு பெருங் குடியேற்ற பிரிவுகள் உண்டாயின. அவுஸ்திரேலியாவின் வடபாகம் உஷ்ணபூமி யாதலால் ஆங்கிலேயர் அங்கு குடியேறப் பிந்தினர். எனினும் வடகீழ்ப்பாகம் ஓர் செழிப்பான நாடென்று கண்டசிலர் அங்கு குடியேற, 1854ல் அப்பாகம் குவீன்ஸ்லந்தென (Queensland) ஓர் பெரும் பிரிவாயது. அப்பால் அவுஸ்திரேலியாவின் நடுப்பாகங்களும் ஆராய்ச்சி செய்யப்பட்டு மேற்கூறிய சில பிரிவுகளுடன் சேர்க்கப்பட்டன. இந்தவிதமாக அவுஸ்திரேலியா முழுவதும் 1860ம் ஆண்டளவில் பூரணமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு ஐந்து பெரும் பிரிவுகளாகக் குடியேறப் பெற்றிருந்தது. கனடாவிற் குடியேறிய ஆங்கிலேயர் பொறுப்பாட்சியைப் பெற்று ஆங்கிலேய பேரரசாங்கத்தின் பாதுகாப்பில் சுயாதீன ஆட்சி முறைகளைக் கையாடியடைத்த அநுகூலத்தை அவுஸ்திரேலியருஞ் சீக்கிரங் கேள்விப்பட்டனர். மேலும் அரசியல் விஷயங்களில் ஆங்கிலேய அரசாங்கத்தாருக்கும் அவுஸ்திரேலிய பிரசைகளுக்கு மிடையில் அநேக சச்சரவுகளும் வாக்குவாதங்களும் நிகழ்வதாயின. ஆதலால் அவுஸ்திரேலியருஞ் சுய ஆட்சிமுறைகளை அவாவி நின்றனர். ஆகவே 1851ல் தென் அவுஸ்திரேலியாவிலுள்ள பிரிவுகளெல்லாம் ஒருங்கு சேர்க்கப்பட்டு நியூ சவுத் உவேல்ஸ் என்னும் பொதுநாமத்துடன் சுய அரசுமுறைச் சிலாக்கியங்கள் உதவப் பெற்றன. 1859ல் குவீன்ஸ்லந்து மேற்படி பெரும் பிரிவிலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டுப் பிறிதோர் சுயராச்சிய பிரிவாக்கப்பட்டது. மேற்கு அவுஸ்திரேலியா 1890ல் தான் ஓர் சுய அரசு நாடாக அரசியற் சிலாக்கியங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலியா சுய ஆட்சிப் பொறுப்பையடைந்த பின்னர் நாட்டைச் சீர்திருத்தும்பொருட்டு அதிகஞ் சிரமப்படவேண்டியிருந்தது. அங்கு குடியேறுவதற்குப் போதிய ஆங்கிலேயரை எவ்விதமுஞ் சேர்க்கவேனுங் கவர்ந்திழுக்கவேனும் முடியாமலிருந்தது. ஆனாற் சடுதியில் அங்கு பொன்விளைவுள்ள நிலங்கள் கண்டுபிடிக்கப்பட, அச்செய்தி பிரித்தானியாவுக்கெட்ட, அநேக பிரித்தானியர் அவுஸ்திரேலியாவிற் குடியேற முன்வந்தனர். சில கமக்காரர் கமங்களையும், சிலகடைக்காரர் கடைகளையும், சிலகப்பற் காரர் கப்பல்களையும் விட்டகன்று, பொன்விளை நிலங்களிற் சுரங்கமறுத்து அதிக ஐசுவரியத்தைத் தேடலாமென்று அவுஸ்திரேலியாவுக்குச் சென்றனர். ஆரம்பத்திற் பேரவாவால் ஏமாந்துபோனரெனினும், பின்னர் பொற்சுரங்கவேலை நல்ல கைத்தொழிலாகி அநேகருக்குப் பெரும் ஊதியத்தைக் கொடுத்தது. அதனல் அநேகர் அவுஸ்திரேலியாவிற் குடியேற, அவுஸ்திரேலிய வியாபாரப் போக்குவரவுஞ் சிறந்து விருத்தியடைந்தது. புகைரதப் பாதைகளும் தந்திமார்க்கங்களுந் திறக்கப்பட்டன. அவுஸ்திரேலியா கம்பளி ஆட்டுமந்தைகளை வளர்ப்பதற்கும், கோதுமை உண்டாக்குவதற்கும் ஓர் சிறந்தநாடாய் விளங்கியது. முதன்முதல் அவுஸ்திரேலியர் கம்பளிரோமத்தை மாத்திரம் ஐரோப்பாவுக் கனுப்பக் கூடியவரா யிருந்தனர். காலகதியில் பசுமந்தைகளையுங் குதிரைகளையும் விருத்தி செய்தும், பொன் முதலிய லோகங்களைக் கண்டுபிடித்தும், அநேகவகைப் பழமரங்கள், கொடிகள், செடிகளை உண்டுபண்ணியும், அவையனைத்தாலுமாய பொருள்களை வியாபாரச் சரக்குகளாக ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். ஆகவே அவுஸ்திரேலியாவிற் குடிசனம் அதிசீக்கிரமாய் அதிகரித்தது. இப்போ ஐம்பது இலட்சஞ் சனங்களுக்குமேல் அங்கு வசிக்கின்றனர்.

அவுஸ்திரேலியர் சுயஆட்சிப் பொறுப்பைப் பெற்றுந் திருப்தியடைந்திலர். அந்த பொன்விளைவு கண்டுபிடிக்கப் பட்டகாலந் தொடங்கி, சீனரும் ஏனைய ஆசியாவாசிகளும் அங்கு குடியேற முயன்றனர். அவுஸ்திரேலியர் ஆசியாவாசிகளை அங்கு குடியேறுவண்ணந் தடுத்ததுமன்றித் தங்கள் கரைகளையுங் காவல் புரிந்து நிற்க ஆரம்பித்தனர். இந்தக் காவற்றொழில் விஷயத்தில் அவுஸ்திரேலிய பல பிரிவுகளும் ஒருமனப்பட்டில. இப்படியிருக்கும் நாளில் அவுஸ்திரேலியாவுக்குக் கிழக்காகவும் வடக்காகவும் ஜேர்மனியரும் பிரான்சியருஞ் சிலதீவுகளைக் கண்டுபிடித்து அவற்றைத் தமதாளுகைக்குட்படுத்திக் கொண்டனர். அவர்கள் அத்தீவுகளிலிருந்துகொண்டும் அவுஸ்திரேலியாவை அபகரிக்கப்பார்ப்பரென்ற பயமும் அவுஸ்திரேலியருள் மிகுந்தது. ஆதலால் எல்லாப் பிரிவுகளுக்கும் ஓர் மத்திய அரசாங்கமிருப்பது நலமென்று சில அவுஸ்திரேலிய மேதாவிகள் உணர்ந்தனர். உணர்ந்து எல்லாப் பிரிவுகளிலிருந்துஞ் சில பிரதிநிதிகளைத் தெரிந்து ஓர் இணைப்புச் சட்டத்தை (Federal Constitution) வரைந்தனர். அந்த இணைப்புச் சட்டம் 1900ம் ஆண்டு ஆங்கிலேய பாராளு மன்றத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எனவே ஆங்கிலக்கொடியின்கீழ் அவுஸ்திரேலியா ஓர் ஐக்கிய பிரசாதிபத்திய நாடாயது. அவுஸ்திரேலியருங் கனடியரைப் போலத் தாய்நாட்டுக்கு வியாபார விஷயங்களில் தீர்வைவரிச் சிலாக்கியங்களைக் கொடுக்கவும், யுத்த விஷயங்களில் சேனை, போர்க்கப்பல் முதலியனவற்றை ஈந்து உதவிபுரியவுந் தொடங்கினர்.

## நியூ ஸீலன்டின் வரலாறு.

## (The Story of New Zealand.)

நியூஸீலன்டை டஸ்மன் (Tasman) என்பவர் 1642-ல் கண்டுபிடித்தார். அதன்பின்னர் ஏறக்குறைய நூறுவருடங் களுக்கு அங்கு ஒருவருஞ் சென்றிலர். 1769-ல் குக் கென்னும் மாலுமி மறுபடியும் அதைக் கண்டுபிடித்தார். அதன்

பின்னர் இடைக்கிடை கப்பல்கள் அங்குசெல்லவும் ஆங்கி லேய சனங்கள் குடியேறவுந் தொடங்கினர். 1830 வரை யும் அங்கு குடியேறியுள்ளோர் மிகச் சிலரே. ஆனல் 1830-ம் ஆண்டின்பின் உவேக்வீல்ட் முதலியோரின் பிர யத்தனங்களால் அநேக ஆங்கிலேயர் அங்குசென்று வட தீவிற் (The North Island) குடியேறினர். 1839-ல் பிரான் சியர் தென் தீவை (The South Island) ப் பிடிக்கச் சில சூழ்ச்சிகள் செய்தனர். ஆங்கிலேயரோ அதிலும் பிரான்சி யரை முந்திக்கொண்டனர். அப்பால் அடுத்த இருபது வரு டங்களாய் அநேக ஆங்கிலேயர் நியூ ஸீலன்டை யடைந்து குடியேறினர். குடியேறினோர் தொகை கூடக்கூட, பொறுப் பான சுய ஆட்சி விருப்பமு மதிகரித்து வந்தது. ஆதலால் 1853-ல் நியூ ஸீலன்டுக்குப் பொறுப்பாட்சி உதவப்பட்டது. இரண்டு வருடங்களின் பின் குடித்தெரிவுப் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் பாராளுமன்றமும் அங்கு தாபிக்கப்பட்டது.

இதுகாறும் சேர் ஜோர்ஜ் கிறே (Sir George Grey) என்பார் தேசாதிபதியா யிருந்து வடதீவில் வசித்த சுதேசிக ளான மாஓறி (Maoris) ச் சாதியாருக்கும் பிரீதியாய் இராச் சியத்தை நடாத்தி வந்தார். ஆனல் 1853-ல் அவர் ஆபிரிக் காவுக்குச் சென்றுவிட, ஆங்கிலேயர் மாஓறிச் சாதியாரின் ஆட்சிக்குள்ளான காடுகளிலும் பரவத் தொடங்கினர். அத னல் மாஓறியர் நியூஸீலன்ட் வாசிகளான ஆங்கிலேயர்மீது அதிக கோபங்கொண்டு யுத்தத்துக் காரம்பித்தனர். யுத்தம் பதினெரு ஆண்டுகளுக்கு நீடித்தது. மாஓறியர் சீர்திருத்த மில்லாத ஓர் சுதேச பூர்வீக சாதியாரேயாயினும் மிகுந்த தைரியமும் நுட்பபுத்தியு முடையராய் விளங்கினர். ஓர் இடத்தில் சில மாஓறியரும் அவர்கள் பெண்டீர் பிள்ளைக ளும் அஞ்சா நெஞ்சராய் 1300 ஆங்கிலேயரை எதிர்த்துப்

பொருதினர். ஆனல் ஈற்றில் மாஒறிச் சாதியார் ஆங்கிலேயருடன் ஓர் சமாதானஞ் செய்துகொண்டனர் (1870). அச்சமாதானத்தால் மாஒறியருக்குப் புறம்பான இடங் கொடுக்கப்பட்டு, ஆங்கிலேயர் அங்கு குடியேறப் படாதென்ற கட்டுப்பாடுங் கொண்டுவரப்பட்டது. மேலும் நியூஸீலன்ட் பாராளுமன்றத்துக்கு மாஒறியரும் ஆறு அங்கத்தவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புஞ் சிலாக்கியத்தையும் பெற்றனர். இந்தப் பூர்வீக சாதியாரும் அவுஸ்திரேலியாவிலுள்ள சுதேச சனங்களும் வரவர அருகி வருகின்றனர்.

1861-ல் நியூஸீலன்டிலும் பொன் விளைநிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனல் அங்கு குடியேற்றமதிகரித்து வந்தது. வியாபாரப் போக்குவரவும் விருத்தியடைந்தது. இந்த விதமாக நாடு நகரங்களுஞ் சனங்களுஞ் செழித்தோங்க, 1884-ல் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டுக் கப்பற் சேனையொன்றும் அங்கு தாபிக்கப்பட்டது. ஆங்கிலேய பேரரசாங்கத்தின் கீழுள்ள ஏனைய சுய ஆட்சிப் பிரசாதிபத்தியங்களைப்போல நியூஸீலன்டும் தாய்நாட்டுக்குக் காலத்துக்குக்காலம் போர்ச்சேவகத்தி னிமித்தம் வேண்டிய உதவிகள் செய்தது. 1899-ல் ஆரம்பித்த ஆபிரிக்க போவர் யுத்தத்திலும் கடந்த மகா ஐரோப்பிய யுத்தத்திலும் ஆங்கிலேய பேரசாங்கத்துக்கு நியூஸீலன்ட் வாசிகள் அரும் பெரும் உதவிகள் புரிந்தனர்.

## தேன் ஆபிரிக்காவும் ஐக்கிய இராச்சிய பிரசாதிபத்தியமும்.
## (South Africa and the Union Government.)

ஆபிரிக்காவில் முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இடம் நன்னம்பிக்கைமுனையே (The Cape of Good Hope). அது பாதலமியூ டையஸ் (Bartholomew Diaz)

என்பவனால் 1486-ல் கண்டுபிடிக்கப்பட்டது. டிறேக் என்பவனும் உலகத்தைச் சுற்றிக் கடல்மார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்தபோது அந்த முனையைத் தரிசித்துச் சென்றான். பின்பு 1620-ல் சில ஆங்கிலேய மாலுமிகள் தென்ஆபிரிக்காவிற் சில இடங்களைக் கண்டுபிடித்தனர்; ஆனால் அவர்கள் அப்போ அங்கு குடியேறநினைக்கவில்லை. 1650ம் ஆண்டளவில் ஒல்லாந்தர் தங்கள் கீழைத்தேச வியாபாரக் கப்பல்கள் தென்னாபிரிக்காவில் தங்கித் தரித்தும், காய் கறி முதலிய உணவுப் பதார்த்தங்களைப் புதிதாய்ச் சேகரித்துக்கொண்டும் போக்குவரவு செய்வது நலமென்று கண்டு அங்கு குடியேறினர். எனவே கேப் ரவுன் (Cape Town) என்ற பட்டினமும் அதையடுத்த கிராமங்களும் ஒல்லாந்த கமக்காரராற் குடியேறப் பெற்றன. காலகதியில் இக்கமக்காரர் போவர் (Boers) என்றழைக்கப்படலாயினர். அவ்விதம் ஒல்லாந்தர் கேப்ரவுனை யடைந்து செழிப்பான நாடுகளிற் பரவ, அங்கு வசித்த ஹொற்றென்ரெற்ஸ் (Hottentots) என்னுங்கரிய ஆபிரிக்க சாதியார் அவ்விடங்களை விட்டகன்று மலைப்பாகங்களை யடைந்து மறைந்து ஒதுக்கிடந்தேடுவாராயினர். ஒல்லாந்த கமக்காரர் கேப் பட்டினத்திலிருந்தும் வடதிசையை நோக்கிக் குடியேறிச்செல்ல, மத்திய ஆபிரிக்காவிலிருந்தும் கவீர் (Kaffirs) என்னும் இன்னோர் கரிய ஆபிரிக்க வம்சத்தார் தென்திசையை நோக்கி விஜயஞ் செய்தனர். ஆகவே யுத்தப்பிரியரான கவீர் சாதியாரும் ஒல்லாந்தரும் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பொருதினர் (1779). கவீர் சாதியாருக்கும் ஒல்லாந்தர் முதலிய ஏனைய வெள்ளையருக்கு (White-men) மிடையில் 1779 தொடங்கி ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு யுத்தம் நடந்தது. கடைசியாக 1878ல் நடந்தயுத்தத்தில் வெள்ளையர் வெற்றியடைந்து கவீர் சாதியாரைத் தம்கீழ்ப் பிரசைகளாக்கினர்.

மேலே சொல்லப்பட்ட கேப் பட்டினம் பிரான்சிய தேச கலகசம்பந்தமாக நடந்தயுத்தங்களில் ஒல்லாந்தரிலிருந்தும் ஆங்கிலேயரால் 1805ல் பிடிக்கப்பட்டது. அக்காலந் தொட்டு அது பிரித்தானிய சக்ராதிபத்தியத்தின் ஓர் அம்ஸமாய் விளங்கிவருகிறது. அங்கு வசித்துவந்த ஒல்லாந்தகமக்காரரான போவர் 1836 வரையும் ஆங்கிலேய அரசாங்கத்தாரோடு சமாதானமாய் வாழ்ந்து வந்தனர். ஆனல் ஆங்கில அரசாங்கத்தின்கீழ் அடிமை வியாபாரமும் அடிமைத் தொழிலும் அறவே நீக்கப்பட, மேற்படி கமக்காரரான போவர் அநேக கஷ்டநஷ்டங்களே யடைந்தும், ஆங்கில அரசாங்கத்தார்மீது கோபங்கொண்டும் செல்லாவிடத்துச் சினமென்ருற் போலத் தங்கோபத்தை அவர்மீது செலுத்த வழியின்றியும், தாங் குடியிருந்த இடங்களேயுங் கமங்களேயும் விட்டு, ஆடு மாடுகளுடனும் மனைவி மக்களுடனும் ஆங்கிலேயர் ஆஞ்ஞைக் கப்பாலுள்ள பிறநாடுகளிற் சென்று குடியேறினர். அடிமைகளே வைத்திருக்கும் புராதன வழக்கத்தைத் தடுத்தது மாத்திரமல்ல, போவர் குடியேறிய நாடுகளிற் சில பாகங்களேக் கவிர்சாதியாருக்குக் கொடுக்கும்படி ஆங்கில அரசாங்கத்தார் அவர்களுக்குக் கட்டளேயிட்டதும் அவர்களின் பரதேசப் பிரவேசத்துக்கு (The Great Trek) க்காரணமாகும். அவ்விதம் வடதிசையை நோக்கிப் புதுநாடுகளேத் தேடிச்சென்ற போவர் நற்ருல் (Natal), ஒறேஞ் விறீஸ்ரேற் (Orange Free State), திருன்ஸ்வால் (Transvaal) என்ற நாடுகளேயடைந்து குடியேறி அவ்விடங்களில் தங்கள் பிரசாதிபத்திய இராச்சிய முறைகளே நாட்டினர். நற்ருல் நாட்டை யடைந்ததும் அங்கு வசித்த ஸூலு (Zulus) என்னும் ஆபிரிக்க சாதியாருடன் கைகலந்து போர்புரிந்து அநேக கஷ்ட நஷ்டங்களுக் காளாஞர் (1838). சிலவருடங் கழிந்தபின் டேர்பன் (Durban) என்ற இடத்தில் வசித்த

ஆங்கிலேய வியாபாரிகளுக்கும் போவருக்குமிடையிற் சச்சரவுகளும் கலகங்களும் உண்டாக, ஆங்கிலேயர் படிப்படியாக நற்றாலைப் பிடித்து, 1844-ல் அது முழுவதையும் பிரித்தானிய இராச்சியங்களுடன் சேர்த்துக் கொண்டனர். நற்றாலையிழந்த போவரும் ஒறேஞ் நாட்டையும் திருன்ஸ்வாலையுமடைந்து குடியேறினர்.

1836-ல் நடந்த போவரின் பரதேசப் பிரவேசத்தின் பின்னர் ஆங்கிலேயரும் போவரும் சிறிதேனும் ஐக்கியமின்றி ஒருவர்மீதொருவர் அழுக்காறடைந்து தீராப் பெரும் பகைவரானர். அதனால் நற்றாலைவிட, ஒறேஞ் நாட்டையும் ஆங்கிலேயர் 1858-ல் கைப்பற்றினர். 1859-ல் சேர் ஜோர்ஜ் கிறேயும், 1875-ல் காணுவன்பிரபு (Lord Carnavon) வும் சகலதென் ஆபிரிக்க குடியேற்ற நாடுகளையும் ஒருங்குசேர்க்க ஓர் இணைப்புச்சட்டத்தை ஏற்படுத்தப் பலவாறு முயன்றுஞ் சித்தியடைந்திலர். 1877-ல் திருன்ஸ்வாலும் ஆங்கிலேயராற் பிடிக்கப்பட்டது. இந்தத் திருன்ஸ்வால் நாட்டை ஆங்கிலேயர் பிடித்தபோது பிரஜைகளான போவருக்குப் பொறுப்பாட்சி கொடுப்பதாக வாக்களித்தனர். அந்த வாக்கை நிறைவேற்றாததினல் போவர் கோபங்கொண்டு போருக்கெழுந்து, ஆங்கிலேயரைச் ஜெயித்து, திருன்ஸ்வாலைச் சுயாதீன நாடாக்கினர் (The First Boer War, 1881). அந்தக் காலந் தொட்டு ஆங்கிலேயருக்கும் போவருக்குமிடையில் வரவரப் பகை மிகுந்து முற்றியது. அதற்கிடையில் திருன்ஸ்வாவில் பொன்னுங் கண்டுபிடிக்கப்பட்டது. உலகத்தின் நாலு பகுதிகளிலிருந்தும் அங்கு பலருங் குடியேறத் தொடங்கினர். புதுக்கக் குடியேறினோரிற் பெரும்பாலார் ஆங்கிலேயராவார். ஆதலால் ஆங்கிலேயர் திருன்ஸ்வால் அரசாங்க ஒழுங்குகளிற் பங்குபற்ற வெண்ணினர். போவர் ஆளுகை

யை முற்றுயத் தங்காத்திற் பிடித்தனர். எவ்விதமுஞ் சமாதானம் வாய்க்கவில்லை. ஆகவே 1899 தொடங்கி 1902 வரையும் யுத்தம் நிகழ்ந்தது (The Second Boer War). ஈற்றில் போவர் தம்மை ஆங்கிலேயருக்கு ஒப்புக்கொடுத்தனர். ஏழு வருடங்களின் பின்னர் ஆங்கிலேயரும் போவரும் ஓர் மகா சபைகூடி, தாம் குடியேறிய நாடுகளை ஒருங்குசேர்க்க வழி தேடினர். சேனுபதி போதா (General Botha) என்பவரின் நற்போதனையால் ஆங்கிலேயரும் போவருந் தாம்தாம் குடியேறிய நாடுகளின் எல்லைகளை நீக்கி 1910-ல் ஓர் ஐக்கிய இராச்சியத்தை ஏற்படுத்தினர். இதற்குமுன் 1906-ல் போவருக்கும் ஆங்கிலேயருக்கும் வேறுவேறுன பூரண சுயராச்சியங் கொடுக்கப்பட்டது.

மேற்கூறிய ஐக்கிய இராசாங்கநாடுகளைத் தவிர, தென்னுபிரிக்காவில் இன்னுஞ்சில பிரித்தானிய நாடுகளும் ஏனைய இராச்சிய நாடுகளுமுள. ஆங்கிலேயரும் போவருஞ் சண்டையிட்டுக்கொண்டு நிற்க, 1884-ல் ஜேர்மனியர் தென்மேற்காபிரிக்காவை யடைந்து சிலபகுதிகளைக் கைப்பற்றினர். அதையறிந்த ஸேஸில் றேட்ஸ் (Cecil Rhodes) என்னும் ஆங்கிலேய மேதாவி திரான்ஸ்வாலுக்கு வடபாகமாயுள்ள நாடுகளைச் சேர்த்துப் பிரித்தானிய இராச்சிய மாகாணங்களாக்கினர். அந்நாடுகள் றேடேசியா மாகாணங்களென அவர்நாமத்தால் வழங்கப்பட்டுவருகின்றன. கடந்த ஐரோப்பிய மகாயுத்தத்தில் (1914—1919) ஆபிரிக்காவிலுள்ள ஜேர்மனியரின் நாடுகள் பிடிக்கப்பட்டு, சமாதானத்தின் பின்னர் ஆங்கிலேய பேரரசாங்கத்தின் மேற்பார்வையில் விடப்பட்டன.

## பத்தோன்பதாம் இருபதாம் நூற்றுண்டுகளில் இந்தியாவின் நிலைபரம்.

## (India in the 19th and 20th Centuries.)

இந்தியாவின் தேசாதிபதிகள் தலைவராய் (Covernor-General) விளங்கிய மார்க்குவிஸ் ஒவ் உவெல்ஸ்லி (Marquis of Wellesey, 1798—1805), மார்க்குவிஸ் ஒவ் ஹேஸ்டிங்ஸ்(Marquis of Hastings, 1813—1823)என்பவர்கள் இந்தியாவைக் காவல்புரிந்தகாலங்களில், இந்திய சுதேச மன்னரிற் சிலரைத் தங்கீழ்த் திறையரசராக்கியும், வேறுசிலரைத் தம் உதவியை எக்காலத்தும் வேண்டிநிற்கும் ஓர் கீழ்தரச்சமாதான சம்பந்திகளாக்கியும் (Subordinate and Pe.aceful allies), இன்னுஞ்சிலரை இராச்சியமற்றவர்களாக்கியும், ஆங்கில அரசை இந்தியா முழுவதற்கும் ஒப்புயர்வற்ற மகத்துவம் பொருந்திய தனியரசாக்கினர். ஆனல் வடக்கே நேர்பாள (Nepal) வாசிகளான கூர்க்காஸ்(Gurkhas) சாதியாரும் கிழக்கே பிரமதேசவாசிகளும், மேற்கே சிலமராட்டிய மன்னரும், வடமேற்கே ஆபுகானிஸ்தரும், பின்னர் பாஞ்சால நாட்டதிபரான ஸிக் (Sikhs) கியரும் தங்கள் தங்கள் இராச்சியங்களைப் பெலப்படுத்தி அவற்றை ஆங்கிலேயர் அபகரியாவண்ணந்தங்கீழுள்ள பிரசைகள் பலவகுப்பினரையும் ஒற்றுமைப்படுத்திச் செங்கோல் புரிந்து வந்தனர். வருங்காலத்தில், ஆங்கிலேயர் தங்கள் சுயநல முன்னேற்ற நோக்கத்தால்(Forward Policy) மேற்படி சுதேச இராச்சியங்களைச் சருவவும், அவற்றுடன் சமர்புரியவு மேவப்பட்டனர்.

முதலாவதாக நேர்பாள வாசிகளான கூர்க்காஸ் சாதியாரின் சரித்திரத்தையும் அவர்கள் பரம்பரையையுஞ் சற்று ஆராய்வாம். நேர்பாளத்தில் வசித்த ஆதிவம்சத்தார் சீனரைச்

சேர்ந்த தீபேத்து வாசிகளாவர். பதினாலாஞ் சதாப்த மத்திய காலத்தில் க்ஷத்திரிய வம்சத்தவரான இராச புத்திர பிரதானிகளிற் சிலர் (Some Rajput Chiefs) அங்கு குடியேறி, அநேக குறுநில இராச்சியங்களைத் தாபித்து அரசாண்டு வந்தனர். 1767ம் ஆண்டளவில் அக்குறுநில அரசுகளெல்லாம் ஒருங்கு திரண்டு மூன்று சிறு இராச்சியங்களாயின. அம்மூன்றனுள் கூர்க்காஸ் இராச்சியம் பிருதுவி நாராயணன் என்னுஞ் சேனாபதியின் தலைமையில் மிகவும் வலிமையடைந்து ஏனைய இரு இராச்சியங்களையும் அடக்கித் தன்கீழ்ப்படுத்தி முதன்மை பெற்றது. மேலும் கூர்க்காஸ் சாதியார் தங்கள் நாடுகளிலுஞ் செழிப்பான அயல் நாடுகளைக் கைப்பற்றவெண்ணி, வடக்கே தீபேத்தினுள்ளும் மேற்கே பாஞ்சாலநாடு வரையும் விஜயஞ் செய்தனர். ஆனால் தீபேத்துக் கதிபரான சீனரும் பாஞ்சாலத்துக் கதிபனான இரஞ்சித சிங் (Ranjit Singh) கும் கூர்க்காஸ் சாதியாரை எதிர்த்து அவர்கள் திக்குவிஜயத்தைத் தடுத்தனர். எனவே அவர்கள் தெற்கே ஓர் வழிபார்த்தனர். ஈற்றில் தென்புறத்தில் அரசுபுரிந்துவந்த சில குறுநிலமன்னரை வென்றும் அயோத்தியா மாகாணத்தை (Oudh) ச்சேர்ந்த கோரக்பூரை யடைந்துஞ் சில இடங்களைப் பிடித்தனர். கோரக்பூரோ அயோத்தியாபுரி நவாப்பால் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்ட இடங்களிலொன்று. ஆதலால் ஆங்கிலேயர் கூர்க்காஸ் சாதியாரை அவ்விடத்தை விட்டகலும்படி கட்டளை செய்தனர். கூர்க்காஸ் சாதியார் கோரக்பூரில் தாம் தோற்கடித்த குறுநிலமன்னரின் பொறுப்பிலிருந்த இடங்களையே கைப்பற்றினராதலால் ஆங்கிலேயர் கட்டளைக்கிசைந்திலர். ஆனதால் யுத்தம் ஆரம்பமாயது. யுத்தத்தில் ஆங்கிலேயர் ஜெயமடைந்து, நேர்பாள அரசனின் இராச்சியத்தின் சிலபாகங்களைத் தாம் பெற்றும், வேறுசில பாகங்களைத் தமக்குதவிபுரிந்த அயலூரதிபருக்குக் கொடுத்தும், ஈற்றில் தங்கள் இராச்சியத்தின்

வடக்கெல்லையைக் காட்டுவதற்குக் கற்றூண்கள் நாட்டியும், நேர்பாள அரசனிடமிருந்தும் வருடந்தோறும் ஓர்தொகைப் பணம் பெறக்கூடியதாகவும் உடன்பாடு செய்தனர் (1817). நேர்பாளம் இன்றுமோர் தன்னிஷ்ட சுதேச இராச்சியமாக விளங்குகிறது. கூர்க்காஸ் சாதியாரும் இந்தியாவிலுள்ள இராசபுத்தர், ஸீக்கியர் முதலிய க்ஷத்திரியரைப் போன்ற தைரியசாலிகளான போர்வீரர்.

இரண்டாவதாக, உவெல்ஸ்லியின் காலத்தில் தோற்கடிக்கப்படாத சில மராட்டிய மன்னரும், அவர்கள் பாதுகாப்பில் வசித்துத் தேசமெங்குஞ் சென்று கொள்ளையடித்துத் திரிந்த பிந்தாரிச் சாதியாரும் (The Pindharees) பட்டாணியரும் (The Pathans) ஆங்கிலேயரால் அடக்கி ஆளப்பட்டனர். பிந்தாரிகளையும் பட்டாணியரையும் அடக்கி ஆளும்பொருட்டு, மார்க்குவிஸ் ஒவ் ஹேஸ்டிங்ஸ், இராசபுத்தரையும் ஏனையோரையும் ஆங்கிலேயருடன் ஒற்றுமைப்படுத்தி, அவர்களை ஆங்கிலேயரின் பாதுகாப்பில் தங்கியிருக்குங் குறுநில மன்னராக்கினன். அவ்வித சமாதானத்துக் குடன்படாத மராட்டிய மன்னரான ஷிந்தீயா, பேஷ்வா. கேய்க்உவார் ஆதியோரை எதிர்த்துப் போர்புரிந்து தோற்கடித்து குறுநில மன்னராகவுந் திறையரசராகவுஞ் செய்தனன். ஆகவே இந்திய சுதேச மன்னரனைவரும் ஆங்கிலேயர் ஆதரவில் ஆளுகை செய்யுஞ் சிற்றரசரானூர்.

மூன்றாவதாக, பிரமதேசத்தில் அரசாண்டுவந்த பல பிரதானிகளுள் அலோம்பரு (Alomra) என்பான் முதன்மையடைந்து அநேக நாடுகளையும் பிடித்து ஆங்கிலேயருக் கணித்தாய் அசாம் (Assam) நாட்டையும் செட்டிகாமத்தையுஞ் (Chittagong) சமீபித்தனன். எனவே ஆங்கிலேயருக்கும் அலோம்பருவுக்கு மிடையில் யுத்தம் ஆரம்பித்தது

(1824). ஈற்றில் ஆங்கிலேயர்வெற்றியடைந்து, 1826-ல் ஏற்பட்ட சமாதானத்தால் அரக்கன், அசாம், தெனுசெறிம் மாகாணங்களைப் பிரமதேச வாசிகளிடமிருந்தும் பெற்றனர்.

நாலாவதாக, இந்தியாவின் வடமேற்குப் பாகங்களிலுள்ள மலைக்கணவாய்கட்கூடாக அநேகர் காலத்துக்குக் காலம் இந்தியாவுக்குவந்து கொள்ளையடித்தும், தேசத்தை யழித்துச் சனங்களுக்கு நிர்ப்பந்தத்தைவிளைத்துஞ் செல்வாராயினர். இத்தருணத்தில் பிரான்சியரும், ரூஷியரும், பார்சிய, ஆபுகானிஸ்த அரசரின் உதவியைக்கொண்டு இந்தியாவுக்குச் சிலவேளை படையெடுத்து வரக்கூடுமென்ற பயமும் ஆங்கிலேயருள்ளத்திற் குடிகொண்டது. எனவே ஆங்கிலேயர் இந்தியாவின் வடமேற்கெல்லையை அரண்செய்து பெலப்படுத்தவும் அயல்நாட்டதிபருடன் 'உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவும் அவசரப்பட்டனர். ரூஷியர் மத்திய ஆசியாவில் தங்கள் இராச்சியங்களை வலியுறுத்தி, பார்சியாவிலும் ஆபுகானிஸ்தனிலுங் கண்ணுயிருந்தனர். பார்சியரும் ஆபுகானிஸ்தரும் ரூஷியருக்கஞ்சிப்போலும் அவர்களுடன் சில இரகசிய உடன்பாடுகளையுஞ் செய்துகொண்டனராம். ஆபுகானிஸ்த அரசன் அமீரையும் பார்சிய அரசன் ஷாவையும் ஆங்கிலேயர் சமாதானத்துக் குடன்படும்படி பலமுறை வேண்டியும் அவர்கள் மறுத்தனர். ஆதலால் பாஞ்சாலநாட்டதிபன் ஸீக்கிய அரசனுன இரஞ்சித சிங்கை ஆங்கிலேயர் தமக்கு நண்பனுகக்கொண்டனர். 1835-ம் ஆண்டில் ஆபுகானிஸ்தரும் ரூஷியரும் இந்தியாவுக்குப் படையெடுத்துவர எத்தனங்கள் செய்கிறுர்களென ஓர் வதந்திபிறக்க, ஆங்கிலேயரும் இரஞ்சிதசிங்கும் அப்போ ஆபுகானிஸ்த அரசனுகவிருந்த டோஸ்த்மகமதுவைச் சிங்காசனத்தினின்று மிறக்கி, தங்கள் நண்பனுன அவன் தம்பி ஷாஷுஜாவைச் சிம்மாசனத்திலேற்றப் பெரிதும் பிரயத்

தனப்பட்டனர். அதற்காகக் கபூல் நகரத்தில் தங்கள் சைநியங்களை இரண்டுவருடகாலம் வைத்திருந்தனர். ஈற்றில் ஆபுகானிஸ்தசாதியாரிற் சிலர் ஆங்கிலேயரின் அக்கிரமங்களைச் சகிக்கமுடியாதவராய் ஆவேசங்கொண்டு திரண்டு ஆங்கிலேயரைத்துரத்திப் பின்வாங்கச் செய்தனர். ஆங்கிலேயர் பின்வாங்கி இந்தியாவுக்கு வரும்வழியில் ஆபுகானிஸ்தர் பின்னரும் அவர்களை ஓர் கணவாயில் தாக்க, பதினறுயிரவரைக்கொண்ட ஆங்கில சைநியத்தில் ஒருவன் தவிர ஏனையோர் மாண்டனர் (1842). இந்த வெட்கத்தையுந் துக்கத்தையுஞ் சகிக்கமாட்டாத ஆங்கிலேயர் மறுபடியும் ஆபுகானிஸ்தனுக்குச் சென்று, சில தீங்குகளையும் அக்கிரமங்களையும் விளைத்து, ஆபுகானிஸ்தர் ருஷியருக்குச் சார்பல்லவென்றறிந்தளவில் இந்தியாவுக்குத்திரும்பினர்(1843). ஆனல் மகமதிய சிற்றரசரின் ஆளுகையிலிருந்த சிந்து மாகாணத்தை ஆங்கிலேயர் தமதாணைக்குள்ளாக்கினர் (1844). சிந்திய அரசர் ஆங்கிலேயருக்கு அன்பாயும் விசுவாசநேசமாயு மொழுகினர். எனினும், சிந்துதேசம் ஓர் செழிப்பானநாடாதலாலும், வியாபாரத் துறைமுகமுடையதாதலாலும், யுத்தவிவகாரங்களைத் தடுப்பதற்கு ஆங்கிலேயருக்கு அத்தியாவசியஞ்சேரவேண்டி யிருந்தமையாலும், ஆங்கிலேயர் அதைக்கவர்ந்தனர். கவர்ந்து சிந்தரசர்மீது சில குற்றங்களை வேணுமென்று சுமத்தினர். அக்குற்றங்களை விசாரணை செய்யும்பொருட்டு நியமிக்கப்பட்ட நேப்பியரே (Napier) பின்வருமாறு கூறினர். "அமீர் அரசரைத் தண்டிக்க எமக்கு ஓர் போக்குச்சாட்டுமாத்திரந் தேவை. கூடிய வலிமைபொருந்திய ஓர் இராச்சியம் வலிமையற்ற இராச்சியத்தைச் சடுதியில்விழுங்கிவிடும். சிந்தைப் பிடிக்க எமக்குரித்தில்லையெனினும் அதைப்பிடிப்போம். அச்செய்கை ஓர் லாபமான, பிரயோசனமுள்ள மனுஷீக

குறும்புத்தனமாயிருக்கும்." ("We only want a pretext to scourge the Amirs; the more powerful Government will at no distant period swallow up the weaker. We have no right to seize Sindh, yet shall do so, and a very advantageous, useful and human piece of rascality it will be.") மேற்போந்த அபிப்பிராயங்களையுடைய நேப்பியர் சிந்தமர் மீது குற்றங்கண்டு, அவர்களை ஒருவரோடொருவர் பொருதச்செய்து, ஈற்றில் ஆங்கிலேயருடனும் பொருதச் செய்து, நாட்டை ஆங்கிலேயருக்காக்கினர். இப்பாவச் செயலை உணர்ந்துபோலும் நேப்பியர் தனது சகோதரர் ஒருவருக்கெழுதிய கடிதத்தில், "நான் பாவஞ்செய்துபோட்டேன்" என ஓர் லத்தீன் மொழியால் (Peccavi–I have sinned or Sindh) தனது மனச்சாட்சியிற் பட்ட இடியை இருகருத்துப்படச் சிலேடையாய்த் தெரிவித்தார். சிந்து தேசம் பின்னர்ப் பம்பாய் மாகாண இராச்சியத்தின் ஓர் பாகமாக்கப்பட்டது.

ஐந்தாவதாக, ஸீக் (Sikhs) சாதியாரின் முன்னேற்றத்தையும், ஆங்கிலேயர் அவர்களை வெற்றிகொண்டும், பாஞ்சாலத்தைப் பிடித்தும், ருஷியர் முதலியோர் தம்மைப் பயமுறுத்தாவண்ணம் ஒருவாறு ஆபுகானிஸ்தானைத் தம் வசப்படுத்தியும், வடமேற்கெல்லையை அரண்செய்து இராச்சியத்தைப் பெலப்படுத்தின வரலாற்றையுஞ் சற்றே ஆராய்வாம். ஸீக்கியர் பதினைரும் நூற்ருண்டில் அவதரித்த குரு நானக் (Kuru Nanak) கென்னுமோர் நவீன சமயகுரவரின் கொள்கைகளையுங் கிரந்தங்களையும் பின்பற்றி ஒழுகும் ஓர் போர்ப்பிரியரான சாதியார். ஆதியில் அவர்கள் சாதுசங்கங்களையடைந்து மிகச்சாந்தமுடையராயுஞ் சமய பக்தியுடையராயும் ஒழுகிவந்தனர். பின்னர் மகமதியர் இந்தியாவை வெற்றிகொண்டு அநேக இம்சைகளையும் அக்

கிரமங்களையும் விளைத்தகாலத்து, தங்கள் சமயத்தையும் நாகரீகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு, வீரக்கழல்தாங்கிய வெற்றிவீரராய் விளங்கினர். அக்காலந்தொட்டு இன்றுவரையும் போர்த்தொழிலையே தமது சாதித் தொழிலாகக்கொண்டு சீவனம்பண்ணிவருகின்றனர். அவ்வித யுத்தப்பிரியரான ஸீக்கியர் சமயாபிமானத்தாலுந் தேசாபிமானத்தாலும் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு, தங்கள் பிரதானிகளையெல்லாம் ஒருங்குதிரட்டிப் பாஞ்சாலத்திலப்போதிருந்த பல சிற்றரசுகளையெல்லாம் கால்ஸா (Khalsa) இராச்சியமெனப் பொதுநாமம் புனைந்து ஓர் பேரரசாங்கமாக்கினர். அந்தப் பேரரசாங்கத்தைத் தாபித்துக் கீர்த்தியெய்தியவன்தான் இரஞ்சிதசிங். அவன் பாஞ்சாலத்தைவிட, காஷ்மீரத்தையும், மூல்தானையும், ஆபுகானிஸ்தரின் கீழிருந்த பெஷ்வார் ஹஸாரு என்ற நாடுகளையுந் தன்கீழ்ப் படுத்தியாண்ட ஓர் வெற்றிமன்னன். அன்னவனின் திறலையும் ஸீக்கியரின் போர்வீரத்தையுமறிந்த ஆங்கிலேயர் அவர்களோடு 1809-ல் ஓர் உடன்படிக்கைசெய்து, முப்பதுவருடகாலம் இருசாதியாரும் பெருநண்பராயொழுகினர். 1839-ல் இரஞ்சிதசிங் இறக்க, பாஞ்சாலத்தில் ஒற்றுமையீனமும், கலகமும், இராச்சியக்குழப்பமு முண்டாயின. யுத்த ஸைநியங்களெல்லாம் ஆவேசங்கொண்டெழுந்தன. ஈற்றில் போர்வீரரின் ஆட்சியே தலைப்பட்டது. அவர்களின் ஆவேசத்தையும் யுத்தச் செருக்கையுந் தடுப்பதற்குப் போர்புரியத்தக்க ஓர்வழி காட்டுவது அவசியமாயிருந்தது. அந்த அவசரத்தில் ஆங்கிலேயரும் ஸீக்கியரின் கலகங்களையுங் குழப்பங்களையுங் கண்டுங் கேட்டும் இந்தியாவின் வடமேற்குப்பாகங்களைக் கைப்பற்றி அரண்செய்வதற்கு இதுதான் நற்சமயமென்று கண்டனர். அதையறிந்த ஸீக்கியபிரதானிகள் தங்கள் அடக்கமில்லாதஇராணு

வத்தையடக்கி யுத்தச்செருக்கைத் தணிக்கக்கூடியவர் ஆங்கிலேயரேயென்றெண்ணி, தங்கள்சேனையை ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்புரியும்படி விடுத்தனர் (The First Sikh War, 1845—1846). எல்லைகடந்தும் ஆங்கிலேயர் நாட்டினுட் பிரவேசித்தும் போர்புரியச்சென்ற ஸீக்கியர் ஆரம்பத்தில் சிறுக வெற்றியடைந்தாரெனினும் ஈற்றில்துரத்தப்பட்டும் ஆங்கிலேயராற் பின்தொடரப்பட்டும், தமது நாட்டையிழக்கலானர். அப்பால் ஸீக்கியர் காஷ்மீரத்தை ஜம்மூ தேசராசனுக்குக் கொடுக்கவும், ஆங்கிலேயரின் யுத்தச் செலவைப் பொறுக்கவும், தம்நாட்டில் கலகத்தையடக்கிக் காவல்புரிந்துநிற்க ஆங்கில ஸைநியங்களை ஏற்கவுஞ் சம்மதிக்க, மேற்படியுத்தம் நிறுத்தப்பட்டது. ஆனால் சுயமரியாதையையும் அந்நியர் தம்நாட்டைக் கைப்பற்ற வந்தமையையுமெண்ணிப்போலும் ஸீக்கியர் மென்மேலுங் கலகங்களை விளைத்தனர்; ஆங்கிலேயரை எதிர்க்கும்பொருட்டு ஆபுகானிஸ்தரின் உதவியையும் வேண்டினர். எனவே மறுபடியும் ஆங்கிலேயருக்குஞ் ஸீக்கியருக்குமிடையில் யுத்தம் ஆரம்பமாயது (The Second Sikh War, 1848—1849). யுத்தத்தில் ஆபுகானிஸ்தரும் ஸீக்கியரும் அபஜெயமடைய, பாஞ்சாலம் ஆங்கிலேயர் நாடாயது. பின்பு ஸீக்கியர் நிராயுதராக்கப்பட, சிறகு ஒடிக்கப்பெற்ற பட்சிகளையும் வேட்டைப்பற்கள் கழற்றப்பெற்ற வேட்டைமிருகங்களையுமொத்தனர். எனினும் 1857-ல் நிகழ்ந்த இந்தியதேச கலகத்திலுந் தலைகாட்டினர். அதன்பின்னர் ஆங்கிலேய இராசநேசமுள்ள பிரசைகளாய்நடந்து, ஆங்கிலேய இராணுவத்தைச்சேர்ந்து போர்த்தொழிலில் இன்றுங்குன்றாப் புகழெய்தி வாழ்கின்றனர். பாஞ்சாலம் பிடிபடவே ஆங்கிலேயரை எதிர்க்கக்கூடிய சாதியார் இந்தியாவில் ஒருவருமில்லாதொழிந்தனர். ஆகவே ஆங்கிலேயர் இந்தியாவில் பூரண சுதந்திரத்தைப் பெற்றனர். ஆபு

கானிஸ்தரும் ஆங்கிலேயருடன் ஓர் உடன்படிக்கைசெய்து கொண்டனர். ஆனால் ஆங்கிலேயருக்கும் ஆபுகானிஸ்தருக்குமிடையில் இடைக்கிடை சச்சரவுகளுண்டாகி 1879-ம், 1880-ம் ஆண்டுகளிற் பின்னுமோர் யுத்தம் நிகழ்ந்தது (The Second Afghan War). அதன் பின்னர் ஆபுகானிஸ்தரும் ஆங்கிலேயரும் ஐக்கியப்பட்டுப் பெரும் நண்பராயினர். மேற்படி ஐக்கியத்தால் 1901-ல் இந்தியாவில் வடமேற்கெல்லை மாகாணமென (N. W. Frontier Province) ஓர் புதிய பிரிவுண்டாக்கப்பட்டு, அப்பயங்கரமான பகுதிகள் ஆங்கிலேயரால் நன்கு அரண்செய்யப்பட்டன. இந்தியாவில் ஆங்கிலேயரின் செல்வாக்கை ருஷியரும் 1907-ம் ஆண்டளவில் நன்குணர்ந்து, ஆபுகானிஸ்தரும் ஆங்கிலேயதத்துவத்துக் குட்பட்டோரென வறிந்தனர்.

## இந்தியதேச கலகம், 1857.
## (The India Mutiny.)

1848-ம் ஆண்டு தொடங்கி 1856-ம் ஆண்டுவரையும் இந்தியாவில் ஆங்கில இராச்சியத்தை அனைவரும் மெச்சும்படி மிக ஆதிக்கமாய் நடாத்திவந்த காவலர் டல்ஹவுசிப்பிரபு (Lord Dalhousie) ஆவார். அவர், ஆங்கில ஆஞ்ஞையில் தங்கியிருந்த பாஞ்சாலம், ஸீக்கிம், கீழ்ப்பிரமதேசம் ஆகிய நாடுகளைவெற்றிகொண்டு அவற்றை முற்றாய் ஆங்கிலேய ஆளுகைக்குள்ளாக்கியும் ஆங்கிலேய இராசாங்கத்தின் கீழ்த் திறையரசுகளாயிருந்த பூர்வ பரம்பரையில்லாத சில குறுநில மன்னரின் நாடுகளை அவர்களிடமிருந்தபகரித்துத் தம் இந்திய பேரரசாங்கத்துடன் சேர்த்தும், இந்தியாவில் புகைரதப்பாதை, கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகம், கல்வி, ஆறுகளிற் கப்பற்போக்குவரவு, தந்தி தபால் ஸ்தானங்கள் ஆகிய இவற்றை மலிந்து

பொலிந்து விளங்கச்செய்தும், தமதாளுகையைச் சிறப்பித்தனர். எனினும், ஆங்கிலேய அரசாங்கத்தின் முதன்மையையும் முன்னீட்டையும் இந்தியாவில் எங்கும் நாட்டி வைக்கவேண்டுமென்ற பேரவாவால் "திறை அரசுகள் நழுவிப் பேரரசுகளுடன் சேரும் விதி" (The Doctrine of Lapse) என்ற பழைய பிரமாணத்தைத் தான் நினைத்தபிரகாரம் முறைகேடாய்க் கண்டபடி பிரயோகித்து அநேக சிற்றரசரையெல்லாஞ் சாதாரண பிரசைகள் போலுமாக்கினர். இதுவே 1857-ல் எழுந்த இந்தியசிப்பாசிமார் கலகத்தை வட இந்தியா வெங்கணும் பெரிதும் பரவச்செய்ததென்பர் சிலர். உண்மையளவில் அக்கலகத்துக்கு அநேக காரணங்களிருந்தன. காவலர் டல்ஹவுசி ஆங்கில இராச்சியத்தையும் ஆங்கில நாகரீகத்தையும் முன்னேற்றத்துக்குக் கொண்டு வரவெண்ணிச் செய்த சில கிருத்தியங்கள் நாடெங்கும் அதி திருப்தியீனத்தைப் பரவச்செய்துவிட்டன. தவிர, சிற்சில இடங்களில் அவ்விடங்களைப் பாதித்த குறைகளுமிருந்தன. எப்படியெனில் திறை அரசுகள் நீக்கப்பட்டவிடங்களிற் போர்ச்சேவகராயிருந்தோர் தற்போது தொழிலின்றிச் சீவனத்துக்குத்தானும் வழியில்லாதவரானார். அரசையிழந்து ஆங்கிலேயரிடம் உபகாரச் சம்பளம் (Pension) பெற்றசிலர் அதையுமிழக்கலானார். இவற்றைவிட, ருஷியர் இந்தியாவுக்குப் படையெடுத்துவருகிறாரென்றும், அவர்களின் உதவியைக்கொண்டு இந்தியாவில் மறுபடியும் மோகலிய இராச்சியம் நிறுவப்பெறுமென்றும் ஓர் பெரும் வதந்தியும் பிறந்தது. மேலும் 1757-ல் பிளாஸே வெற்றியால் இந்தியாவில் தாபிக்கப்பட்ட ஆங்கிலேய இராச்சியம் ஓர் சதாப்தத்தில், அதாவது இந்த 1857-ல், முடிவெய்துமென்ற ஓர் தீர்க்க தரிசனமும் அநேகரால் விசுவசிக்கப்பட்டது. சிப்பாசிமாருள்ளும் கலகக்குறிப்புகள்

காலத்துக்குக்காலங் காணப்பட்டுவந்திருக்கின்றன. இம்முறை மேற்கூறிய பொதுக்காரணங்களைவிட, விசேஷமாய் மாட்டுக்கொழுப்பும் பன்றிக்கொழுப்புஞ் சேர்த்துச்செய்யப்பட்ட துப்பாக்கிமருந்துகளைப் பிரயோகிக்கும்படி ஆங்கிலேயர் சிப்பாசிமாருக்குக் கட்டளையிட்டமையே கலக ஆரம்பத்துக்கு உடன் காரணமாயிருந்தது. பசு ஹிந்துக்களால் (Hindus) அன்பாய் ஆதரிக்கப்படும் ஓர் மிருகமாதலாலும், பன்றி மகமதியரால் அருவருத்துத் தள்ளப்படுகிற ஓர் மிருகமாதலாலும், மேற்படி கட்டளையினால் ஹிந்துக்களும் மகமதியரும் ஆங்கிலேயரை வெறுத்தனர். தவிர, இவ்வித பிரமாணங்களைக்கொண்டு இந்தியரின் உள்ளத்தைப் பரிசோதித்து ஈற்றில் அவர்களைக் கிறிஸ்தவராக்கவும் ஓர் சட்டங்கொண்டுவரக்கூடுமென்று சிலர் அஞ்சினர். எனவே, மீறற், டெல்ஹி கோன்பூர், இலட்சுமணபுரி (Lucknow) ஆகிய இடங்களில் தொற்றுநோய் பரவினாற்போலுங் கலகம்பரவியது. மீறற்றில் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆங்கிலேயர் யாவரும் ஆராதனைக்குத் தேவாலயஞ்செல்ல, சிப்பாசிமார் அங்கிருந்த மறியற்காரரை விடுதலைசெய்தும், ஐரோப்பியர் ஆலயத்தினின்றும் திரும்பிவருகையில், அவர்களனைவரையும் ஆண்பெண் சிறுவரென்ற பேதமின்றிக் கொன்றனர். இந்தவிதமாகவே கோன்பூரிலும் ஐரோப்பியரனைவருங் கொல்லப்பட்டனர், மீறற்றை விட்டுஞ் சிப்பாசிமார் டெல்கிக்குச் சென்று நகரத்தைக் கைப்பற்றினர். லட்சுமணபுரியைச் சிப்பாசிமார் சூழ்ந்துகொண்டனர். டெல்ஹியில் யுத்தம் மும்முரமாய் நடைபெற நிக்கல்ஸன் என்னுஞ் சேனபதி (General Nicholson) பாஞ்சாலத்திலிருந்து அங்கு சென்று நகரத்தைப்பிடித்து மோகலிய அரசனையுங் கைதியாக்கினன். ஆனால் நிக்கல்ஸனும் இறந்தனன். பின்பு ஹவலக்கென்னுஞ் சேனபதி (General Havelock) கோன்பூருக்குச்சென்று அங்கு கலகத்தைத்தணித்து, அப்பால் இலட்சு

மணபுரிக்குச் சென்றனன். அங்கு சிப்பாசிகளின் முற்றிக்கை இரண்டுமாதம் வரையில் நீடிக்க, ஈற்றில் ஆங்கிலேயர் அவர்களை வென்றனர். அவ்வளவிற் கலகம் படிப்படியாகக் குறைந்தது. கலகக்காரர்மீது ஆங்கிலேயர் போதிய இரக்கங்காட்டியும் டல்ஹவுசிப் பிரபுவின் திறை அரசுகள் நழுவும் பிரமாணத்துக்குப் பதிலாக, புத்திரரில்லாத திறை அரசர் சுத்தபுத்திரருக்குப் பட்டஞ்சூட்டலாமென்னுஞ் சிலாக்கியங்களைக் கொடுத்தும் இந்தியரின் கொதித்தமனத்தைத் திருப்திசெய்தனர். அப்பால் இதுகாறும் ஆங்கிலேயவர்த்தக சங்கத்தாரால் நடத்தப்பட்டுவந்த இந்திய இராச்சியம் 1858-ல் ஆங்கிலேய பேரரசாங்கத்தின் நேராளுகைக்குட் கொண்டுவரப்பட்டது. அப்போ யாவராலும் புகழப்பெற்ற விக்ரோறியா இராணியார் ஓர் விளம்பரம் விடுத்தனர். அந்த விளம்பரத்தில், "நமதுவிருப்பம் யாதெனில், நமது பிரஜைகள் எந்தச்சாதியையும் வகுப்பையுஞ் சேர்ந்தவர்களாயிருப்பினும், அவர்கள் தங்கள் கல்வி, திறமை, குணம் முதலியவற்றிற்கு ஏற்றவாறு கூடுமான வரையில் உத்தியோகங்களில் தாராளமாயும் பட்சபாதமின்றியும் அமர்த்தப்படுவார்கள். சட்டத்தை நிர்ணயஞ்செய்யும்பொழுதும் பிரயோகிக்கும்பொழுதும் இந்தியப் பிரஜைகளின் பூர்வீக உரிமைகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள் ஆகிய இவை நன்குமதிக்கப்பெறும்" என்றும், "தேசமக்களின் க்ஷேமலாபமே நமதுபெலம்; தேசமக்களின் திருப்தியே நமதுஇரட்சை; தேசமக்களின் நன்றியறிவே நமக்குரிய வெகுமதி" என்றும் இன்னவாறு இராணியார் கூறியிருக்கின்றார். இந்தவிளம்பரம் இந்தியரைப் பூரண திருப்தியடையச் செய்தது.

## இந்தியாவும் சுய ஆட்சியும்.

இந்தியாதேச ஆட்சியை 1858-ம் வருஷத்தில் விக்ரோறியா மகாராணி கையேற்று, காலந்தோறும் விளம்பரங்களை விடுத்து, இந்தியரைப் பிரீதிப்படுத்தி இராச்சியஞ்செய்யமுயன்றும், இராசப் பிரதிகாவலராய் (Viceroys) இந்தியாவுக்கனுப்பப்பட்டோரும் இந்தியாவிற் பிரதாண

உத்தியோக ஸ்தானங்களிலமர்ந்திருந்த ஆங்கில இந்திய ரெனப்படும் (The Anglo-Indians) வகுப்பினரும் இராணியின் மேன்மையான நோக்கங்களைப் பிரதிகூலமாக்கி, இந்தியரை அடக்கியாளவும், தங்கள் சாதியாரின் வியாபார விருத்தி, அதிகார ஆதிக்கம், மற்றுஞ் சுயக்ஷேமலாபங்களையே கருதவுந் தொடங்கினர். 1887-ல் விக்டோரியா மகாராணிக்கு இந்திய சக்ரவர்த்தினி (Empress of India) என்ற பட்டமேற்பட்டபோது, டெல்ஹிமாநகரில் இந்திய தேசமன்னரையுந் தேசமக்களையுங் கூட்டிவைத்து, ஒரு டர்பார் (Durbar) சபை நடத்தப்பட்டது. அச்சமையத்தில் சபைத்தலைவராயிருந்த பிரதிகாவலர் லிற்றன் பிரபு (Lord Lytton) இராணியனுப்பிய தந்தி விளம்பரத்தை வாசித்துக்காட்டி, தானும் பின்வருமாறு கூறினர்; "தேசமக்களே! நீங்கள் எந்தச் சாதியையும் வகுப்பையும் சேர்ந்தவர்களாயினுஞ்சரி, உங்களுடைய தேச ஆட்சியில் உங்களது திறமைக்கு ஏற்றவண்ணம் ஆங்கிலேயருக்குச்சரியான பங்கும் பதவியும் உங்களுக்கு உண்டென்பது நிச்சயம். இந்த உரிமையானது மிகவும்மேலான சத்தியத்தை ஆதாரமாகக்கொண்டுள்ளதாகும்" என்பதே. பின்பு எழாவது எட்வேட் அரசர் 1908-ம்ஆண்டிலும், அதற்குப்பின்னர் 1911-ம் ஆண்டிலும், டெல்ஹிமாநகரில் முடிசூடிக்கொள்வதற்காக நமது ஜோர்ஜ் சக்ரவர்த்தி இந்தியாவுக்கு வந்தகாலத்திலும் அநேக விபரங்களடங்கிய விளம்பரங்கள் அறிக்கையிடப்பட்டன. இந்த விளம்பரங்களின்படி தேச பரிபாலனம் நடைபெறவில்லையென்பது வெளிப்படை.

மேற்போந்த லிற்றன்பிரபு இந்தியாவை ஆளுகை செய்த காலத்திலேதான் இந்தியதேச மக்களின் அதிருப்தி வளரத் தலைப்பட்டது. அப்போ சனத்தலைவர் தாம் வாளாவிருந்தால் காரியம் இன்னும் சீர்கேடாய்ப் போய்விடுமென்று சிந்தனைசெய்து, வங்காளம், பம்பாய், சென்னை ஆதியாமிடங்களில் ஜனசபைகளைக் கூட்டி, இந்தியருக்குள்ள கஷ்ட நஷ்டங்களை ஆராய்ந்து அவற்றை அதிகாரிகளுக்கு அவ்வப்போது எடுத்துக் காட்டவேண்டுமென்று

தீர்மானித்தனர். இப்படியிருக்கும்பொழுது தயாளசிந்தை யும் பெருந்தன்மையும்வாய்ந்த றிப்பன்பிரவு (Lord Ripon) இராசப் பிரதிகாவலராக இந்தியாவுக்கு வந்தார். அது காரணமாக அரசியல் விஷயங்களில் இந்தியருக்கு அதிகமான ஊக்கமுதித்தது. தவிர, இந்தியாவின் ஆப்த நண்பர்களான ஆங்கிலேயரில் இந்தியரால் என்றும் நன்றி பாராட்டப்படத்தக்க ஏ. ஒ. ஹியூம் (A. O. Hume) என்பவர் இந்திய சனசமூக பிரமுகர்களுக்கு வலதுகைபோலிருந்து வேண்டிய யோசனைகள் சொல்லிவந்தார். அவரதும் தாதாபாய் நௌரோஜி முதலியோரினதும் இடையறு முயற்சிகளால், வங்காளம், பம்பாய், சென்னைமுதலிய இடங்களிலேற்பட்டிருந்த சங்கங்களின் பிரதான அங்கத்தவர்கள் சிலர் 1884-ல் சென்னைக்குவந்து, இந்தியரின் சொத்துச் சுதந்திரங்களுக்கு யாதொரு பங்கமும் நேரிடாமற் காத்துக் கொள்ளவேண்டுமானால், இந்தியதேசமக்கள் மகாசபை (The Indian National Congress) யொன்று அவசியந் தாபிக்கப்படவேண்டுமென்றும், அதன் மூலமாக அரசியற் குறைகளை அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டி, அவற்றை நிவிர்த்திபண்ணுவதற்கான வழிவகைகளைத் தேடவேண்டுமென்றுந் தீர்மானித்தனர். அத்தீர்மானப்படி 1885-ம்ஆண்டு டிஸம்பர் மாதம் 27-ந் தேதியன்று முதன் முதல் இந்தியதேசமக்கள் மகாநாடு கூடிற்று. அக்காலந்தொட்டு இன்றுவரை அந்த மகாசபை வருஷாவருஷம் நடைபெற்று வருகிறது. மகாசபைத் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் அதிகாரிகளும் சில ஆங்கிலப் பாராளுமன்றத் தங்கத்தவருங் கவனிக்கத் தொடங்கினர். மகாசபையும் அதி பிரஸ்தாபமாகி, உன்னதமாக வளர்ந்து வந்தது. முஸ்லீம் லீக் (Muslim League) என்னும் மகமதிய ஐக்கியசபையும் 1913-ம் ஆண்டில் மகாசபையையொட்டிக் காரியங்களை நிருவகிக்கத் தொடங்கியது. இருசபைகளும் 1916-ல் பின்னரும் உறுதியாக ஐக்கியப்பட்டன. இந்திய மகாசபையின் முயற்சிகளால் 1892லும், 1910லும், 1922லும் இந்திய சட்டசபைகளும், அதிகாரிகளின் அரசியல் இலக்குகளும் மாற்றமடைந்து திருத்தப்படலாயின. கடைசியாக 1916-ம்

ஆண்டிலே இலட்சுமணபுரியிற்கூடிய மகாசபையிலே, "இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியின் இலட்சியம் இன்னதுதான்" என்று பிரித்தானிய மந்திரிகள் நிர்ணயித்துவிடவேண்டுமென்று ஓர் தீர்மானமேற்பட்டது. அதன் பயனாக, 1917-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 20-ந் திகதி, "இந்தியாவிற் ஜனப்பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதே பிரிட்டிஷ் ஆட்சியின் நோக்கம்" என்பதாக ஓர் அறிக்கை வெளிவந்தது. இந்த அறிக்கையை மதித்து இந்திய இராச்சிய பரிபாலனம் நடக்கும்வண்ணம், அநேக திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அத்திருத்தங்களை ஆங்கிலேய பாராளுமன்றத்தின் இந்தியா மந்திரியாயிருந்து காலஞ்சென்றுபோன மேஸ் மாண்டேகு (Mr. Montagu) என்பவரும், இராசப் பிரதிகாவலராயிருந்த செல்ம்ஸ் வோர்டுப் பிரபு (Lord Chelmsford) என்பவரும் திட்டஞ்செய்தனர். அவற்றால் இந்திய மாகாண இராச்சியமுறைகள் ஓரளவில் சுயராச்சிய முறைகளை அண்டி நிறுவப்பெற்றன கல்வி, கைத்தொழில், கமத்தொழில், நகரசங்க ஆட்சிமுறைகள் ஆகிய இத்துறைகளில் இந்தியருக்குப் பூரண பொறுப்பாட்சிச் சுதந்திரங் கொடுக்கப் பட்டிருக்கிறது. மாகாண பரிபாலனத்தை விட, இந்திய பேரரசாங்க பரிபாலனமுறைகளுந் திருத்தப்பட்டன. சட்டசபைக்குப் பதிலாக, நூறு அங்கத்தவர்களைக்கொண்ட ஓர் சட்டசங்கமும் (The Legislative Assembly), ஐம்பது அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் இராசாங்க சபையும் (The Council of State) ஏற்பட்டிருக்கின்றன. இவற்றில் சட்டசங்கத்தில் மூன்றிலிருபங்குபேர் சனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் இராசாங்கசபையில் 21பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவராயுமிருக்கின்றனர். இராசாங்கசபையே பிரதான சபையாதலாலும் அதில் உத்தியோகப் பற்றுள்ளோர் கூடினதொகையினராதலாலும் மேற்படி திருத்தங்களைப் போதாதென, பூரண சுய ஆட்சியை இலக்காகக்கொண்டு, ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், ஹர்தல், கதர்நெசவு முதலிய துறைகளைக் காலந்தோறும் வகுத்து, தேசாபிமானத்தையும் தேச கைங்கரியத்தையும் விருத்திசெய்து, அதிகாரிக

ளுடன் வாதாடிவருகின்றனர் இந்திய மேதாவிகள். சுய ராச்சியக் கட்சியாரே இப்போ முதன்மையடைந்து வருகின்றனர். தற்போது ஆங்கில பாராளுமன்றத்தில், "இந்திய பிரசாதிபத்திய மனு" (The Commonwealth Bill of India) வென ஓர் பத்திரம் சீக்கிரத்திற் கொண்டுவரப்படக்கூடிய முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்தியா சீக்கிரத்தில் பூரண சுய ஆட்சிப்பொறுப்பை யடையுமென்று பலருங் கருதுகின்றனர். ஆங்கில பாராளுமன்றத்தின் தொழிலாளர் கட்சியாரும் (The Labourites) அதற்குச் சார்பாம். ஆதலால் இந்தியாவுக்கு நற்காலம் உதிக்கும்போலும்.

## ஏனைய பிரித்தானிய ஆட்சிநாடுகள்.

### எகிப்து.

முப்பது வருடங்களுக்கு முன்னே எகிப்துதேசம் கேடிவ் (The Khedive) என்னும் சுதேச மகமதிய மன்னனால் இராச்சிய பரிபாலனஞ் செய்யப்பட்டுவந்தது. அவன் ஆங்கிலேயரிடமும் பிரான்சியரிடமுங் கடன்பட்டதுமன்றித் தேசத்தையு மதிகேவலமாய் அரசுபுரிந்து வந்தனன். அதனால் அங்குவசித்த ஆங்கிலப் பிரசைகள் அரசனுக்குக் கடனாகக்கொடுத்த பணத்தையிழந்து மோசம் போகாவண்ணம், ஆங்கிலேயர் 1876-ம் ஆண்டு சில முயற்சிகள் செய்தனர். அவற்றால் எகிப்தியர் 1882-ல் ஓர் கலகமுண்டாக்கி அங்குவசித்த ஐரோப்பியரனைவரையுங் கொன்றனர். பின்னர் ஆங்கிலேயர் யுத்தத்துக்குச்சென்று அராபி பாஷாவைக் கைதியாக்கி, கெயிரோ நகரையும் பிடித்தனர். அன்றுதொடங்கி கடந்த ஐரோப்பிய மகாயுத்தம் வரைக்கும் எகிப்தை ஆங்கிலேயரே அத்தேச மன்னனின் பேரால் அவனது மந்திரிமாரின் உதவியையுங் கொண்டு ஆளுகை செய்துவந்தனர். ஆங்கிலேயரின் பாதுகாப்பிலும் எகிப்திலநேக கலகங்கள்விளைந்தன. எகிப்துக்குத் தெற்கே சூடான்

(The Sudan) என்னுமிடத்தில் மஹதீ (The Mahdi) என்னுமோர் மகமதியசமய குருவின் தலைமையில் அங்கு வசித்த அராபியர் கலகஞ் செய்து அந்நியரைத் தம் நாட்டிலிருந்தும் அகற்ற முயன்றனர். ஆங்கிலேய சேனுபதி கோடன் (General Gordan) என்பவர் ஒருசேனையுடனுஞ் சூடானுக்குச்சென்று ஆவேசங்கொண்டெழுந்த சமயபக்தரான அராபியரை (The Derwishes) அடக்கி இங்கிலந்திலிருந்து உதவியை எதிர்பார்த்துக்கொண்டு நின்றனர். உதவிவருவதற்கு இரண்டுநாட்களுக்கு முன்னரே கோடன் இறந்தனன் (1885). பின்னர் பிரித்தானியருடைய உதவியுடன் எகிப்திய பட்டாளமுமொன்றேற்படுத்தப்பட்டு 1898-ல் அராபியர் கிச்சினர்ப்பிரபுவால் (Lord Kitchener) ஓம்டேர்மான் (Omdurman) என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர். அப்பால் காட்டூம் (Khartum) பிடிபட்டது. அதன்பின்னர் எகிப்தும் சூடானும் ஆங்கில எகிப்திய ஆட்சியிலிருந்து வந்தன. 1914-ல் துருக்கிக்கு எகிப்தின் மீதிருந்த ஆஞ்ஞையுங் கெட்டது. 1922-ல் ஆங்கிலேயர் எகிப்தை அவ்வூர் மன்னன்பொறுப்பில் விட்டு, எகிப்தியருக்குப் பொறுப்பாட்சியுமுதவினர்.

## பிரித்தானிய கிழக்காபிரிக்காவும் மேற்காபிரிக்காவும்.

ஆபிரிக்காவில் ஆங்கிலேயருக்கு இதுகாறுங் கூறப்பட்ட நாடுகளைவிட, கிழக்கே பிரித்தானிய கிழக்காபிரிக்காவும், யுகந்தாவும் (Uganda), மேற்கே நைஜீறியா (Nigeria), கோல்ட் கோஸ்ற் (The Gold Coast), ஸீரு லியோனி (Sierra Leone), காம்பியா (Gampia), ஆகிய நாடுகளுமுண்டு. இவையெல்லாம் உஷ்ணவலயத்திலிருக்கின்றன. ஒருகாலம் இவை சிறந்த செழிப்பான நாடுகளாகி, பிரித்தானிய சக்ராதிபத்தியத்தின் ஏனைய சீர்திருந்திய நாடுகளை

நிகர்க்கும். இந்நாடுகளில் ஆங்கிலேயர் ஆபிரிக்கரின் நரமாமி சம் புசித்தல் முதலிய அநாகரீக, குரூர, பழக்க வழக்கங்களைக் கண்டித்து, கல்விக் கழகங்களை ஏற்படுத்தியும் புகைரதப் பாதைகளைத் திறந்தும் தங்கள் சீர்திருத்தங்களையும் இராச்சிய முறைகளையும் ஒருவாறு நிலைபெறச்செய்து வருகிறார்கள். இவ்விடங்களில் பொன், செம்பு, றப்பர் முதலிய வியாபாரப் பொருள்கள் ஏராளமாகவுள.

## மேற்கிந்திய கிழக்கிந்திய தீவுகள்.

பிரித்தானிய சக்ராதிபத்திய வெற்றிக்காலத்தில் முதன் முதலாகப் பிடிக்கப்பட்ட நாடுகளில் மேற்கிந்திய தீவுகளுஞ் சிலவே. இப்போ ஆங்கில ஆஞ்ஞையின் கீழுள்ள பிரதான மேற்கிந்திய தீவுகள் ஜமேய்க்கா, பார்படோஸ், பஹாமாஸ், ரிறினிடாட் ஆகிய இவைகளே. இவற்றிற்கணித்தாய் அமெரிக்காவில் பிரித்தானிய கையனு (Guiana) வும், ஹொன்டுரஸுமுள. மேற்கூறிய எல்லா இடங்களிலும் ஏராளமான றப்பரும், மலைவேம்பும், கருப்பந்தோட்டமும், புகையிலைத் தோட்டங்களும், சீனிச்செய்கையுமுள.

கிழக்கிந்திய தீவுகளைச் சேர்ந்தவற்றுள் இலங்கையும், தொடுவாய் இராச்சியப்பகுதிகளும், பிரித்தானிய மலாய நாடுகளும், போணியோ தீவுகளும், ஹொங்கொங்கும் பிரதானமானவை. இத்தீவுகளும் றப்பருக்கும் சில லோகவகைகளுக்குஞ் சிறந்தன.

உலகத்தின் நாலுபகுதிகளிலும் ஆங்காங்கு இடக்கின்ற இத்தீவுகளையெல்லாம் ஆங்கிலேயர் ஓர்குடைக்கீழ் அக்கமின்றி அரசாளுவதற்கு அவர்கள் கடற்பட்டாளமும் யுத்தக்கப்பல்களுமே ஆதாரமாயிருக்கின்றன. அவர்கள் வேண்டிய வேண்டிய இடஙகளிலெல்லாம் இராணுவ ஸ்தானங்களையும் யுத்தக்கப்பற் றுறைகளையும் வகுத்து அரண்செய்திருக்கின்றனர். ஆகவே ஆங்கிலேயரின் ஆதிக்கம் சமுத்திர ஆட்சியைப் பொறுத்ததாயிருக்கிறது.

நிற்க, மேற்கூறிய சில தீவுப்பகுதிகளிலும், பிரதான மாய்த் தென்னுபிரிக்காவிலும் ஐரோப்பிய தோட்டத் துரை மாரின்கீழ்க் கூலிவேலை செய்து சீவனங்கழிக்கச் சென்ற இந்தியச்சனங்கள் அவ்விடங்களில் சொத்துச் சுதந்திரமின்றித் தற்போது படுங் கஷ்டம் சொல்லுந் தரத்ததன்று. கூலிகளாயிருந்தோர் காலகதியில் வியாபாரிகளாய் மாறி ஐஸ்வரியவான்களாய் வந்து அவ்விடங்களிற் காணி பூமிகளைத் தேடிக் குடியேறிவிட்டால் ஐரோப்பியர் நெஞ்சம் அழுக்காறடைந்து புண்ணுகின்றது. ஆதலால் ஐரோப்பியர் நியாயப்பிரமாணங்களை உண்டாக்கி அவர்களை அநாவசிய கஷ்ட நிஷ்டூரங்களுக்காளாக்குகின்றனர். இந்தியா சுயராச்சியத்துக்கு வாதாடுவதற்கு இதுவுமோர் நியாயமே.

## ஐரோப்பிய மகாயுத்தம் (1914—1919)
## (The Great European War.)

ஜேர்மனியின் பல பிரிவுகளுக்கும் அவுஸ்திரிய அரசனே சக்ரவர்த்தியாயிருந்து வந்தான். ஆனல் 1866க்கும் 1870க்குமிடையில் பிஸ்மாக் (Bismark) கென்னும் ஜேர்மனிய மேதாவி தனது இடையருமுயற்சிகளால் ஜேர்மனியின் பலபாகங்களையும் ஒருங்குதிரட்டி, டேனியரையும், அவுஸ்திரியரையும், பிரான்சியரையும் முறையே வேறுவேருன மூன்றுயுத்தங்களில் தோற்கடித்து, அவர்கள் நாடுகளிற் சிலவற்றையும் அபகரித்து, ஜேர்மனிய பிரிவுகளுக்கெல்லாம் பிறஷியாவை முதன்மையாகக் கொண்டு, அவ்வூரரசனையே சக்ரவர்த்தியாகவும் வரச்செய்தனன். அக்காலந்தொட்டு மேற்போந்த மகாயுத்தம் முடியும்வரையும் ஜேர்மனியபிரதானிகள், நீதி, சுதந்திரம், இராசபட்சமாகிய இவைகளில் ஒரு இராச்சியத்தின் வலிமை தங்கியிருக்கவில்லை யென்றும், பிரஜைகளுக்குக் கட்டாயப் பிரமாணத்தாற் போர்த்தொழிலைப் பழக்கி அனைவரையும் அரசனுக்கமைந்த சேனைகளாக்குவதிலேயே இராச்சிய வலிமை சிறக்குந் தன்மை தங்கியிருக்கிறதென்றும் அபிப்பிராயங் கொண்டிருந்தனர். அதன்படி ஜேர்மனியர் அடுத்த 30வருடங்கட்குத் தங்கள் சேனைகளையும் யுத்தக்கருவிகளையும் அபிவிருத்திசெய்து, ஈற்றில் அட

ங்கா யுத்தச் செருக்கடைந்து, ஐரோப்பாவில் தமது முதன்மையை நாட்ட வழிபார்த்தனர். அதற்காக 1882ல் தங்களோடு அவுஸ்திரியரையும் இத்தாலியரையுஞ் சேர்த்து ஓர் உடன்படிக்கையையுஞ் (The Tripple Alliance) செய்துகொண்டனர். ஜேர்மனியரின் நோக்கங்களையறிந்த ருஷியரும் பிரான்சியரும் அவர்களால் தங்களுக்கு வரக்கூடிய மோசங்களை நினைந்து, தாங்களுமோர் உடன்படிக்கை (The Entente)செய்தனர். ஆங்கிலேயரும், பிரான்சியரதும் ருஷியரதும் உடன்படிக்கையை அநுவதித்தும் அங்கீகரித்தும் நடக்கலானுர். இவ்விதமாக ஐரோப்பாவில் இருபெருங் கட்சிகள் எலவே கங்கணங்கட்டி நின்றமையை யாவருமறிவர்.

1900ம் ஆண்டின்பின் ஜேர்மனியர் இருமுறை யுத்தத்துக்காரம்பித்தனர். ஆனுல் ஆங்கிலேயரின் கடலாட்சித் திறனுக்கஞ்சினர். எனினும் 1914ல் நிகழ்ந்த சிலவிவகாரங்கள் அவர்கள் மிகக் கரிசனையோடும் அவாவி எதிர்பார்த்திருந்த யுத்தத்தை வருவித்துவிட்டன. அவுஸ்திரியா, போல்கன் குடா நாட்டு (The Balkan Peninsula) க் கூடாக ஓர் வழிதேடி, ஈஜியன் கடலில் (Aegean Sea) ஓர் பாகத்தை யுத்தக்கப்பற்றுறையாக்க வெண்ணியது. அந்தஎண்ணத்தை ஜேர்மனியர் மிகவுங் கிளர்ச்சிப்பண்ணி விட்டனர். ஆனுல் அதற்குச் சேவியர் (Serbians) தடையாயிருந்தனர். 1914ம் ஆண்டு யூன்மாதம் 24ந் திகதி அவுஸ்திரியபட்டத்து இளவரசர் தனது பாரியுடனும் போஸ்னியா (Bosnia) வுக்கு ஊர்விசாரணைத் தரிசனப்பொருட்டுச் சென்றபோது இரு சேவியராற் கொல்லப்பட்டார். அதற்காக அவுஸ்திரிய அரசாங்கத்தார் சுதந்திரமுள்ள இராசாங்கத்தார் எவர்க்கும் ஒவ்வாத ஓர் நட்ட ஈட்டைச் சேவியரிடமிருந்துங் கேட்கலானுர். யுத்தப்பிரியராய் இறுமாப்படைந்துநின்ற ஜேர்மனியரும் அவுஸ்திரியரைத் தூண்டிக்கொண்டு நின்றனர். எனவே அவுஸ்திரியர் ஜூலை மாதம் 28-ந் திகதி (1914) ஜேவியர்மீது யுத்தத்துக்கேகினர். ருஷியர் தமது சாதியாரான சேவியருக்குதவிசெய்ய முன்வந்தனர். ஜேர்மனியர் அவுஸ்திரியரைச் சார்ந்தனர். பிரான்சியர் ருஷியருடன்

செய்துகொண்ட உடன்படிக்கைப்படி யுத்தத்திற் பங்குப ற்றினர். நாடுகளைப்பிடித்து ஐரோப்பாவில் முதன்மைய டையத் தருணம் பார்த்திருந்த ஜேர்மனியர், பிரான்சியா ரைத் தாக்கி அவர்கள் நாட்டைக் கைப்பற்றுவதற்கு இது தான் வாய்த்த சமையமென்றுகண்டு பெல்ஜியத்தின் நடு வுநிலைமையையும் மதியாது பெல்ஜியத்துக்கூடாகப் பிரான் சுக்குப் படையெடுத்துச்செல்ல ஆரம்பித்தனர். பெல்ஜியர் அதைத்தடுத்தனர். ஆனால் ஜேர்மனியர் அத்தடையைக் கிஞ்சித்தும் மதித்திலர். ஆதலால் முன்போலப் பெல்ஜிய ரைக் காக்கும்பொருட்டு ஆங்கிலேயரும் யுத்தத்திலீடுபட்ட னர் (ஆகஸ்டு 4-ந் திகதி, 1914).

பெல்ஜியருடன் யுத்தம் தொடங்கிச் சிலவாரங்களுள் பெல்ஜியம் முழுவதும் ஜேர்மனியர் கைவசப்பட்டது. அப் பால் ஜேர்மனியர் பாரிஸ்நகரத்தை இதோ பிடித்துவிடுவார் களென்ற சத்தம் பிறந்தது. ஆனால் மாண்நதியில் நடந்த யுத்தத்தில் (The Battle of the Marne) பிரான்சியரும் ஆங்கிலேயரும் வெற்றியடைந்து ஜேர்மனியரை அப்பாற் செல்லவிடாது தடுத்துநின்றனர். எனவே ஜேர்மனியர் மேற்கரங்கத்தில் தங்கள் வெற்றிவிஜயத்தை அவ்வளவில் நிறுத்தி, கிழக்கரங்கத்தையடைந்து ரூஷியரைத் தாக்கினர். இதற்கிடையில் துருக்கியரும் பல்கேரியரும் ஜேர்மனி யரைச் சேர்ந்தனர். சேர, ஆங்கிலேயர் இந்தியா எகிப்து முதலிய நாடுகளையிட்டுச் சிறுகத் திகிலடைந்து டாட னேல்ஸ் விஜயத்தில் (The Dardanelles Expedition) பிர வேசித்தனர். அதில் அதிக கஷ்டமடைந்து ஈற்றில் அதைக் கைவிட்டனர். இத்தாலி ஜேர்மனியரிலிருந்தும் பிரிந்து பிரான்சியர் ஆங்கிலேயர் முதலாய ஐக்கிய பக்கத்தாரை (The Allies)ச் சார்ந்தது. அதனால் இத்தாலி நாட்டுப்பக் கங்களிலும் ஜேர்மனியர் யுத்தத்துக்குச் செல்வாராயினர், சென்று அங்குஞ் செயமடைந்து வந்தனர். இந்த வித மாக ஜேர்மனியரின் வெற்றியும் வீரச் செருக்கும் நாற் புறங்களிலும் நாட்டப்பெற்றன(1917).

மேற்போந்தவிதமாக யுத்தம் நிகழ்ந்துவர, ஜேர்மனியரின் யுத்த அடுக்கணிகளும் உணவு பதார்த்தப் போக்குவரவுகளும் குறைந்துவந்தன. ஆங்கிலேயரின் கடலாணைத் திறனைக் கெடுத்துவிட்டால் ஜேர்மனியர் தாம் சீக்கிரம் யுத்தத்தை முடித்து வெற்றியடையலாமென்றெண்ணி, கப்பல்களைத்துளைத்து அமிழ்த்தும் 'சப்மறீன்' (Submarine) என்னும் இயந்திரவள்ளங்களை ஆங்கிலேய கப்பல்கள் செல்லும் பாதைகளிலெல்லாம் வைத்துப் பிரயோகிக்கத் தொடங்கினர். சப்மறீன்வள்ளங்களால் அமெரிக்க கப்பல்களுக்கும் அமெரிக்கவியாபாரப் போக்குவரவுகளுக்கும் அநேக தீங்குகள் விளைந்தன. அதனால் அமெரிக்காவும் ஜேர்மனிக்கு மாறாக யுத்தத்தில் ஈடுபட்டது (1917). அமெரிக்கர் யுத்தகளத்தை பல்லாயிரம் மைல் தூரத்திலிருந்தும் வந்தடையமுன் ஜேர்மனியர் ஓர் கைபார்த்துவிடவெண்ணித் தங்களாலியன்றமட்டும் மேற்காங்கத்திற் போர்புரிந்தனர். ஆனால் அவர்களால் ஒன்றும் ஆகவில்லை. அவ்வளவில் ஜேர்மனியர் இளைத்துப்போயினர். படிப்படியாக ஜேர்மனியில் சனங்களுள் அதிதிருப்தியீனமும் கலகப்பிரியமுங் காணப்பட்டன. அப்பால் அமெரிக்கரும் யுத்தகளத்தை யடைந்துவிட்டனர். உடனே பிரான்சும், பிளான்டேஷும், பெல்ஜியமும் ஐக்கியப் பகுதியாரால் பிடிக்கப்பட்டன. பின்னர் ஜேர்மனியில் தேசகலகமுண்டாயது. சக்ரவர்த்தி கைஸரும் நாட்டைவிட்டு ஒல்லாந்துதேசஞ்சென்று சரண்புகுந்தனர். எனவே யுத்தம் நிறுத்தப்பட்டது. 1919ல் நடந்த சமாதானத்தால் ஜேர்மனியர் யுத்தச்செருக்குச் சிதைக்கப்பட்டவராயும் இனிமேல் யுத்தத்தில் தலைகாட்டாதபடி வெற்றிச் சிறகுகள் ஒடிக்கப் பட்டவராயும் அடக்கப் பட்டனர். அந்தோ! ஜேர்மனிக்கும் இக்கதி வரலாச்சே!! அளவுக்கு மிஞ்சிய ஆசை கோடி தரித்திரம்.

## பிரித்தானிய பாராளுமன்றத்தின் தற்கால நிலை.
## (The British Parliament today.)

பிரித்தானிய பாராளுமன்றம் பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபையென இரு பெரும் உறுப்புக்களை யடக்கி

யுள்ளதென முன்னரே கூறியிருக்கின்றோம். அவற்றுள் பிரபுக்கள்சபை தற்போது அறுநூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை யுடையதெனலாம். அவர்களிற் பெரும்பாலார் அச்சபைக்கு அங்கத்தவராவதற்கு, பிதாவின்பின் மகனென்றாற்போல, பரம்பரை யுரிமையுடையர். இந்த உரிமை அவர்களுக்கு ஆதியிலே அரசரால் அவர்களின் விசேஷ, இராச, இராசாங்க சேவைகளுக்காகக் கொடுக்கப்பட்டது. சில அங்கத்தவர் பிரதம குருவகுப்பைச் சேர்ந்தவர். வேறு சிலர் ஸ்கொற்றிய பிரபுக்களால் காலத்துக்குக்காலந் தெரிந்தனுப்பப்படுவோராவர். இச்சபை கூடுங்காலங்களில் மிகச் சிலரே சபைக்குச் சமுகமளிப்பர்.

தற்காலப் பிரதிநிதிகள் சபையில் 707 அங்கத்தவருளர். இவர்கள் ஆண் பெண் என்னும் இருபகுப்பினராலும் இங்கிலந்து, உவேல்ஸ், ஸ்கொத்திலந்தென்னு மிடங்களின் பலபாகங்களிலிருந்துந் தெரிந்தெடுக்கப்பட்ட சனப்பிரதிநிதிகளாவர். (அயர்லந்து சென்ற மகாயுத்தத்தின்பின் சுய ஆட்சியைப்பெற்று, பிரித்தானிய பேரரசாங்கத்திலிருந்தும் பிரிந்துகொண்டது). இப்பிரதிநிதிகளுள் பூர்வகட்சியார் (Conservatives), உதாரகட்சியார் (Liberals), தொழிலாளர் கட்சியார் (Labourites) என மூன்றுவகுப்பாருளர். இவர்கள் ஐந்துவருஷத்துக்கொருமுறை, அன்றேல் வேறுநியாயம்பற்றி அதற்குமுன் பாராளுமன்றம் குலைக்கப்படுங் காலங்களில், சனங்களால் தெரியப்படுவர். இந்தச்சபையில் எந்தக்கட்சி மிகப்பலமுடையதாயுங் கூடிய தொகையினரை யுடையதாயுமிருக்கின்றதோ, அந்தக்கட்சியே இராசாங்கத்தை நடாத்தும். அக்கட்சித் தலைவரே பிரதம மந்திரியாவர். அவர் தன்னோடு ஒத்துழைக்கக்கூடிய ஏனைய மந்திரிமாரை வேறுவேறு இராசாங்க பகுதிகளுக்குத் தலைவராக நியமிப்பர். சிலகாலங்களில், விசேஷமாய் யுத்தகாலங்களில், ஏனைய கட்சிகளிலிருந்தும் மந்திரிமாரைத் தெரிவதுமுண்டு. மந்திரிமாருள் சில பிரதான அங்கத்தவரைக்கொண்டது "கபினெற்" (The Cabinet) அல்லது மந்திராலோசனை நிர்வாகசபையெனப்படும்.

ஓர் புதுச்சட்டத்தை உண்டாக்கும் பட்சத்தில் அச்சட்டவிஷயம் (The Bill) ஓர்பத்திரத்திலெழுதப்பட்டு, சபையின் உத்தரவோடு அச்சிடப்பட்டு, அதைப் பிரேரிக்க உத்தரவுபெற்ற அங்கத்தவரால் சபையின்கண் முதல் வாசிக்கப்படும். பின்னர் இரண்டாம்முறை வாசிக்கப்படும்போது அச்சட்டத்தின் பிரதான நோக்கத்தைச் சபையார் கூடினதொகையினரின் வாக்கைக் (Vote) கொண்டு நிச்சயிப்பர். அப்பால் ஓர் நிர்வாகசபைகூடி, சட்டவிஷயத்தைக் கூறுகூறாக எடுத்துத் தர்க்கித்து, சட்டவாசகத்தைப் பூர்த்தியாக்கும். திரும்ப மூன்றாம்முறையும் அச்சட்டவிஷயம் வாசிக்கப்படும். மேற்படி சட்டவிஷயம் பாராளுமன்றத்தின் இருசபைகளுள் எச்சபையிலாவது முதன்முதற்கொண்டுவரப்படலாம். ஓர் சட்டப்பத்திரம் இருசபைகளிலும் மும்முறை வாசிக்கப்பட்டு, அரசரின் அநுமதிபெற்று, அவர் கையொப்பத்துடன் சட்டமாகவெளிவரும். சட்டவிஷயங்கள் இருசபையாராலுங் குறைந்தபட்சம் இவ்விரண்டுமுறை அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும், அதன் பின்னர்தான் அவை சட்டமாகக் கொள்ளப்படுமென்றுமோர் நெடுங்காலவழக்கமிருந்தது. ஆனால் சிலவருடங்களுக்குமுன்னே, பிரதிநிதிகள் சபையாரால் மாத்திரம் சட்டவிஷயங்கள் இருமுறை அங்கீகரிக்கப்பெற்றால் அவை சட்டமாகுமென்ற பிரமாணங் கொண்டுவரப்பட்டது. அப்போ பிரபுக்கள் சபையை முற்றாயொழித்துவிடவும் ஓர் கிளர்ச்சியிருந்தது. இப்போ பிரபுக்கள் சபையாரின் அதிகாரம் சில விஷயங்களில் பிரதிநி சபையாருக்கு எச்சரிக்கைபண்ணக்கூடிய தன்மைமட்டுமே. ஆகவே சனங்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகளுக்கே சர்வதிகாரமுமுண்டு. அரசரும் அவர்கள் விருப்பத்தைக் கைக்கொள்ளவேண்டியவர்களாக வந்துவிட்டார்கள். ஆதலால் பிரித்தானிய அரசரின் அதிகாரமும் வரையறுக்கப்பட்டுள்ளது.

| ஹனவீரிய அரசர் | | அரசாண்ட காலம். | |
|---|---|---|---|
| முதலாம்ஜோர்ஜ் | .... | 1714—1727 | (13௵) |
| இரண்டாம் ஜோர்ஜ் | .... | 1727—1760 | (83௵) |
| மூன்றாம் ஜோர்ஜ் | ... | 1760—1820 | (60௵) |
| நாலாம் ஜோர்ஜ் | .... | 1820—1830 | (10௵) |
| நாலாம்உவில்லியம் | .... | 1830—1837 | ( 7௵) |
| விக்ரோறியா இராணி | ... | 1837—1901 | (64௵) |
| ஏழாம் எட்வேட் | .... | 1901—1910 | ( 9௵) |
| ஐந்தாம் ஜோர்ஜ் | .... | 1910— | |

## ஹனவீரிய அரசர் பரம்பரை.

முதலாம் ஜோர்ஜ்
|
இரண்டாம் ஜோர்ஜ்
|
விறெடெறிக்
|
மூன்றாம் ஜோர்ஜ்
|
நாலாம் ஜோர்ஜ் — நாலாம் உவில்லியம் — எட்வேட்

எட்வேட்
|
விக்றோறியா இராணி
|
ஏழாம் எட்வேட்
|
ஐந்தாம் ஜோர்ஜ்